தர்மசக்கரம்

















ரக்தாக்ஷி ௵ ஆனி ௴ சக்கரம் 33 ஆரம் 6
ஸ்ரீ ராமகிருஷ்ண தபோவனம்
திருப்பராய்த்துறை-639 115 கிருச்சி ஜில்லா

திருநெல்வேலி ஜில்லா

பாபநாசத்தில் அந்தர்யோகம் - 21

20, 21, & 22-7-84

பொதியமலை அடிவாரத்தில் இருக்கும் பாபநாசம் க்ஷேத்திரத்தில் 1984ஆம் ஆண்டு ஜூலை மாதம் 20ஆம் தேதி வெள்ளி, 21ஆம் தேதி சனி, 22ஆம் தேதி ஞாயிறு ஆகிய மூன்று நாட்களிலும் கீழ்க்கண்ட வாழ்க்கை முறைப்படி திருப்பராய்த்துறை ஸ்ரீ ராமகிருஷ்ண தபோவனம் ஸ்ரீமத் சுவாமி நித்தியானந்தர் அவர்கள் தலைமையில் அந்தர்யோகம் நடைபெறும். அம்பாசமுத்திரம் ரயில்வே ஸ்டேஷனிலிருந்து ஆறு மைல் தூரத்தில் பாபநாசம் க்ஷேத்திரம் இருக்கிறது.

அந்தர்யோகத்தில் கலந்துகொள்ள விரும்பும் அன்பர்கள் நபர் ஒன்றுக்கு ரூ. 30-00 விதம், திருநெல்வேலி ஜில்லா, அம்பாசமுத்திரம், நூல் ஜவுளி வியாபாரம், திரு. Sv. Rm. A. நடராஜ முதலியார் அவர்களுக்கு மணியார்டர் மூலமோ, நேரிலோ செலுத்திப் பெயர்களைப் பதிவு செய்து, அனுமதிக் கார்டு பெற்றுக்கொள்ளவேண்டும். கலந்துகொள்ளாத அன்பர்களுக்குத் தொகை வாபஸ் செய்ய இயலாது. பதிவு செய்யப்பெற்றவர்களுக்குப் பதிலாக வேறு ஒருவர் எடுத்துக்கொள்ளப் படமாட்டார். பதிவு செய்து கொண்டவர்கள் அனைவரும் ஜூலை மாதம் 19ஆம் தேதி வியாழக் கிழமை மாலையே பாபநாசத்திற்கு வந்து சேரவேண்டும்.

உணவு வசதி வேண்டாதவர்கள் ரூ. 30-00 கட்டவேண்டியதில்லை. அந்தர்யோகக் கட்டுத்திட்டத்துக்குட்பட்டு அந்தர்யோக நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ளலாம்.

தாய்மார்களும் இதில் கலந்துகொள்ளலாம். பன்னிரண்டு வயதுக்குக் கீழ்ப்பட்ட சிறுவர்களும், கைக்குழந்தைகளுடன் வரும் தாய்மார்களும், நடைமுறையைப் பின்பற்ற இயலாதவர்களும் இதில் சேர்த்துக்கொள்ளப்படமாட்டார்கள். தங்கள் சௌகரியத்திற்குத் தேவையான படுக்கை முதலியவற்றைத் தாங்களே கொண்டு வரவேண்டும்.

சென்னை, மதுரை, திருநெல்வேலி, நாகர்கோவில், திருக்குற்றாலம், தென்காசி, சங்கரன் கோவில் முதலிய இடங்களிலிருந்து பாபநாசத்திற்குப் போக பஸ்கள் கிடைக்கும். அம்பாசமுத்திரத்திலிருந்து பாபநாசத்திற்கு அடிக்கடி பஸ்கள் கிடைக்கும்.

வாழ்க்கை முறை

காலை	மணிமுதல்	மணிவரை	மாலை	மணிமுதல்	மணிவரை
துயில் எழுந்திருத்தல்	5-00		போஜனம், ஓய்வு	12-30	3-00
எல்லாரும் ஒன்றுகூடி நாமஜபம்	5-30	6-00	மாலை உபந்யாசம்	3-00	4-00
நீராடல் முதலியன	6-00	7-30	தனியாக வாசித்தல்	4-00	4-30
காலை தியானம்	7-30	8-00	பானம், உலாவல், நீராடல் முதலியன	4-30	6-15
சிற்றுண்டி	8-00	9-00	நாமஜபம்	6-15	6-45
காலை உபந்யாசம்	9-00	10-00	தியானம்	6-45	7-15
மௌனம், உழவாரப்பணி	10-00	11.00	இரவு போஜனம்	7-15	8-30
பஜனை	11-00	11-45	ஸத் சம்பாஷணை	8-30	9-30
கோவில் வழிபாடு	11-45	12-30			

குறிப்பு :— மூன்றாவது நாள் ஞாயிறு மாலை 5 மணியுடன் அந்தர்யோகம் முடிவுபெறும்.

காரியதரிசி — Sv. Rm. A. நடராஜ முதலியார், அம்பாசமுத்திரம்.

ஸதானந்த — ஸ்ரீ ராமகிருஷ்ண தபோவனம்

பாபநாசம் அந்தர்யோகத்தில் தபோவன வெளியீடுகள் விலைக்குக் கிடைக்கும்.

தர்ம சக்கரம்

மாத சஞ்சிகை

சக்கரம் 33 ‖ ரக்தாக்ஷி ௵ ஆனி ῾ ‖ ஆரம் 6

பொருளடக்கம்

வருட சந்தா: உள்நாடு	ரூ.	15-00	வெளிநாடு	ரூ.	45-00
தனி இதழ் ,,	ரூ.	1-50	,,	ரூ.	4-00

அந்தர்யோக விவரங்கள்

கோவை ஜில்லா—அன்னூரில் 17—6—84 ஞாயிற்றுக்கிழமை

இடம்: ஸ்ரீ ராமகிருஷ்ண ஆச்ரமம்

நேரம்: காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணிவரை

நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி நித்தியானந்தர்

வட ஆற்காடு ஜில்லா—வேலூரில் 17—6—84 ஞாயிற்றுக்கிழமை

இடம்: ஸ்ரீ ராமகிருஷ்ண ஆச்ரமம் (பாலாற்றங்கரை பழைய பாலம் அருகில்)

நேரம்: காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணிவரை

நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி குஹானந்தர்

உணவு வசதி: பகல் உணவிற்கு ரூ. 2-00 நேரில் செலுத்திச் சீட்டுப் பெற்றுக் கொள்ளலாம்.

திருநெல்வேலி ஜில்லா—கோவில்பட்டியில் 17—6—84 ஞாயிறு

இடம்: கடலையூர் ரோட்டிலுள்ள திருமுருகன் பப்ளிக்ஸ்கூல்

நேரம்: காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணிவரை

நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி அசலானந்தர்

அந்தர்யோக விவரங்கள் (தொடர்ச்சி)

தஞ்சை மாவட்டம்—திருவையாறில் 17—6—84 ஞாயிற்றுக்கிழமை

இடம்: ஸ்ரீ பஞ்சநதீஸ்வரர் கோயில் அம்பாள் சந்நிதி மண்டபம்
நேரம்: காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணிவரை
நடத்துபவர்: ஸ்ரீமந் சுவாமி போதானந்தர்

சென்னை—கோபாலபுரம் லாயிட்ஸ் சாலையில் 24—6—84 ஞாயிறு

இடம்: D. A. V. ஹையர் செகண்டரி பள்ளியில் (ஆரிய சமாஜத்தைச் சேர்ந்த தயானந்த வேதிக் ஸ்கூல்)
நேரம்: காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணிவரை
நடத்துபவர்: ஸ்ரீமந் சுவாமி நித்தியானந்தர்

திருநெல்வேலி ஜில்லா—தூத்துக்குடியில் 24—6—84 ஞாயிறு

இடம்: சிவன் கோவில் தெருவிலுள்ள சச்சிதானந்த சபை
நேரம்: காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணிவரை
நடத்துபவர்: ஸ்ரீமந் சுவாமி பரானந்தர்

மதுரை ஜில்லா—கம்பத்தில் 24—6—84 ஞாயிற்றுக்கிழமை

இடம்: முக்தி விநாயகர்பள்ளி ஆதிபராசக்தி வாரவழிபாட்டு மன்றம்
நேரம்: காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணிவரை
நடத்துபவர்: ஸ்ரீமந் சுவாமி போதானந்தர்
உணவு வசதி: பகல் உணவிற்கு ரூ. 1-50 நேரில் செலுத்திச் சீட்டுப் பெற்றுக்கொள்ளலாம்.

இராமநாதபுரம் ஜில்லா—விருதுநகரில் 1—7—84 ஞாயிற்றுக்கிழமை

இடம்: சமரச சன்மார்க்க சங்கம் (அறுபத்துமூவர் மடாலயம் முனிசிபல் ஆபீஸ் எதிரே)
நேரம்: காலை 10-00 மணி முதல் மாலை 4-30 மணிவரை
நடத்துபவர்: ஸ்ரீமந் சுவாமி நித்தியானந்தர்
உணவு வசதி: பகல் உணவிற்கு ரூ. 3-00 நேரில் செலுத்திச் சீட்டுப் பெற்றுக்கொள்ளலாம்.

பாண்டிச்சேரியில் 8—7—84 ஞாயிற்றுக்கிழமை

இடம்: சொசியெத்தே ப்ரோக்ரேஸிஸ்த் உயர்நிலைப்பள்ளி
நேரம்: காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணிவரை
நடத்துபவர்: ஸ்ரீமந் சுவாமி நித்தியானந்தர்

திருநெல்வேலி ஜில்லா—பாளையங்கோட்டையில் 8—7—84 ஞாயிறு

இடம்: மனகாவலம் பிள்ளை கல்யாண மண்டபம்
நேரம்: காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணிவரை
நடத்துபவர்: ஸ்ரீமந் சுவாமி அசலானந்தர்

மதுரை ஜில்லா—திருவேடகத்தில் 15—7—84 ஞாயிற்றுக்கிழமை

இடம்: ஸ்ரீ விவேகானந்த கல்லூரி
நேரம்: காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணிவரை
நடத்துபவர்: ஸ்ரீமந் சுவாமி சித்பவானந்தர் அவர்கள்
உணவு வசதி: பகல் உணவுக்கு ரூ. 2-00ம் மாலை சிற்றுண்டிக்கு ரூ. 1-50 நேரில் செலுத்திச் சீட்டுப் பெற்றுக்கொள்ளலாம்.

प्रज्ञानं ब्रह्म

தர்ம சக்கரம்

அறவாழி அந்தணன் தாள்சேர்ந்தார்க்(கு) அல்லால்
பிறவாழி நீந்தல் அரிது.

சக்கரம் 33 | ரக்தாக்ஷி ஹு ஆனி மீ | ஆரம் 6

பிரார்த்தனை

यस्मिन् सर्वाणि भूतान्यात्मैवा भूद्विजानतः ।
तत्र को मोहः कः शोकः एकत्वमनुपश्यतः ॥

— ईशावास्योपनिषद्

யஸ்மின் ஸர்வாணி பூதான்யாத்மைவா பூத்விஜானத: ।
தத்ர கோ மோஹ: க: சோக: ஏகத்வமனுபச்யத: ॥

— ஈசாவாஸ்யோபநிஷத்

அனைத்தும் ஒரு பொருளின் தோற்றம் என்பதைக் காண்பவனுக்கு மயக்கம் ஏது? துயரம் ஏது?

நன்ருய் ஞானம் கடந்து போய் நல் இந்திரியம்
எல்லாம் ஈர்த்து
ஒன்ருய்க் கிடந்த அரும்பெரும் பாழ் உலப்பில் அதனை
உணர்ந்து (உ)ணர்ந்து
சென்(று) ஆங்(கு) இன்ப துன்பங்கள் செற்றுக் களைந்து
பசை யற்ருல்
அன்றே அப்போதே வீடு அதுவே வீடு வீட மே.

— திருவாய்மொழி

அருள் விருந்து

அழகு பரம்பொருளுக்குரிய சொரூப லட்சணமாம்.

சேரிடம் அறிந்து சேர்; பக்தனுக்குச் சேரிடம் சிவம்.

சுயநலம் படைத்தவன் க்ஷீணதசை அடைவது திண்ணம்.

தன் கருத்தைப் பிறர் மீது வலிந்து திணித்தல் ஒவ்வாதது.

எளிய கிராம வாழ்க்கை இந்தியப் பண்புக்கு இருப்பிடமாம்.

நேர்மையில் நிலைத்திருப்பது ஆத்மசாதகனுடைய பாங்காகிறது.

இறைவா! உன்னை நான் சார்ந்திருப்பதற்கு உன் அருள் முற்றிலும் தேவை.

சிறுமை அனைத்துக்கும் இருப்பிடமாகிய அகங்காரத்தோடு இணைந்திராதே.

உன் தூய்மையைப் பாழ்படுத்தும் சிந்தனை எதிலும் கருத்தைச் செலுத்தாதே.

எளியதில் எளியது எனினும் அன்பு ஒன்றே மனிதனோடு மனிதனைக் கட்டி வைக்க வல்லது.

வீணே நெடுங்காலம் வாழ்ந்திருப்பதைவிடப் பக்திப் பரவசம் படைத்து ஒரு நாள் வாழ்ந்திருப்பது மிக மேலானது.

மானுடன் ஒருவன் தனக்குத்தானே மதிப்புத் தருவது போன்று தன் எதிரிக்கும் மதிப்புத்தரக் கடமைப்பட்டிருக்கிறான்.

ஆகாசம் ஏனைய நான்கு பூதங்களால் மலினப்படுவதில்லை. அங்ஙனம் ஆத்மன் அந்தக்கரணங்களால் மலினப்படுவதில்லை.

சுயநலத்துக்காகத் திண்டாடுவது விலங்குத் தன்மை; பரநாட்டம் படைத்திருப்பது சான்றோன் ஒருவனுடைய மேலாம் தன்மை.

பரத்தை அடைவது கணப்பொழுதில் நிகழலாம்; அல்லது ஒரு கற்பகாலம் எடுத்துக்கொள்ளலாம். இவை யாவும் அவரவர் படைத்திருக்கும் மனபரிபாகத்தைப் பொறுத்ததாம்.

மரக்கிளையில் உட்கார்ந்திருக்கும் ஒரு பறவை அக்கிளையைப் பொருள் படுத்துவது இல்லை; தன் சிறகையே சார்ந்திருக்கிறது. அங்ஙனம், பக்தன் ஒருவன் உலகில் வாழ்ந்திருந்தும் பரமனையே சார்ந்திருக்கிறான்.

பரமஹம்சர் புகட்டிய

பெருநெறி விளக்கம்

பரமஹம்சதேவர் பக்தர்களோடு உரையாடிக் கொண்டிருக்கிறார். அவ்வேளையில் பூரணன் என்னும் இளைஞன் அங்கு வந்து சேர்ந்தான்.

பரமஹம்சதேவர் : "நாங்கள் இங்குக் குழுமியிருப்பது பற்றி உனக்கு எப்படித் தெரிய வந்தது?"

பூரணன் : "சாரதாப்ரியன் இயம்பினன்." பரமஹம்சதேவர் ஆங்குக் குழுமியிருந்த தாய்மார்களிடம் பகர்ந்ததாவது: "இவனுக்கு அருந்துதற்கு ஏதாவது தின்பண்டம் தாருங்கள்."

பாடுவதற்கு நரேந்திரன் ஆயத்தமாகிக் கொண்டிருந்தான். இனிய குரலிலே அவன் பாடுகின்ற பக்தி ததும்பும் பாடல்களைக் கேட்கப் பரமஹம்சதேவரும் ஏனைய அன்பர்களும் ஆவலோடு இருந்தனர். நரேந்திரன் பாடியதாவது: "ஓ சிவா! உன் வஜ்ராயுதமானது உலகனைத்தையும் ஆள்கிறது; மடுவுகளையும், மலைகளையும், வானத்தையும் அது ஆண்டு வருகிறது. மகாதேவா, காலனை எடுத்து விழுங்குபவனே, எங்கும் நிறை பொருளே, தர்மத்துக்கு இருப்பிடமே, மங்களம் அனைத்துக்கும் இருப்பிடமே, என் தீவினையனைத்தையும் அகற்றி விடுவாயாக; என்னை ஆட்கொள்வாயாக!" நரேந்திரன் பாடிய மற்றொரு பாடலில் அடங்கியிருந்த கருத்துக்களாவன: "தீனதயாளுவே, உன் நாமம் கேட்பதற்கு இனியதாய் இருக்கின்றது. உயிர்க்குயிராய் இலங்குபவனே, உன் திருநாமம் எங்கள் காதில் வந்து ஒலிக்கின்ற பொழுது அமிர்தபானம் பண்ணுதற்கு நிகராக நாங்கள் பரமானந்தம் அடைகிறோம்."

அவன் பாடிய மற்றொரு பாடலில் அடங்கியிருந்த கருத்துக்களாவன: "ஆபத்துக்கள் அனைத்தையும் அகற்றி வைக்கின்ற அவனை அன்புடன் அழைப்பதற்கு ஓ மனமே, நீ ஏன் தயங்குகின்றாய்? மாயப்பிரபஞ்சத்தில் அகப்பட்டுக்கொண்டுள்ள நீ உன்னையே மறந்து விட்டாய். இப்பிரபஞ்சம் என்னும் பொருளற்ற பாலைவனத்தைக் கண்டு நீ மயங்குகின்றாய். ஐயோ! இது எத்தகைய பரிதாபத்துக்குரிய கீழ்நிலையாகிறது.

"இவ்வுலக சம்பந்தமான சிநேகிதர்களையும் செல்வத்தையும் நீ யாண்டும் பாதுகாத்து வைத்திருக்க உனக்குச் சாத்தியப்படாது. ஓ மனமே! நீ மிக எச்சரிக்கையாய் இரு. உன் இறைவனை நீ மறந்து விடாதே. மாயப்பிரபஞ்சத்தை மனமே நீ ஒதுக்கித்தள்ளு. நித்தியமாய் உள்ள இறைவனையே நாடியிரு. அங்ஙனம் செய்வாயாகில் நீ ஒரு பொழுதும் துன்பத்துக்கு ஆளாகமாட்டாய். இங்ஙனம் நான் இயம்புகிற ஹிதோபதேசத்தை எப்பொழுதுமே உன் ஹிருதயத்தில் வைத்துக்கொள்.

"இறைவனாகிய ஹரியின் நாமத்தை உரத்த குரலிலே உச்சரிப்பாயாக! பொருளற்ற பிரபஞ்ச ஆசையை எல்லாம் ஒதுக்கித் தள்ளு. பிறவிப் பெருங்கடலைத் தாண்டுதற்கு இது ஒன்றே உற்ற உபாயமாகிறது. உடல், பொருள், ஆவியை எல்லாம் உவந்து அவனிடம் ஒப்படைத்துவிடு. உறுதியான உள்ளன்புடன் நீ அவனையே வழிபடுவாயாக!"

இங்ஙனம் நரேந்திரன் பாடியது ஆங்குக் குழுமியிருந்த பக்தர்கள் அனைவரின் உள்ளத்தையும் கொள்ளை கொண்டு போனது. இப்பொழுது பால்த்து என்னும் பெயர் படைத்திருந்த பக்தன், "அப்பாடலைப் பாடமாட்டாயா?" என்று கேட்டான். "எப்பாடலை?" என்று நரேந்திரன் கேட்டான். "ஒப்பற்ற முகவிலாசத்தை நான் பார்க்கின்றபொழுது, என்னும் பாடலைப் பாடுவாயாக" என்று பால்த்து வேண்டினன். "ஓ இறைவா! உன்னுடைய ஒப்பற்ற முகவிலாசத்தை நான் காணும்பொழுது என் உள்ளத்தினின்று இவ்வுலக சம்பந்தமான துன்பங்களும் துயரங்களும் பறந்தோடுகின்றன. கதிரவன் காட்சி உலகுக்கு வருகின்றபொழுது காரிருள் எல்லாம் மறைந்துபட்டுப் போகிறது. அதே பாங்கில் இறைவா! உன்னுடைய சான்னித்தியம் எங்கள் உள்ளத்தில் உதயமாகின்ற

பொழுது எங்கள் உள்ளத்தை வாட்டுகின்ற கொடுமைகளனைத்தும் மாயமாய் மறைந்து போகின்றன. அதற்குப் பதிலாக உன் முக விலாசத்தில் மிளிர்கின்ற பேரின்பம் எங்களைப் பரமானந்தத்தில் மூழ்கியிருக்கச் செய்கிறது. உன்னுடைய கிருபையையும் பேரன்பையும் பற்றி நான் எண்ணிப் பார்க்கின்றபொழுது என்னுடைய உள்ளத்தின் உள்ளே பரமானந்தம் துள்ளி எழுகிறது. என் கண்களினின்று ஆனந்த பாஷ்பம் தாரை தாரையாகப் பொழிகிறது. அதனால் என் கண்களிரண்டும் அத்தாரையில் நனைந்துபட்டுக் கிடக்கின்றன. ஓ கருணாகரனே, உனக்கு வெற்றி உண்டாகுக! ஓ கருணாகரனே, உனக்கு வெற்றி உண்டாகுக! உன்னுடைய பேரன்பை உலகத்தவர்கள் எல்லாருக்கும் நான் பிரகடனம் பண்ணுவேன். உன் தொண்டனாயிருந்து கொண்டு இப்பிரபஞ்ச வாழ்வை நான் முடிவுக்குக் கொண்டு வருவேனாக!"

இப்பொழுது மகேந்திரநாதர் நரேந்திரன் மேலும் பாடவேண்டுமென்று வேண்டினார். நரேந்திரனும் அவருடைய வேண்டுதலுக்கு இசைந்தான். அப்படி இசைந்தவன் பாடவும் செய்தான். அவன் பாடியதை மகேந்திரர் முதலாயினோர் கைகூப்பிக்கொண்டு கேட்கலாயினர்.

"தெய்விகப் பேரானந்தம் என்னும் மதுவை ஓ மனமே, நீ வேண்டியவாறு பானம் பண்ணுவாயாக! தரையில் படுத்துப் புரளுவாயாக! அதே வேளையில் ஹரியின் இனிமை செறிந்த நாமத்தை உச்சரிப்பாயாக!" மற்றும் ஒரு பாடலை நரேந்திரன் பாடினான்:

"ஹரியின் சொருபத்தைக் குறித்து ஓ மனமே, நீ தியானம் பண்ணுவாயாக! துருவி ஆராய்ந்து பார்க்கப் பார்க்க அவன் சிறிதேனும் குற்றமற்றவன் என்பது வெளியாகிறது. அவனுடைய சொருபத்தினின்று கிளம்புகின்ற ஜோதியானது ஒப்பற்றது. அந்த மூர்த்தியின் வடிவமோ உள்ளத்தை முற்றிலும் கவர்கிறது. பக்தர்கள் அனைவருக்கும் இனியவனாக அவன் இலங்குகின்றான்."

மற்றும் ஒரு பாடலை நரேந்திரன் பாடினான்.

"இறைவா! இப்பிரபஞ்சம் அருமையாக உன்னால் அமைக்கப்பெற்றிருக்கிறது. அது எல்லையற்றது. கூர்ந்து பார்க்கப் பார்க்க அது வியப்பூட்டுகிறது. இறைவா! உன் சௌந்தர்யமும் கருணையும் நிறைந்துள்ள அற்புதமான பெட்டகமாக அது அமைந்திருக்கிறது. தங்கத்தைக்கொண்டு அமைக்கப்பட்டுள்ள மாலையின் மீது தீட்டிய இரத்தினங்கள் போன்று நட்சத்திரங்கள் மிளிர்கின்றன. சந்திர சூரியர்களோ எண்ணிக்கையில் அடங்காதவைகள். அவைகளைக் கணக்கிட யாருக்குத்தான் இயலும்!

"பூமியிலோ தானியங்கள் குவியல்குவியலாக அமைந்துள்ளன. தங்கக் குவியல் தகதக என்று திகழ்கிறது. இவை யாவும் நிரம்பப் பெற்றது உன்னுடைய அளவிலடங்காத களஞ்சியம். எண்ணிக்கையிலடங்காத நட்சத்திரங்கள் உன் மகிமையைக் குறித்து இடையறாது ஓலமிட்டுக்கொண்டிருக்கின்றன."

மற்றொரு பாடலை நரேந்திரன் பாடினான்:

"சூரியனும் சந்திரனும் ஏற்றிவைத்துள்ள விளக்குகளுக்கு நிகராக வெட்டவெளி என்னும் மாடத்தின்மீது ஏற்றிவைக்கப்பட்டவைகளாக ஒளிவிட்டுப் பிரகாசித்துக் கொண்டிருக்கின்றன. மகிமை நிறைந்த உன் மேனியை அலங்கரித்தற் பொருட்டு எண்ணிக்கையிலடங்காத நட்சத்திரங்கள் மிளிர்ந்துகொண்டிருக்கின்றன.

"அனைத்துக்கும் ஆதி காரணமாயிருக்கும் அம்மூர்த்தியின் மகிமைகளைக் குறித்து ஓ மனமே! நீ ஆழ்ந்து தியானிப்பாயாக. மாசு இலா மணியாக அம்மூர்த்தி இலங்கிக்கொண்டிருக்கிறார். ஆதியந்தமில்லாத மெய்ப்பொருளாக அம்மூர்த்தி மிளிர்கிறார். அகிலாண்டமெங்கும் அவர் பிராணனாக வடிவெடுத்து உயிர்க்குயிராக நிறைந்திருக்கிறார். அனைத்துக்கும் ஆதிகாரணமாயிருக்கும் அப்புருஷனைப் பக்தியில் ஊறியுள்ள தொண்டன் தியானிக்கின்றான். அண்டங்களனைத்தின் உயிர்க்குயிராக அவன் இலங்குவதைத் தியான அவஸ்தையில் இருக்கின்ற பக்தன் பார்க்கிறான்."

அம்பிகையின் பக்தனாகிய நாராயணனின் வேண்டுதலுக்கு இணங்கி நரேந்திரன் இன்னும் ஒரு பாடலைப் பக்திப் பரவசத்தில் ஊறியவனாய் இருந்துகொண்டு பாடினான்:

"தாயே! வா, வா. என் உயிர்க்குயிராய்

இலங்குகின்ற அம்மையே, எழுந்தருள்வாயாக! உன்னைப் பார்க்கப் பார்க்க நான் பரமானந்தம் அடைகின்றேன். என் இதயக் கமலத்தில் நீ இனிது எழுந்தருள்வாயாக. உன்னைத் தரிசித்து நான் இன்புற்றிருக்கும்படி அருள் புரிவாயாக. ஓ தாயே! பிறப்பெடுத்தது முதற் கொண்டு இப்பிரபஞ்ச வாழ்வில் இன்னல்கள் பலவற்றுக்கு நான் ஆளாகி இருந்திருக்கிறேன். ஆயினும் அவை யாவற்றையும் சகிக்கும் திறமையை உன்னிடத்திருந்து நான் பெற்றிருக்கிறேன். தாயே, என் நிலையை நீ அறிகின்றாய். உன் காட்சியின் மகிமையே அவை யாவற்றையும் பொறுத்திருக்க உற்ற துணையாக அமைந்திருக்கிறது. ஓ தாயே! அக்ஞான இருளில் மூழ்கிக் கிடக்கின்ற என் இதயத்தின் வாயிலை நீ திறந்து வைப்பாயாக. என் அன்பிற்குரிய அன்னையே, நீ அங்கு வீற்றிருப்பதை நான் கண்டு மகிழ்வுறுமாறு அருள்புரிவாயாக!''

கடைசியாக நரேந்திரன் தான் விரும்பிய பாடல் ஒன்றைப் பாடி ஒரு முடிவுக்குக் கொண்டு வந்தான்.

''அன்னையே, காரிருளில் உன் ஒப்பற்ற அழகு திகழ்ந்துகொண்டிருக்கிறது. ஆகையினால் யோகியர்கள் காரிருள் செறிந்துள்ள மலைக்குகையினுள் இருந்துகொண்டு உன்னைத் தியானிக்கின்றார்கள். ஓ மனமே, பாரமார்த்திகப் பேரானந்தம் என்னும் மதுபானத்தை வேண்டியவாறு அருந்தி இன்புற்றிரு.''

உள்ளத்தைக் கொள்ளைகொண்டு போகக்கூடிய இப்பாடலுக்குச் செவிசாய்த்த பரமஹம்சர் அக்கணமே ஆழ்ந்த சமாதியில் மூழ்கினார். அப்போது அவர் வடதிசையை நோக்கி ஒரு திண்டின்மீது அமர்ந்திருந்தார். அவருடைய பாதங்களிரண்டும் தொங்கிக்கொண்டிருந்தன. அவருடைய மேனி சுவரின்மீது சாய்ந்திருந்தது. பக்தர்கள் எல்லாரும் ஆங்காங்கு அமர்ந்திருந்தார்கள்.

ஆனந்தப் பரவசநிலையில் இருந்தபடி பரமஹம்சதேவர் அன்னை பராசக்தியோடு உரையாடினார். அவர் இயம்பியதாவது:

''அன்னையே, நான் இப்போது அமுது பண்ணுவேன். நீ வந்துள்ளாயா? உனக்கேற்ற ஆலயம் ஒன்றைத் தேர்ந்தெடுத்து ஆங்கு உன் மூட்டையை வைத்துவிட்டு ஈண்டு எழுந்தருளியிருக்கின்றாயா? இப்பொழுது யாருடைய சேர்க்கையும் எனக்கு வேண்டாம். தாயே, இன்னிசையைக் கேட்டு நான் ரசித்தது போதும். அத்தகைய திருக்கூட்டமும் இன்னிசையும் ஒருவாறு என் மனதைப் புறவுலகுக்குக் கவர்ந்திழுக்கின்றன.''

சிறிது சிறிதாகப் பரமஹம்சதேவருடைய மனது புறவுலகுக்கு வந்துகொண்டிருந்தது. பக்தர்களிடம் அவர் மேலும் இயம்பியதாவது: ''பல ஆண்டுகளுக்கு முன்பு மக்கள் மீன்களை மட்பாண்டத்தில் வைத்திருந்ததை நான் பார்த்தேன். அது எனக்குப் பெரும் வியப்பூட்டியது. இங்ஙனம் மீனைப் பிடித்து மட்பாண்டத்தில் உள்ள தண்ணீரில் போட்டு வளர்ப்பது கொடியதிலும் கொடியதாம். தங்களுக்குத் தேவை ஏற்படும்போது அவர்கள் வளர்த்த மீனைக் கொன்று சமைத்துப் புசித்து விடுவார்கள். பிறகு நாள் ஏற ஏற என் மனப்பான்மையில் மாறுதல் ஒன்று உருவெடுத்தது. ஜீவர்கள் எடுத்திருக்கின்ற உடல்கள் அனைத்தும் தலையணை உறைக்குச் சமானமானவைகள் என நான் உணரலாயினேன். உயிர் வகைகள் எடுத்துள்ள உடலங்கள் இருப்பதும் அழிந்து பட்டுப் போவதும் ஒன்றே. ஆத்ம சொரூபம் அதனால் பாதிக்கப்படுவதில்லை.''

பவநாதன்: ''இதுதான் தாங்கள் அனுபூதியில் கண்டுள்ள உண்மை என்றால் மனிதனை மனிதன் கொல்லலாமா? அதனால் அவனுக்குப் பாவம் ஏதும் வந்து வாய்க்காதா?''

பரமஹம்சதேவர்: ''ஆம்! ஜீவாத்மா ஒருவனுக்கு அத்தகைய சீரிய மனநிலை வந்தமையுங்கால் அவன் அக்கொலைச் செயலில் ஈடுபடலாம். அவனுக்கு அதனால் தோஷம் ஏதும் வந்துவிடாது. பீஷ்மர் அத்தகைய நிலையில் இருந்தார். ஆனால் அப்பெரு நிலையை அடையப்பெறாத சாதாரண மனிதன் அச்செயலில் ஈடுபட்டால் அவன் கொலைபாதகன் ஆகின்றான். அத்தகைய பாரமார்த்திகப் பெருநிலை வாய்ப்பது பிரம்மஞானத்துக்கு நிகர்.

''சமாதி நிலையினின்று இரண்டொருபடி நான் கீழே இறங்கி வரும்பொழுது பக்தர்களுடைய கூட்டுறவில் ஆனந்தப் பரவசம் அடைகிறேன்.''

எந்நாள் கண்ணி

(தாயுமானவர் இயற்றியது)

11-8. ஏதுஏது செய்தாலும் என்பணிபோய்
நின்பணிஆம்
மாதேவா என்று வருந்துநாள் எந்நாளோ.

அண்டங்களனைத்தும் ஈசனுடைய சிருஷ்டி. அண்டங்களில் ஆங்காங்கு வாழ்ந்துவரும் உயிர்வகைகளும் அவனுடைய சிருஷ்டியே. அண்டங்களின் நடைமுறையும் அவனுடைய பெரிய திட்டமாம். இதில் வாழ்ந்து வரும் உயிர்வகைகளுக்கு இச்சா சுதந்திரம் உண்டு. ஆனால் அந்த இச்சா சுதந்திரம் எல்லைக்குட் பட்டதாம். அப்படியிருந்தும் மக்களுள் பெரும் பான்மையோர் தாங்கள் படைத்துள்ள அகங் கார மமகாரத்தை முன்னிட்டு யான், எனது என்னும் தன்மையை வளர்க்கின்றனர். தங் கள் செயலுக்குத் தாங்களே கர்த்தா என்னும் எண்ணமும் அவர்களுடைய உள்ளத்தை ஆழ்ந்து பற்றிப் பிடித்துக்கொண்டிருக்கிறது. ஆயினும் மனிதனுக்கு உரிய இச்சா சுதந்திர மும் பரமனிடத்திருந்தே வந்தது என்பதை அவன் அறிந்துகொள்வதில்லை. அரியதோர் உபமானத்தின் வாயிலாகப் பரமஹம்சதேவர் இதை விளக்குகின்றார். பசு ஒன்று மேய்வதற் குப் புல் தரையில் உழவன் முளையடித்து அதைக் கட்டிவைக்கிறான். அக்கயிற்றின் நீளத்துக்கேற்ற பிரகாரம் பசுவும் ஆங்கு வட்ட மிட்டு மேய வல்லதாகிறது. ஆங்கு முற்றிலும் மேய்ந்தான பிறகு கயிற்றை அவன் நீளமாக்கு கின்றான் அல்லது மற்றோரிடத்தில் பசுவைப் பிடித்துக் கட்டிவைக்கின்றான். மனிதனுக் குரிய இச்சா சுதந்திரம் அத்தகையது. தனக்கு வாய்த்துள்ள சந்தர்ப்பங்களை மனிதன் நன்கு பயன்படுத்துவானாகில் புதிய சந்தர்ப்பங்கள் அவனுக்கு வந்தமைகின்றன. 'இயல்வது கரவேல்' என்னும் கோட்பாடு இதை அடிப் படையாகக்கொண்டது. வாய்த்துள்ள சந் தர்ப்பங்களையெல்லாம் நன்கு பயன்படுத்துவ தற்கேற்ப மனிதனுடைய ஆற்றல் அதிகரிக் கின்றது. ஆனால் சுயநலம் படைத்தவனாக அவன் இருப்பானாகில் சந்தர்ப்பங்கள் தாமா கவே தடைபட்டுப் போகின்றன.

கடவுளுடைய பக்தனுக்குப் பெரிய வாய்ப்பு ஏதும் தேவையில்லை. எதைச் செய்தாலும் அவன் அதை ஈசனுடைய பணிவிடையாகப் பண்ணுகின்றான். ஈசனுடைய பணிவிடையில் பெரியது சிறியது என்பதில்லை. அத்தகைய மனநிலை படைத்திருப்பவனுக்கு ஆற்றல்கள் தாமாகவே வளர்கின்றன. அதற்கேற்றபடி ஈசனுக்குரிய நல்ல தொண்டனாக அப்பக்தன் திருந்தி அமைகின்றான்.

'யான் எனது எனும் செருக்கறுப்பான்
வானோர்க்கு உயர்ந்த உலகம் புகும்'

என்னும் கோட்பாட்டுக்கு உட்படப் பக்த னிடத்துள்ள அகங்கார மமகாரம் முற்றிலும் அழிந்துபட்டுப் போகுமாகில் பிறகு அந்தப் பக்தன் மூலம் நிகழ்கின்ற செயல்களனைத்தும் ஈசனுடையவையே. அரிய பெரிய செயல் களைச் செய்கின்றவிடத்து அவைகளைக் குறித் துப் பக்தன் பெருமை பாராட்டுவதில்லை. அற் பச் செயலை முன்னிட்டு அவன் ஏமாற்றம் அடைவதுமில்லை. புரிவதற்குச் செயல் ஏதும் இல்லாது போய்விடின் அதைக் குறித்து அத் தொண்டன் விசனப்படுவதுமில்லை. இதுவே மானுட வாழ்க்கையைப் பற்றிய முடிவான கோட்பாடாகிறது.

ஈசனுடைய செயலைப்பற்றிய மற்றொரு கோட்பாடு: ஈசனுடைய திட்டம் மக்களை முன்னிட்டு எந்த விதத்திலும் மாறிப்போவ தில்லை. அர்ஜுனன் 'போர்புரியமாட்டேன்' என்று தடை செய்தபொழுது கிருஷ்ண பர மாத்மா தன் விசுவரூபத்தை எடுத்துக்காட்டி அர்ஜுனனுக்கு எச்சரிக்கையொன்று செய் தார். அதன் வாயிலாக அர்ஜுனன் அறிந்து கொண்டதாவது: ஈசனுடைய திட்டத்தில் முழு மனதோடு கலந்துகொள்கின்றவன் பாக்கியவான். அவன் செயல்புரிய மறுத்தால் அதை முன்னிட்டு ஈசனுடைய திட்டம் தடைப் படுவதில்லை. தனக்குக் கிடைத்துள்ள வாய்ப் பைத் தொண்டின் வாயிலாகநிறைவேற்றுவதே ஜீவாத்மன் ஒருவன் செய்யக்கூடிய அரிய பெரிய செயலாம். தனக்கு ஏற்பட்டுள்ள ஸ்வதர்மத்தை அறியாமையின் காரணமாகச் செய்ய மறுப்பவன் அல்லது தயங்குபவன்

கீழ்மையுறுகிறான். தனக்கேற்பட்டுள்ள கடமையை ஈசன் செயலாகக் கருதி முழுமனதோடு ஆற்றுகின்றவன் எல்லாவிதச் சிறப்பையும் பெறுகின்றான். பிறகு பரத்தை அடையவும் தகுதி உடையவனாகிறான். அத்தகைய தகுதி தமக்கு வந்து வாய்க்கவேண்டும் என்று இக்கண்ணியின் வாயிலாகத் தாயுமானவர் விண்ணப்பிக்கின்றார்.

11-9. பண்டும்கா னேன்நான் பழம்பொருளே
[இன்றும்உனைக்
கண்டும்கா னேன்எனவும் கைகுவிப்பது
[என்நாளோ.

பண்டு-அக்ஞான நிலையிலிருந்த பழைய காலம்.

பிரபஞ்சத்தின்கண் அமைந்துள்ள உயிர்கள் அனைத்தும் ஈசனுடைய தோற்றங்களாம். ஆனால் அவ்வுண்மையை அவைகள் அறிய மாட்டா. அத்தனைவித உயிர்களும் ஆற்றுகின்ற செயல்களனைத்தும் ஈசனுடைய பெரிய திட்டமாம். அத்திட்டத்தின் வாயிலாகச் சிற்றுயிர்கள் படிப்படியாகப் பேருயிர்களாகப் பரிணமிக்கின்றன. அதன் பொருட்டு அந்தந்த உயிர் படைத்திருக்கும் ஆணவ, அகங்காரமும் இன்றியமையாதவைகளாம். அதை முன்னிட்டு ஒவ்வோர் உயிரும் தன்தன் போக்கில் தான்தான் முன்னேற்றமடைவதாக எண்ணிக்கொள்கின்றது. அந்த எண்ணமும் தத்துவத்துக்கு ஒத்ததாம். இத்தகைய எண்ணத்துடன் உயிர்களனைத்தும் படிப்படியாக முன்னேறி மானுட நிலையை எட்டுகின்றன. அதன் பிறகும் அகங்காரம் அவனைச் செயலில் தூண்டுகிறது. பல பிறவிகளில் இன்பதுன்பங்களுக்கு ஆளாகியான பிறகு தன் செயலுக்குத் தான் கர்த்தா அல்லன் என்பதை மனிதன் ஒருவாறு அறிய வருகிறான். நல்ல விவேகி ஒருவன் அரியதொரு பூங்கா அமைத்தான். அதைப் பார்க்க வந்தவர்களிடம் ஒவ்வொரு மரம், செடி, கொடியை உருவாக்குதலில் தான் எடுத்துக்கொண்ட சிரமத்தைப் பற்றி அவன் விரிவாக எடுத்துரைத்தான். ஒரு நாள் தற்செயலாகப் பசு ஒன்று அப் பூங்காவினுள் நுழைந்து மேய்ந்துகொண்டிருந்தது. கல் ஒன்றை எடுத்து வேகமாக அதன்மீது வீசினான். அக்கல்லானது பசுவின் காலுக்குப் பக்கத்தில் இருந்த மர்மஸ்தானத்தைப் போய்த் தாக்கியதால் அது உடனே வீழ்ந்து மடிந்து போயிற்று. அப்படித் தான் செய்த செயலைக் குறித்து அவன் வருந்தினான். அதை மறைப்பதற்குப் புல், தழை முதலியன போட்டு அவன் மூடிவைத்து விட்டான்.

பார்க்க வந்தவர்களுள் ஒருவன் ஏன் இங்கு இவ்வளவு தழை போட்டுக்கிடக்கிறது என்று போய் அதை நீக்கிப் பார்த்தான். பசு ஒன்று செத்துக் கிடப்பதைக் கண்டு அவன் திகிலடைந்தான். 'கோ' வதை செய்த மகா பாவி யார் என்று அவன் வினவினான். அதற்குத் தோட்டம் வைத்தவன் 'அக்குற்றம் இந்திரனைச் சாரும்' என்றான். எப்படி என்று கேட்டதற்குத் தன் கைக்கு அதிஷ்டான தெய்வமாயிருப்பவன் இந்திரன். தன் கையைக் கருவியாக வைத்துக்கொண்டு இந்திரன் கல்லை வீசினான். பசு அடிபட்டுச் செத்துப்போய் விட்டது என்று அவன் விடைவிடுத்தான்.

வந்தவன் கேள்வி ஒன்றைக் கிளப்பினான். 'இந்த நல்ல பூங்காவை உண்டுபண்ணுவதற்கு உன் கைகள் உனக்கு ஏற்ற கருவிகளாக இருந்து வருகின்றன. மற்று, அந்தப் பசுவைக் கொல்வதற்கு மட்டும் உன் கை இந்திரனுக்குக் கருவியானது என்ன விபரீதம்!' என்றான்.

இந்த நிலையில்தான் மக்களுள் பெரும்பான்மையோர் இருந்து வருகின்றனர். தாங்கள் புரிகின்ற நல்ல காரியங்களுக்குத் தாங்களே கர்த்தாக்கள் என்று அவர்கள் பெருமையடித்துக்கொள்கின்றனர். மற்று, அடாத செயல் ஏதாவது ஒன்றைத் தாங்கள் செய்துவிட்டால் அதற்குப் பொறுப்பாளி தாங்கள் அல்லர் என்று பொருந்தாத ஞானம் பேசுகின்றனர். ஞானம், அக்ஞானம் இரண்டுக்கும் இடைநிலையில் மக்கள் பலர் இருந்துகொண்டு திணறுகின்றனர். அப்படி அவர்கள் திணறுதற்கும் ஈசனுடைய திட்டத்தில் இடம் உண்டு. எனவே திரிகரணங்கள் ஒத்திருந்து தன் கர்மத்துக்குத் தன்னையே ஒருவன் பொறுப்பாளியாக்கிக் கொள்வது முறைமை. அத்தகைய பொய் ஞானம் தம்மிடத்து உருவெடுக்கலாகாது என்றும் தாம் இறைவனின் நல்ல கருவியாக வேண்டும் என்றும் தாயுமானவர் இறைவனிடம் வேண்டுகிறார்.

இந்தியாவின் எழுச்சி

(சுவாமி விவேகானந்தர்)

இந்தியா அழிந்துபோகும் என்று நினைக்கிறீர்களா? இந்தியா அழியுமானால் உலகிலிருந்து ஆன்மிகம் அழிந்து போய்விடும்; ஒழுக்கம் உலகிலிருந்து மறைந்து போய்விடும்; சமயத்திலுள்ள இனிமையும் இரக்கமும் அழிந்துபோய்விடும்; வாழ்க்கையின் லட்சியம் அழிந்துபோய்விடும். இவைகள் இருந்த இடத்தில் காமமும் படாடோபமும் தலைதூக்கிவிடும்; ஆண், பெண் உணர்ச்சி ஓங்கிவிடும்; பணம் பாதிரிமார்களினிடத்தைப் பெற்றுவிடும்; வஞ்சகம், பலாத்காரம், போட்டி ஆகியவை பூஜா கிரியைகளாகிவிடும். மனித ஆத்மா அப்பூஜைக்குப் பலியிடப்படும். இத்தகைய நிகழ்ச்சி ஒரு காலத்திலும் நிகழாது.

மீண்டும் இந்தியா எழுச்சியுற ஆரம்பித்துவிட்டது. அதன் எழுச்சிக்குரல் ஒலிக்க ஆரம்பித்துவிட்டது. எழுச்சிக்குரல் உலகின் எல்லாப் பகுதிகளுக்கும் விரைவில் போய்ச் சேரும். இந்தியா எழுச்சி அடைந்து வருகிறது என்பதை உறுதியாக நம்புங்கள். இந்தியா எழுந்திருந்து பாமர மக்களும் ஏழை எளியவர்களும் நல்வாழ்வு பெற்று மகிழ்ச்சி அடையப் போகிறார்கள்.

மிருக பலத்தாலன்றி ஆன்மீக பலத்தாலேயே இந்தியா எழுச்சியுறப் போகிறது. இந்தியா அழிவுத்துறையில் செல்லாது. அமைதி, அன்பு, தியாகம் ஆகியவற்றைப் பின்பற்றித்தான் இந்தியாவின் முன்னேற்றம் அமையும். செல்வச்செருக்குக்கு இடம் தராமல் எளிமை, தூய்மைகளின் வாயிலாகவே இந்தியாவின் எழுச்சி அமையும்.

இந்தியாவின் எதிர்காலம் நம் உழைப்பைப் பொறுத்துத்தான் அமைந்திருக்கிறது. பாரதத் தாய் உறங்கிக் கொண்டிருக்கின்றாள். அவள் எழுந்திருக்கவும் தயாராக இருக்கின்றாள். நாம் அனைவரும் ஒன்றுபட்டு நம்முடைய சக்திகளையெல்லாம் ஒன்று திரட்டி ஒரே நோக்கமுடையவர்களாக ஆவதில்தான் இந்தியா எழுச்சி அடைவதற்கான ரகசியம் உள்ளது. நீங்கள் அனைவரும் ஒரே மனதுடன் இருங்கள்; நீங்கள் அனைவரும் ஒரே எண்ணம் கொண்டிருங்கள் என்ற கருத்துடைய வேத மந்திரம் ஒன்று என் நினைவிற்கு வருகிறது. ஒரு மனதுடன் இருந்து உழைப்பதுதான் வெற்றியடைவதற்குரிய ரகசியமாகும். மக்களுடைய மனோ சக்திகளையெல்லாம் ஒன்றாகத் திரட்டுவது, அவர்களையெல்லாம் இணங்கி ஒன்றாகச் செயல்படச் செய்வது, எல்லாருடைய ஆற்றல்களையும் ஒருமுகப்படுத்துவது ஆகியவை வெற்றியடைவதற்குரிய ரகசியங்களாகும்.

என் சகோதரர்களே! நாம் அனைவரும் கடுமையாக உழைப்போமாக. உறங்கிக் கொண்டு இருப்பதற்கு இது நேரமன்று. பெரிய பெரிய திட்டங்களைப் போடுவதில் முதலில் கருத்தைச் செலுத்தாதீர்கள். மெதுவாகப் பணியைத் தொடங்குங்கள். முழுமனதையும் பணியில் ஈடுபடுத்தும் உணர்ச்சியைப் பெறுங்கள். நிதானமாக முன்னேறிக் கொண்டே வாருங்கள். தைரியமடையுங்கள்; எழுந்து நில்லுங்கள். இருண்ட காலம் போய்க் கொண்டிருக்கிறது. இந்தியாவிற்கு ஒளி மயமான காலம் வந்து கொண்டிருக்கிறது. முன்னேற்றத்துக்குரிய அலைகள் எழ ஆரம்பித்து விட்டன. அம்முன்னேற்ற அலைகளை எந்தச் சக்தியும் தடுத்து நிறுத்த முடியாது.

இந்தியாவின் எதிர்காலத்தை நான் என் மனக்கண்ணால் பார்க்கிறேன். இப்போதுள்ள குழப்பத்திலிருந்தும், போராட்டத்திலிருந்தும் விடுபட்டு மகிமை பொருந்திய பூரண நிலைக்கு இந்தியா எழுந்து கொண்டிருக்கிறது. இந்தியாவை யாரும் எதிர்த்து வெல்ல முடியாது. வேதாந்த மூளையுடனும் இஸ்லாமிய உடலுடனும் இந்தியா எழுந்திருக்கும். ஞானமும் வீரமும் ஒன்று சேர்ந்தால் தான் நம் நாடு உயர் நிலையை அடையமுடியும். நம் நாடு உன்னத நிலையை அடைவதற்கு இதுதான் வழி. இவ்வழியில் இந்தியா முன்னேற்றம் அடையும்.

பிராம்மணர், க்ஷத்திரியர், வைசியர், சூத்திரர் என்ற நான்கு பிரிவினர்கள் மக்களுக்கிடையே இருக்கின்றனர். இப்பிரிவினர்கள் மாறி மாறி உலகை ஆட்சி புரிவார்கள். சூத்திரர்கள் எழுச்சியுற்று ஆட்சி செய்வார்கள்.

புரந்தரதாசர் சரிதம்

(172 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ரகுநாதராவ் தம்மைப் பிடித்துக் கீழே தள்ளி விட்டுப் போனதும் அவருடைய வீட்டுத் திண்ணையின்மீது அமர்ந்து பகவான் சிந்திக்கலானூர்: "கணவனுடைய மனநிலைதான் இத்தகையதென்றால் மனைவியின் மனநிலையை அறியலாமென்று தீர்மானித்தவராய் ராகுநாத ராவின் மனைவி லக்ஷ்மிபாயிடம் சென்ருர்.

பகவான் வீட்டுக்குள் நுழைந்து லக்ஷ்மி பாயைக் கண்டதும் அவ்வுத்தமி பகவான் திருவடிகளில் வீழ்ந்து வணக்கம் செய்தாள். 'தீர்க்க சுமங்கலிபவ' என்று பகவான் அவளை ஆசீர்வதித்தார். "சுவாமி தங்களுடைய திவ்விய தரிசனத்தால் என்னுடைய வினை நாசமாயிற்று. பரமபக்தராகிய தாங்கள் அடியேன் எதிர்பாராத வண்ணம் எழுந்தருளி காட்சி தந்தது யார் செய்த தவமோ தெரியவில்லை. அடியார்களாகிய நாங்கள் உய்யுமாறு தாங்கள் எழுந்தருளிய விஷயத்தைப் பகர்வீர்களாக" என்று லக்ஷ்மிபாய் கேட்டாள்.

லக்ஷ்மிபாயை ஆசிர்வதித்து "உத்தமிகளுள் உத்தமியே, என்னைப் போன்ற தரித்திரர்களுக்குச் சங்கடம் வந்தால் உன்னைப் போன்றவரையே அணுகுவோம். நீ கணவன் சொல் தட்டாது நடக்கின்ற பதிவிரதையாவாய். பகவத் பக்தியிலும் அடியார்களை உபசரிப்பதிலும் சிறந்து விளங்குகின்ருய். உன்னைக் கண்டதும் என் மனச் சஞ்சலம் பறந்தோடி விட்டது. எனக்கு ஒரு மைந்தன் இருக்கிருன். அவனுக்குக் கல்யாணம் செய்வதை முன்னிட்டு உன் கணவரிடம் ஆயிரம் பொன் வேண்டினேன். என்னுடைய பொல்லாத காலமோ என்னமோ, என்னைப் பிடித்துத் தள்ளிவிட்டுக் கடைக்குள் சென்று விட்டார். அவர்தாம் அப்படிச் செய்து விட்டாலும் அவருடைய தர்ம பத்தினியாகிய நீ என் சங்கடத்தைப் போக்கி வைப்பாய் என்ற திடநம்பிக்கையுடன் உன்னிடம் வந்துள்ளேன். நீ பொருள் கொடுத்து உதவி செய்வாயாகில் என்னுடைய கடைசி வாழ்க்கையில் நிம்மதி அடைவேன். நீ பொருள் தந்து உதவா விட்டால் புத்திரனுடைய கவலையினலேயே உயிர்விடுவேன். நான் இறந்து விட்டால் என் புத்திரன் அனுதையாகி விடுவான். இந்த ஏழையின்மீது இரக்கம் வைத்து ஆயிரம் பொன் தந்து என் துன்பத்தைத் அகற்றி வைப்பாயாக."

பகவானின் உருக்கமான பேச்சைக் கேட்டதும் லக்ஷ்மிபாயின் மனம் இளகிவிட்டது. அவர் கஷ்ட நிலையை உணர்ந்து கண்ணிர் உகுத்தாள். பக்தியே சிறிதுமில்லாத மக்களுக்குப் பகவான் செல்வத்தைக் கொடுக்கின்ருர். உண்மையாகப் பக்தி செய்பவர்களுக்கு அவர் அருள் செய்யாமலிருக்கிருர். அவருடைய திரு உள்ளத்தை யாரே அறிவார்! இவ்வயோதிகப் பிராம்மணர் உத்தமராக இருக்கின்ருர். புல்லியவளாகிய என்னிடம் அவர் இரப்பது தகுமா? இவர் என்னைப் பொருள் கேட்பதற்கு என்ன பாக்கியம் செய்தேனே! இவருடைய மனதைத் திருப்தி செய்வதைக் காட்டிலும் வேறு உயர்ந்த தர்மம் என்ன இருக்கிறது! என் கணவரோ பிறருக்கு ஒரு காசும் தரமாட்டார். என்னையும் நம்பாது பணத்தைப் பெட்டியில் வைத்துப் பூட்டிச் சாவியைத் தம்மிடமே வைத்துள்ளார். இப்பொழுது என்னிடம் மூக்குத்தி இருக்கிறது. இம்மூக்குத்தியின் விலை மூவாயிரம் பொன்னுகும். இதை அவருக்குத் தந்து உதவுவோம் என்று தீர்மானித்தாள். அவ்வயோதிகப் பிராம்மணனைப் பார்த்து "தேவரீர்! என் கணவனின் குணத்தை நன்கு அறிவீர். நான் கொடுக்கும் மூக்குத்தியை எடுத்துக்கொண்டு அவருக்குத் தெரியாது இவ்வூரை விட்டுப்போய் விடுங்கள்" என்று கூறி மூக்குத்தியை அவரிடம் கொடுத்தாள்.

மூக்குத்தியை வாங்கிக்கொண்ட பகவான் தம்மை ஒரு வடநாட்டு வியாபாரியாக மாற்றிக்கொண்டார். பலருக்கும் தம்மை ஒரு ரத்தின வியாபாரியாகக் காட்டிக்கொண்டு ரகுநாதராவின் கடைக்கருகே போனுர். ரகுநாதராவ் அவரைப் பார்த்ததும் அவர் தம்மிடம் வியாபார நிமித்தமாக வருகின்ருர் என்று நினைத்து மகிழ்ச்சியடைந்தார். ரகுநாதராவ் அவரிடம் உபசாரவார்த்தைகள் கூறி அவரைக் கடைக்குள் அழைத்துச் சென்று

ஆசனத்தில் அமர்த்தினர். "பிரபுவே! என் கடையை நாடித் தாங்கள் வந்ததன் காரணம் என்ன?" என்று ரகுநாதராவ் வினவினர். அதற்கு அந்த ரத்தின வியாபாரி பகர்ந்ததாவது: "ரகுநாதராவ் அவர்களே! நீங்கள் மணிகளைப் பரிசோதிப்பதில் கைதேர்ந்தவர் என்பதை நான் கேள்விப்பட்டிருக்கிறேன். என்னிடம் ஒரு விலையுயர்ந்த மூக்குத்தி இருக்கிறது. அதைப் பரிசோதித்துப் பாருங்கள்" என்று கூறினர். தம் மனைவியின் மூக்குத்தியைப் பார்த்ததும் ரகுநாதராவ் திகிலடைந்தார். இன்று காலையில் லக்ஷ்மிபாய் மூக்குத்தி அணிந்திருப்பதை நான் பார்த்தேன். இவரிடம் இது எப்படி வந்திருக்கும்? வெளிவேஷத்தில் கோடீஸ்வரராகத் தோற்றமளிக்கிறார். ஆனல் கள்வர்கள் சிலர் இவ்வாறு தோற்றமளிப்பார்கள். இவர் ஒரு வேளை அக்கள்வர்கள் கூட்டத்தைச் சேர்ந்தவராக இருப்பாரோ! ஆனல் உண்மையிலேயே நற்குணம் உடையவராக இருப்பாரானல் நாம்கொண்ட கருத்து பொய்யாகிவிடும். என் மனைவியின் மூக்குத்தி போல வேறு மூக்குத்தியும் இருக்கலாம். எனவே அவசரப்படாது சற்றுப் பொறுமையைக் கையாள வேண்டும். விலை கூறிப் பார்த்தால் அவருடைய மோசடி வெளியாகிவிடும். இங்ஙனம் ரகுநாதராவ் மனதில் பலவாறு எண்ணினர். கடைசியில் அவ்வணிகனைப் பார்த்து, "ஐயா, இம்மூக்குத்திக்கு என்ன விலை சொல்கின்றீர்? தாங்கள் எனக்கு அதை விற்கும் அபிப்பிராயம் இருக்கிறதா?" என்று ரகுநாதராவ் கேட்டார். நீர் ஒரு விலை கேளும். நீர் நியாயமான மதிப்பைக் கூறினல் அதை விற்பதைப்பற்றி யோசிக்கலாம் என்று வியாபாரி கூறினர். இம்மூக்குத்திக்கு ஆயிரம் பொன் தரலாம் என்று ரகுநாதராவ் கூறினர். வியாபாரிக்குக் கோபம் வந்துவிட்டது. நீ இதுவரை எத்தனை பேரை ஏமாற்றி இருக்கின்ருய்? நீ பெரும் பேராசைக்காரன். இப்படி மோசடி செய்து பணம் சம்பாதிப்பாயாகில் நீ கெட்டொழிவாய். மூவாயிரம் பொன் மதிப்புள்ள மூக்குத்தியை ஆயிரம் பொன்னுக்குக் கேட்கின்ருய். ஏன்? ஐந்நூறு பொன் என்று கேட்டிருக்கலாமே. சரி போகட்டும். உன்னேடு பேரம் பேசிக் கொண்டிருக்க நேரமில்லை. எனக்கு எத்தனையோ வேலைகள் இருக்கின்றன. இன்றைக்கு நீ காலையில் நல்லவர்கள் முகத்தில் விழித்திருக்கின்ருய். ஆகையால் தான் உனக்குக் கொளுத்த லாபம் வரப்போகிறது. மூக்குத்தியை எடுத்துக் கொண்டு பணத்தை விரைவில் எடு" என்று பதை பதைப்புடன் கேட்டார். "திருட்டு நகையாக இருந்தால்தான் மூவாயிரம் பொன் மதிப்புள்ளதை ஆயிரம் பொன்னுக்குத் தரமுடியும். எனவே தக்க சான்றுடன் இவரைப் பிடிக்க வேண்டும். இவர் நகையை வைத்துக்கொண்டு கடையிலேயே இருக்கட்டும். நம் ஆட்கள் இவரைக் கண்காணித்து வரட்டும். நாம் வீட்டுக்குப் போய் மனைவியை விசாரித்து வர வேண்டும்" என்று மனதுக்குள் தீர்மானம் செய்தார். "ஐயோ! கடையில் போதுமான பணம் இல்லை. சில நிமிடங்களில் வீட்டுக்குப் போய்ப் பணம் எடுத்து வந்து உங்களுக்குச் சேரவேண்டிய தொகையைச் சேர்த்துவிடுகின்றேன்" என்று கூறி நகையை அவரிடம் கொடுத்துவிட்டு வீட்டுக்கு வேகமாக ஓடினர்.

வீட்டுக்குச் சென்று மனைவியைப் பார்த்ததும் இவருக்குக் கோபம் வந்துவிட்டது. "உன்னுடைய மூக்குத்தி எங்கே? நீ அதை எங்கே போட்டாய்? நீ அதை விரைவில் கொண்டுவா" என்று மனைவியை அதட்டினர். லக்ஷ்மிபாய் நடுநடுங்கிப் போனள். "நாதா! மூக்குத்தியைக் குளிக்கும்போது கழற்றி வைத்தேன். அதை எங்குவைத்தேனே ஞாபகத்துக்கு வரவில்லை. சற்றுப் பொறுங்கள். இதோ தேடிக் கொண்டு வருகின்றேன்" என்று கணவனுக்குச் சமாதானம் சொல்லிவிட்டு வீட்டுக்குள் நுழைந்து பகவானைப் பிரார்த்தித்தாள். "இறைவா! உம் பக்தனுக்கென்றே நகையை அர்ப்பணம் செய்தேன். உம் அடியார்களின் துயரைப் போக்குவது உம்கடன். அடியேன் உம் காரியத்தை மேற்கொண்டால் நீ மகிழ்ச்சியன்ருே அடையவேண்டும்? அப்படி இருக்க நீ இச்சங்கடத்தில் என்னை அழுத்தலாமா? உன்னை நம்பினவர்களைத் துன்பத்திற்குள்ளாக்கலாமா? உன் அடியார்களின் துயரைப் போக்குவது உம் காரியம் அன்ருே? நாராயணு, கோவிந்தா, என்னைக் காப்பது உம் பாரம்" என்று இறைவனைப் பிரார்த்தித்தாள். ரகுநாத

ராவ் லக்ஷ்மிபாயின் அறைக்குள் சென்று நகையைக் கொண்டு வருகின்றாயா இல்லையா என்று அதட்டினர். லக்ஷ்மிபாய் பகவான் மீது பாரத்தைப் போட்டுவிட்டு அறைக்குள் நகையைத் தேடுவதுபோன்று பாசாங்கு செய்தாள். அவ்வறைக்குள் இதுவரையில் கண்டிராத மூக்குத்தி ஒன்று அகப்பட்டது. அதை எடுத்துத் தன் கணவன் கையில் கொடுத்தாள். ரகுநாதராவ் அதை வாங்கிப் பார்த்ததும் திகைப்பும் ஆச்சரியமும் அடைந்தார். "பெண்ணே! நான் நகைவியாபாரியாயிருந்தும் இவ்வளவு ஜோதியுடைய நகையை இதுவரையிலும் கண்டதில்லை. இந்நகையில் பதித்திருக்கும் கற்களைக்கொண்டு இவ்வுலகம் முழுவதையும் விலைக்கு வாங்கிவிடலாம். இந்நகை உன்னுடையது அன்று. இதைப் பார்த்து நான் மகிழ்ச்சி அடைந்திருந்தாலும் இதைப் பற்றிய உண்மையை அறிய விரும்புகின்றேன். நீ இதைப்பற்றிய உண்மையைக் கூறுவாயாக" என்று மனைவியை வேண்டிக்கொண்டார். "நாதா, உம்மிடம் வந்து பொருள்தானம் வேண்டிய வேதியர் துக்கப்பட்டவராக என்னை அடைந்து ஆயிரம் பொன் கேட்டார். அவருடைய துயரைப் போக்கும் பொருட்டு என் மூக்குத்தியை அவரிடம் கொடுத்தேன்" என்றாள் கற்பிற் சிறந்த காரிகை. இப்பொழுது தான் ரகுநாதராவுக்கு ஞானக்கண் திறந்தது. "மாதருள் திலகமே! உன்னிடம் மூக்குத்தி வாங்கியவரும், என்னைப் பொருள் கேட்டுச் சோதித்தவரும் யாரென்று நினைக்கின்றாய்? உன்னையும் என்னையும் இவ்வுலகையும் படைத்த சர்வேசுவரனாகிய பண்டரி நாதனே ஆவார். அவர் நம்மைத் தடுத்து ஆட்கொள்ள இச்சூழ்ச்சியைச் செய்துள்ளார். உன்னிடம் மூக்குத்தி வாங்கி ரத்தின வியாபாரிபோல் நடித்து அதை என்னிடமே விற்கவந்தார். அறிவிலிகளாகிய நீயும் நானும் அவரைக் கண்டுகொள்ளாது போனோம். அவரைக் கடையில்தான் இருக்கச் சொல்லி வந்தேன்" என்று பகர்ந்துவிட்டுக் கடைக்கு ஓடினர். அங்குப் பகவானைக் காணவில்லை. தாயைப் பிரிந்த கன்றுபோல் கதறினர். "கருணைக் கடலே, தயாபரனே! அடியேனை ஆட்கொண்ட விதம்தான் என்னே! முக்தி நெறி அறியாத மூர்க்கரோடு இருந்த என்னைப் பக்திநெறி அறிவித்த உம் அருள் பெற்றிதான் என்னே! பணத்தாசை பிடித்துப் பேயெனத் திரிந்தேன். பொருளையே தெய்வமென மதித்தேன். மண்ணும் பொன்னும் ஒன்றென அறியாமல் போனேன். எத்தனையோ பேர்களை மோசடி செய்திருக்கிறேன். செல்வச் செருக்கினால் பெரியோர்களை இழித்துப் பேசியிருக்கின்றேன். செல்வத்தைப் பூதம்போல் காத்து வந்தேனேயன்றித் திக்கற்றவர்களுக்குக்கொடுத்து உதவி செய்தேனா! பயனில்லாத பணத்தைப் பயனுடையதாகப் பயன் படுத்துவதன்றோ அறிவுடைமை! பணப்பெருமையால் தலைகால் தெரியாமல் நான் நடந்துகொண்டதுதான் என்னே! தீனதயாளா! இப்பொழுது நான் உன் கிருபையை நாடுகின்றேன். என் உடம்பெல்லாம் நெஞ்சாகமாறி உன்னைக்குறித்து உருக அருள்புரிவாயாக. உன்னைத்தவிர நான் யாரையும் பற்றமாட்டேன்" என்று பக்தியால் ஆடிப் பாடிக்கொண்டு கடையிலிருந்து வீட்டுக்குத் திரும்பினர். அவருடைய முகத்தில் தேஜஸ் வெளிப்பட்டதை லக்ஷ்மிபாய் கண்டு பெருமகிழ்ச்சியடைந்தாள்.

அன்றுமுதல் ரகுநாதராவ் வாழ்க்கையில் பெரிய திருப்பம் ஏற்பட்டது. பகவான் தந்த பொருள் பகவானுடைய அடியார்களுக்கு உரியதுஎன்றுகூறிப் பகவத் கைங்கரியங்களில் தம்முடைய பணத்தைச் செலவிட ஆரம்பித்தார். கோவில் கட்டல், கல்விச்சாலைகள் அமைத்தல் ஆகிய பணிகளில் தமது பணத்தைச் செலவிட்டார். பகவன் நாமத்தை ஓதிப் பக்தி பெருக நாதப்பிரம்ம மடம் ஒன்றை ஸ்தாபித்தார். ஆங்கு பக்தகோடிகளைத் திரட்டிப் பகவானது நாமங்கள் எங்கும் எதிரொலி செய்யுமாறு பகவன் நாம முழக்கம் செய்தார். பகவன் நாம உச்சாரணையில் கலந்துகொண்ட யாவர்க்கும் நல்லமுது படைத்தார். ஊரிலுள்ள மக்கள் ரகுநாதராவின் மனமாற்றத்தைக்கண்டு மகிழ்ச்சியடைந்தனர். அவரிடமிருந்த பக்தியைக் கண்டு மக்கள் அவர்மீது விசுவாசம் கொண்டனர். பக்தர் கூட்டத்துக்குத் தலைமை வகித்து அவர் பஜனை பாடும்பொழுது அதைக் கேட்டவர்களெல்லாரும் பக்தர்கள் மயமாக மாறியமைந்தனர். (தொடரும்)

ஸ்ரீ விஷ்ணு ஸஹஸ்ர நாம ஸ்தோத்ரம்

62. पवित्रम् பவித்ரம்—தூய்மைப்படுத்தும் ரிஷியாகவும் மந்த்ரமாகவும் தேவதையாகவும் இருப்பவன்.

ஐம்பூதங்களுள் முதல் பூதமாகிய ஆகாசம் ஒன்றும் செய்வதில்லை. அது யாண்டும் தூய தாகவே இருந்து வருகிறது. மற்ற நான்கு பூதங்கள் செயல்புரிகின்றன. அவைகள் புரிகின்ற செயல்களில் மிக முக்கியமானது அவைகளோடு தொடர்புகொள்கின்ற மற்றவைகளைத் தூயதாக்குதலாம். மலத்தைப் பூமியில் புதைத்தால் சிலநாட்களில் அந்த அழுக்கு மண்ணை மாறித் தூயதாகிறது. அதே விதத்தில் நீரில் படிகின்ற அழுக்குகளையும் சிலநாட்களில் நீர் தூயதாக மாற்றியமைக்கிறது. தீயோ உடனடியாகக் காய்ச்சிப் பொருள்களைத் தூயதாக்குகிறது. காற்று செய்கிற செயலும் அத்தகையதேயாம். ஆகவே ஐம்பூதங்களிடத்தும் தூய்மை நிறைந்திருக்கிறது. அவைகளைச் சார்கின்ற ஏனைய மலினப்பொருள்களைத் தூயதாகத் திருத்தியமைக்கும் வல்லமை அவைகளுக்கு உண்டு. ஆதலால் இந்த ஐம்பூதங்களும் பவித்ரம் என்னும் நாமம் படைத்துள்ள ரிஷியின் சொரூபமாக இலங்குகின்றன.

அறியாமையினால் மனிதன் தன் திரிகரணங்களாகிய மனம், மொழி, மெய் ஆகியவைகளின் வாயிலாகத் தன்னை மலினப்படுத்திக் கொள்கின்றான். தூயபொருளைப்பற்றி நினைக்கும்பொழுதே மனதின்கண் உள்ள மாசு தானாக அகலுகிறது. அதன் விளைவாக மனிதனுக்குச் சாந்தி அல்லது அமைதி வருகிறது. சுத்தமான சொற்களே ஒருவன் வாயிலிருந்து வெளியாகுமாகில் மற்றவர்களுக்கு அது திருப்தியையும் சம்மதத்தையும் உண்டு பண்ணுகிறது. அதே விதத்தில் அவன் புரிகின்ற செயலில் புனிதம் பொழியுமாகில் அது சிற்றுயிர்களுக்கும் சம்மதமாகிறது. ஆகவே, பவித்ரத்தைப் பயன்படுத்துதற்கேற்ப மனிதன் தானே மேலோனாகின்றான். அவன் செயலை உலகம் உவகையுடன் ஏற்றுக்கொள்கிறது. இங்ஙனம் நிகழ்வது மந்த்ரத்தின் செயலாம்.

மூன்றாவதாக மனிதன் தானே எண்ண மயமாக இருக்கின்றான். அவன் மனபரிபாகத்துக்கு ஏற்ற பாங்கில் அவன் எண்ணங்கள் தூய்மையாகின்றன. எண்ணத்தில் அவன் மேலோங்குவானாகில் தெய்வ சொரூபமாகத் திருந்தி அமைகின்றான். பவித்ரம் என்னும் மந்த்ரத்தில் இத்தகைய மேலான பாங்குகள் அமைந்திருக்கின்றன.

63. मङ्गलं परम् மங்களம் பரம்—மங்களத்தையும் மேலான பாங்கையும் உண்டு பண்ணுபவன்.

மனிதனுடைய நல்வாழ்வுக்கு இன்றியமையாத பாங்குகள் அனைத்தும் மங்களம்எனப் பகரப் பெறுகின்றன. அத்தகைய நலனுக்கு உறைவிடம் பகவான் ஆதலால் கேட்டைத் தவிர்க்கவும் நலனை வளர்க்கவும் உற்ற உபாயம் பகவத் சிந்தனையில் ஆழ்ந்து மூழ்கியிருப்பதாம்.

அடுத்தபடியாகப் பரம் என்னும் சொல் இகம் என்பதற்கு எதிரிடையாய் இருக்கிறது. ஐம்பொறிகளால் நுகரப்படும் உலகம் இகம் எனப்படுகிறது. ஐம்பொறிகளுக்கப்பால் இருப்பது பரவஸ்து அல்லது பரம் எனப் பகரப்படுகிறது. இனி, மனதைக் கருவியாய் வைத்துக்கொண்டு ஐம்பொறிகள் மூலமாக நுகரப்படுவது இகம். ஐம்பொறிகளை ஒதுக்கி வைத்துவிட்டு மனம் முற்றிலும் தன்மயமாய் இருக்குமாகில் அது பரத்தை நுகர்கிறது. விஷயாதிகளுக்கு ஆங்கு இடமில்லை. விஷ்ணு ஏகோபித்து மங்களமாகவும் பரமாகவும் நிலைத்திருப்பது சாதகனுக்கு நல்லதொரு வாய்ப்பாம். தன்னை மேலோனாகத் திருத்தியமைத்துக்கொள்ளுதற்கு இத்தகைய மேலாம் பொருளைப்பற்றிச் சிந்திப்பதும் அதனோடு மானசீகமாகத் தொடர்பு கொள்வதும் உற்ற உபாயங்களாம்.

64. ईशानः ஈசான: — அனைத்தையும் அடக்கியாள்பவன்.

மக்களுள் வேந்தனாயிருப்பவன் மஹாவிஷ்ணுவின் அம்சம் வாய்க்கப்பெற்றவன் என்பது ஐதிகம். வேந்தனாயிருக்கும் தகைமை மனிதனுக்கு எளிதில் வாய்க்காது. விளையும் பயிர் முளையிலே தெரியும் என்பது கோட்பாடு. மக்களுள் சிலர் சிறுவயதிலிருந்தே ஆளும் திறமையுடன் வாழ்ந்து வருகின்றனர்.

அது அவர்களுக்கு யாரும் சொல்லிக்கொடுக்காமல் தானே இயல்பாய் அவர்களிடம் உருவெடுக்கிறது. எங்குச் சென்றாலும் எந்தச் சூழ்நிலையில் இருந்தாலும் மற்றவர்களை நல்லவழியில் நடாத்தும் திறமை தானாக ஒரு சிலருக்கு வந்தமைகிறது. அக்காரணத்தை முன்னிட்டே அரசன் ஒருவன் இறைவனுக்கு நிகரானவன் எனக் கருதப்படுகின்றான். தலைவனாவது தகைமையை முன்னிட்டாகும். இது வாழ்க்கையைப் பற்றிய கோட்பாடு. தகைமை விளையாட்டுத் தனமாக வந்தமையாது. தொண்டு புரிபவனே ஆளத் தகுதியுடையவனாகின்றான். கீழ்ப்படிந்து நடப்பவனே பிறகு பிறரை நல்வழியில்நடாத்தவல்லவனாகின்றான். ஆகையால் மானுடன் ஒருவன் படைத்திருக்கவேண்டிய மேலாம் பாங்குகளில் ஒன்றாகிய ஆளும் திறமையைப் பெறக் கடமைப்பட்டிருக்கின்றான். அதற்காக என்று தன்னைப் பக்குவப்படுத்துவது பணிவிடை பண்ணுவதன் வாயிலாகவேயாம். பணிவிடை பண்ணுபவனே இறைவனுக்கு நல்ல தொண்டனாகின்றான். ஆதலால் மானுட தேகமே மஹா விஷ்ணுவின் கோயிலென்று கருதப்படுகின்றது. ஆலயத்திற்குச் சென்று அங்கு ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்ற மூர்த்தியைக் கைகூப்பி வணங்கிவிட்டுத் திரும்புதல் வழிபாடாகாது. தொண்டு செய்வதே சாலச்சிறந்த வழிபாடாகிறது. தொண்டன் ஒருவனிடம் அகங்காரம் இருக்கலாகாது. பக்தியும் பணிவும் அமையப் பெற்றவனாக இருந்துகொண்டு தொண்டு புரிகின்றவனே தெய்வத்துக்கு உகந்தவனாகின்றான்.

காக்கும் தொழில் புரிபவனாகத் திகழ்பவன் திருமால். அண்டங்களின் நடைமுறை ஒழுங்காகச் செயல்பட்டு வருகின்றது. பரமனுடைய ஆணைக்கு உட்பட்டே அவையாவும் ஒழுங்காக இயங்கிவருகின்றன. ஆகையினால் அப்பெரிய வஸ்துவை ஈசானன் அல்லது ஆளும் திறமை வாய்ந்தவன் எனப் போற்றுவது பொருத்தமானது.

65 प्राणदः ப்ராணத: உயிர்களை ஓம்புபவன்.

எரிகின்ற தீபத்துக்கு இடையறாது எண்ணெய் வந்து அமைந்தாகவேண்டும். அதேபாங்கில் வாழ்ந்திருக்கும்பிராணிகளுக்குப் பிராணன் என்னும் உயிர்ச்சத்து இடையறாது வந்தமைந்தாகவேண்டும். சிசு ஒன்று பிறந்து பூமிக்கு வந்தவுடனே சுவாசிக்க ஆரம்பிக்கிறது. பிறகு வாழ்ந்திருக்கும் காலமெல்லாம் அது சுவாசித்துக்கொண்டே இருக்கிறது. இரவென்றும் பகலென்றும் சுவாசிப்பதற்கு வேற்றுமையில்லை. சுவாசிப்பது நின்றுவிட்டால் பிராணன் போய்விட்டது என்றும் உயிர்போய்விட்டது என்றும் இயம்புகிறோம். மற்று, வாழ்ந்திருக்கும் காலம் முழுவதும் சுவாசிப்பதன் வாயிலாக உயிர்த்தத்துவம் ஓயாது புதுப்பிக்கப்படுகின்றது.

ஒவ்வொரு ஜீவனுக்கும் இவ்வளவு காலம் வாழ்ந்திருத்தல் என்னும் நியதி அமைந்துள்ளது. அது பரியந்தம் அந்த ஜீவன் இவ்வுலகில் வாழ்ந்திருக்கவேண்டும். அந்த நியதி நிறைவேறும் வரையில் பிராணன் அந்த ஜீவாத்மனுக்கு ஓயாது வழங்கப்படுகிறது. அந்த ஜீவனுடைய ஆயுளை முடிவுக்குக் கொண்டு வருவதற்குப் பிராணன் துண்டிக்கப்பட வேண்டும். அது துண்டிக்கப்படுமிடத்து அந்த ஜீவன் தானாக உயிர் துறந்ததாகிறது. ஆக ஜீவர்கள் வாழ்ந்திருப்பதற்கும் மடிந்துபட்டுப் போதற்கும் முகாமையாயிருப்பது பிராணன் என்னும் உயிர்ச்சக்தியாகும்.

66. प्राणः ப்ராண: உயிர்க்குயிரானவன்.

பிராணன் என்னும் பதம் உயிர்த்தத்துவமாகக் காற்றில் கலந்திருக்கும் பகுதிக்கு வழங்கப்படுகிறது. பிராணன் என்னும் பதம் மேலான நிலையை வைத்து ஆராயுங்கால் பரதத்துவமாக இலங்குகின்ற மெய்ப்பொருளையே குறிக்கிறது. அந்நிலையில் அவன் முக்கியப் பிராணன் என மொழியப் பெறுகிறான். ஆத்மா என்னும் சொல் ஜீவாத்மனுக்கும் பொருந்துகிறது; பரமாத்மனுக்கும் பொருந்துகிறது. அதே விதத்தில் பிராணன் என்னும் பதம் ஜீவாத்மனையும் குறிக்கிறது; பரமாத்மனையும் குறிக்கிறது. ஜீவர்கள் பரமாத்மாவை வணங்குமிடத்துப் பிராணநாதா என இயம்புகின்றார்கள். ஆகவே, எப்பொருள் உயிர்க்குயிராய் இலங்குகின்றதோ, எப்பொருள் பிரபஞ்சமெங்குமுள்ள உயிர்களனைத்தையும் ஓம்பி வருகின்றதோ அப்பொருள் பிராணன் எனப் போற்றப்படுகிறது. பரமாத்மாவுக்கே இப்பெயர் வந்தமைந்திருக்கிறது.

ஞான வெட்டியான்-6

பாண்டவர்களும் கௌரவர்களும் தாயாதிகள். அவர்களுள் பாண்டவர்கள் நல்லவர்கள்; அறநெறி பிசகாதவர்கள். கௌரவர்களோ அதற்கு நேர்மாறான பாங்குடையவர்கள்; பாண்டவர்களைப் பலவந்தமாகச் சூதாட்டத்துக்கு இழுத்து அவர்களுக்குரியதாயிருந்த இந்திரப்பிரஸ்தத்தை வஞ்சகமாக அபகரித்துக் கொண்டனர். பிறகு அவர்கள் பாண்டவர்கள் மீது நிபந்தனை ஒன்று சுமத்தினர். பன்னிரண்டு வருஷகாலம் அவர்கள் வனவாசம் பண்ணவேண்டும். பிறகு ஒரு வருஷகாலம் அஞ்ஞாதவாசம் பண்ணவேண்டும். அதாவது அவர்கள் மறைந்திருந்து வாழவேண்டும். அப்படி வாழ்கின்ற காலத்தில் அவர்கள் கண்டு பிடிக்கப்பட்டால் மீண்டும் பன்னிரண்டு வருஷகாலம் வனவாசம் பண்ணவேண்டும். இந்த நிபந்தனைக்குப் பாண்டவர்கள் உட்பட்டார்கள். வனத்தில் வசித்து வந்த பன்னிரண்டு வருஷங்களை நன்கு அவர்கள் பயன்படுத்தி வந்தனர்.

பாண்டவர்களுடைய வனவாசம் முற்றுப் பெறுதற்கு இன்னும் மூன்று நாட்கள்தான் பாக்கி. அப்பொழுது காலையில் தங்கள் ஆச்ரமத்துக்கெதிரே ஐவரும் அமர்ந்திருந்தனர். முனிவர் ஒருவர் அங்கு ஓடிவந்தார். வந்தவர் தாம் வழிபாட்டுக்காகப் பயன்படுத்தி வந்த அரணிக்கட்டையை மான் ஒன்று தன் கொம்பில் மாட்டிக்கொண்டு ஓடிப்போயிற்று என்று முறையிட்டார். அந்த அரணிக்கட்டையை மீட்டெடுத்துத் தமக்குத் தரும்படி அவர் வேண்டினார்.

வனத்தில் அரணிக்கட்டைகளுக்குப் பஞ்சமில்லை. இக்காலத்தவர்கள் தீக்குச்சியைப் பயன்படுத்துவது போன்று அக்காலத்தவர்களுக்கு எளிதில் அரணிக்கட்டை அகப்படக் கூடியதாய் இருந்தது. இந்நிலையைப் பாண்டவர்கள் அம்முனிவருக்கு எடுத்துரைக்கலாம். தங்களுக்கு அமைந்திருந்த ஏனைய முக்கியமான கடமைகளையும் எடுத்துரைத்திருக்கலாம். ஆனால் அவர்கள் அங்ஙனம் செய்யவில்லை. ஐவரும் எழுந்து மானைத் தேடிக்கொண்டு ஓடினார்கள்.

'இயல்வது கரவேல்' என்பது கோட்பாடு. ஒரு மனிதனுக்கு ஒரு காரியத்தைச் செய்து சாதிப்பது எளிது என்றால் அம்மனிதன் அதை நிறைவேற்றிவைக்க உடனே முற்படவேண்டும். அப்படிச் செய்ய மறுத்தால் அல்லது தயங்கினால் அவன் படைத்துள்ள ஆற்றல் தானாகவே குறைகிறது. ஐவரும் மானைத்தேடி ஓடினார்கள். அது ஒரு வேளை கண்ணுக்குத் தென்படுவதும் அடுத்த வேளை மறைந்து பட்டுப்போவதுமாக இருந்தது. பாண்டவர்களை அவர்கள் ஆச்ரமத்திலின்று நெடுந்தூரம் சாமர்த்தியம் நிறைந்த அந்த மான் இழுத்துச் சென்றது. பிறகு அந்த மான் மாயமாய் மறைந்து போயிற்று. ஐவரும் தாகத்தையும் பசியையும் தாங்க முடியாதபடி சோர்ந்து ஒரு மரத்தடியில் உட்கார்ந்தார்கள். அப்படி அமர்ந்தவர்கள் தங்களுடைய நிலைமையை விமர்சனம் பண்ணினார்கள். பன்னிரண்டு வருஷகாலம் அவர்கள் புரிந்தது தவமன்று. ஏனென்றால் முறையாகத் தவம் புரிகின்றவர்களுக்குப் பசியையும் தாகத்தையும் வேண்டியவாறு சமாளிக்கும் திறமை வந்தமைகிறது. அத்திறமை சிறிதேனும் தங்களுக்கு இல்லை என்பது அவர்களுக்கு வெளியாயிற்று. மிக எளிய காரியமாகிய ஓர் அரணிக்கட்டையை ஒரு மானின் கொம்பினின்று மீட்டெடுக்க இயலாதவர்கள் இனி வரப்போகும் யுத்தத்தில் ஒன்றுமே செய்ய முடியாது என்பது அவர்கள் அடைந்திருந்த ஏமாற்றம்.

பரிதாபகரமான தங்கள் நிலைமையைப் பிறகு ஆராய்ச்சி பண்ணலாமென எண்ணிக்கொண்டு தாக சாந்திக்காகத் தண்ணீரை நாடி இளையவனை சகதேவனை அவர்கள் அனுப்பினார்கள். நெடுநேரமாகியும் அவன் திரும்பிவரவில்லை. அதன் பிறகு அவர்கள் நகுலனை அனுப்பினார்கள்; அவனும் திரும்பிவரவில்லை. முறையே அர்ஜுனனும் பீமனும் சென்றார்கள்; நால்வரும் திரும்பி வரவேயில்லை. திண்டாடிக்கொண்டு தர்மராஜனாகிய யுதிஷ்டிரன் தம்பிமார் நால்வரையும் தேடிச் சென்றான். அந்தோ! அவன் கண்ட காட்சி அவனுக்குப் பெரிய வியப்பை ஊட்டியது. ஒரு பொய்கைக் கரை

யில் நால்வரும் செத்துப்போனவர்கள்போன்று தரையில் படுத்துக்கிடந்தார்கள். அவர்களைப் பார்த்ததும் கண்ணீர் சிந்திக்கொண்டு யுதிஷ்டிரன் தேம்பித் தேம்பி அழுதான். ''நாங்கள் கூறிய சபதத்தின் முடிவு இதுதானோ? நம் தாயாதிகள் இனி மகிழ்வுற்றிருப்பார்கள். என் தாய்முன்பும் திரௌபதியின் முன்பும் நான் எந்த முகத்தைக் கொண்டு போக முடியும்? மரணம் ஏன் என்னையும் எடுத்து விழுங்கவில்லை? பரம்பொருள் எங்களிடம் கருணை வைக்கவில்லை. போர் புரிந்ததன் அறிகுறி எதையும் நான் இங்குக் காண்கிறேனல்லேன். என் சகோதரர்களின் முகத்தில் மரணத்தின் அறிகுறி ஏதும் இல்லை.'' இவ்வாறு யுதிஷ்டிரன் வருந்திக்கொண்டிருந்தபோது அவன் தாக சாந்தி செய்தபின் இவ்விஷயத்தை ஆராய்ச்சி பண்ணலாம் என்று தண்ணீர் குடிக்கச் சென்றான். அப்போது ஓர் அசரீரி அவன் காதில் விழுந்தது: 'இந்தப் பொய்கை எனக்குரியது; என் உத்திரவில்லாமல் நீ நீர் அருந்தலாகாது' என்பது அந்த அசரீரியாம்.

யுதிஷ்டிரன் கொடுத்த விடை: "பொய்கை உன்னுடையதென்றால் உன் உத்திரவின்றி நான் அதினின்று தண்ணீர் எடுக்கலாகாது." ஆனால் இத்தகைய விடை முன்பே வந்த தம்பிமார் நால்வரிடமிருந்தும் வரவில்லை. ''பொய்கை பொதுவுடைமையானது. நீ யாரடா தனி உரிமை பாராட்டுவதற்கு?'' என்று அவர்கள் அந்த அசரீரியை ஏளனம் பண்ணினார்கள். ஆகையினால்தான் அவர்கள் அக்கதிக்கு ஆளானார்கள். அவ்விஷயத்தை அசரீரி யுதிஷ்டிரனுக்கு எடுத்துச் சொல்லிற்று. மேலும், 'நான் கேட்கின்ற கேள்விகளுக்கு நீ சரியாக விடை சொன்னால் நால்வரையும் உயிர்ப்பித்துத் தருவேன்' என்று அசரீரி கூறியது.

யுதிஷ்டிரனும் அதற்குச் சம்மதிக்கவே, அசரீரி கேள்விகளைக் கிளப்பியது.

வினா 1: மனிதன் மேலோன் ஆவது எப்படி?

விடை: தவத்தின் வாயிலாக மனிதன் மேலோனாகிறான்.

வினா 2: பிராம்மணன் என்பவன் யார்?

விடை: 'எல்லாருடைய நலத்தின் பொருட்டுத் தன்னை ஒப்படைப்பவன்தான் பிராம்மணன்.'

வினா 3: செத்தவனோடு உடன் வருபவன் யார்?

விடை: 'தர்மம்.'

வினா 4: 'இன்பம் யாது?'

விடை: 'நல்லொழுக்கத்தில் நிலைத்திருப்பது.'

வினா 5: 'எதை ஒதுக்கினால் மனிதன் எல்லாராலும் நேசிக்கப்படுகிறான்?'

விடை: 'தற்பெருமையை.'

வினா 6: 'எதைத் துறப்பதால் மனிதன் பொருள் படைத்தவனாகிறான்?'

விடை: 'ஆசையைத் துறப்பதால்.'

வினா 7: அமைதி எங்கு உள்ளது?

விடை: 'மனத்திருப்தியில்.'

வினா 8: 'துயரத்துக்குப் பிறப்பிடம் எது?'

விடை: 'அக்ஞானம்.'

வினா 9: 'அதிசயங்களுள் பேரதிசயம் எது?

விடை: 'கணக்கற்ற பேர் இடையறாது மடிந்துகொண்டிருப்பதைப் பார்த்தும் மனிதன் தான் மட்டும் சாசுவதமாக வாழ்ந்திருக்கப் போவதாக நினைப்பது.'

இவ்வாறு அசரீரி கேட்ட கேள்விகளுக்கெல்லாம் யுதிஷ்டிரன் பொருத்தமான விடையளித்தான். 'யாராவது ஒருவனைத்தான் உயிர்ப்பித்துத் தருவேன்; யார் வேண்டும்?' என்று அசரீரி கேட்டதற்கு யுதிஷ்டிரன் சிறிது சிந்தித்துப் பார்த்து விட்டு, 'நகுலனைத் தா' என்று பதில் கூறினான்.

அசரீரி: ''உன் சொந்தத் தம்பிமாராகிய பீமனும் அர்ஜுனனும் தலைத்தரமான போர் வீரர்கள். வரப்போகும் யுத்தத்தில் அவர்கள் உனக்கு உதவி புரிவது போன்று நகுலன் செய்யமாட்டான். அப்படியிருக்க மாற்றாந் தாயின் மகனாகிய இரண்டாம் தரமான போர் வீரனை நீ ஏன் கேட்கின்றாய்?''

தர்மன்: ''என் தாய்மார்கள் இருவர். அவர்களுக்கிடையில் நான் சொந்தத்தாய் என்றும் மாற்றாந்தாய் என்றும் வேற்றுமை பாராட்டுவது கிடையவே கிடையாது. முதல் தாயாகிய குந்திக்கு நான் மகனாக இருக்கிறேன். இரண்டாம் தாயாகிய மாத்ரிக்கு ஒரு மகன் வேண்டுமென்று நான் நகுலனை வேண்டு

கிறேன்."

அசரீரி: "உன் பரந்த மனப்பான்மையைப் பாராட்டுகிறேன். நால்வரையும் திருப்பித் தந்து விடுகிறேன். அதற்கு முன்பு நீ ஒரு வரம் கேள்."

தர்மன்: "முனிவருக்குரிய அரணிக்கட்டையை மான் ஒன்று அபகரித்துக்கொண்டு போய்விட்டது. அதைத் தேடித் தந்தால் நான் நன்றியுடையவனாக இருப்பேன்."

அசரீரி உடனே சரீரம் எடுத்துத் தர்ம தேவதையாக மாறியது. தர்ம தேவதை: "உனக்கு என்று வரம் கேட்காமல் ஒரு முனிவருக்காக வரம் கேட்பதைப்பற்றி நான் மெச்சுகிறேன். மேலும் ஒரு வரம் கேள்."

தர்மன்: "நான் செய்யக்கூடிய ஒன்றை வரமாக யாரிடமும் கேட்பது கிடையவே கிடையாது. பன்னிரண்டு வருஷம் நாங்கள் புரிந்த தவத்தின் விளைவு ஒன்றுமில்லாது போய்விட்டது. பசியும் தாகமும் எங்களை வாட்டுவதே அதற்குச் சான்று. மேலும், இந்த அரணிக்கட்டையை மானிடமிருந்து பெறாதது நாங்கள் ஒன்றுக்கும் உதவாதவர்கள் என்பதற்குச் சான்று. தர்மசங்கடத்துடன் தங்களிடமிருந்து மற்றொரு வரம் கேட்கின்றேன். நாங்கள் ஐவரும் யாரிடத்திலிருந்தும் எதையும் தானமாக ஏற்றுக்கொள்ளாத விரதம் படைத்தவர்கள். அப்படியிருந்தும் உங்களிடமிருந்து தானம் ஒன்றைக் கேட்கும் நெருக்கடி எங்களுக்கு வந்துள்ளது. இன்னும் இரண்டு நாட்கள் பாக்கி; அத்துடன் எங்களுடைய வனவாசம் முடிவுறுகிறது. அடுத்தபடியாக நாங்கள் அக்ஞாதவாசத்தில் பிரவேசிக்க வேண்டும். பிரவேசித்தான பிறகு எங்களுக்கு எதிரிகளாயிருக்கின்ற தாயாதிகளாகிய கௌரவர்கள் எங்களைக் கண்டு பிடித்துவிட்டால் மறுபடியும் பன்னிரண்டு வருஷங்கள் நாங்கள் வனவாசம் பண்ணவேண்டும். தவம் புரிந்தும் நாங்கள் ஒரு பலனும் அடையாதிருந்தது முதல் தோல்வி. மானிடமிருந்து அரணிக்கட்டையைப் பெற முடியாதது இரண்டாவது தோல்வி. மூன்றாவதாக எங்கள் க்ஷத்திரிய தர்மத்தினின்று நாங்கள் பிசகுகின்றோம். கை நீட்டி யாரிடமிருந்தும் நாங்கள் ஒன்றும் வாங்குவது கிடையாது. கேட்கின்றவர்களுக்குக் கரவாது தருவது ஒன்றே நாங்கள் புரியும் அறச்செயல். இப்போது நாங்கள் அதினின்றும் பிசகியுள்ளோம்.

தர்மதேவதை: "நீங்கள் தர்மத்தினின்று பிசகியவர்களல்லர். வேண்டுமென்றே உங்களைச் சோதிப்பதற்கு இந்தச் சூழ்நிலையை நான் உண்டுபண்ணியுள்ளேன். நான் உன் தெய்விகத் தந்தையாகிய யமதர்ம ராஜன்; நானே மானாக வந்தவன். அதனால் கவலைப் படவேண்டாம். நெருக்கடியினின்று நீங்கள் மீளுகிற வரத்தை நான் தருகிறேன். எதிரிகளிடமிருந்து தப்பித்துக்கொள்ளுவதற்காக நீங்கள் கடல் கடந்து வெளிநாட்டிற்குப் போகமாட்டீர்கள்; அப்படி ஓடுவது கோழைத்தனம். நீங்கள் எங்கேயோ குகையில் போய் மறைந்திருக்க மாட்டீர்கள்; அப்படி மறைந்திருப்பது ஆண்மைக்கு அறிகுறியாகாது. அவ்வாறு வீண் பொழுது போக்குவது தற்கொலை செய்துகொள்வதற்கு நிகர். அத்தகைய அற்பச் செயலை நீங்கள் செய்யமாட்டீர்கள். திரௌபதி உட்பட நீங்கள் ஆறுபேரும் ஜனசமூகத்திலேயே வாழ்ந்திருப்பீர்கள். அப்படி வாழ்ந்திருக்கின்ற நீங்கள் யாருக்கும் தலைச்சுமையாயிருக்கமாட்டீர்கள். உலகுக்குப் பயன்படுகிற நற்கருமங்களையே நீங்கள் நிறைவேற்றிக் கொண்டிருப்பீர்கள். அந்த ஒருவருஷ காலத்தில் சமுதாயத்தினின்று நீங்கள் பெறுகின்ற ஊதியத்தைவிடப் பன்மடங்கு அதிகமாக உங்கள் ஜீவிதம் சமுதாயத்துக்குப் பயன்படும். அந்த ஒரு வருஷத்தில் உங்களை யாரும் அடையாளம் கண்டுபிடித்துக்கொள்ள முடியாது. என் அனுக்கிரஹத்தால் மானுடனாகப் பிறந்துள்ள நீ தர்மத்தினின்று இம்மியளவும் பிசகாதிருக்கின்றாய் என்பதை நான் இப்பொழுது உன்னைச் சோதனை செய்து அறிந்துகொண்டேன். உன் மனப்பான்மையைப் பாராட்டுகின்றேன். காலத்தையும் தன் ஆற்றலையும் பயன்படுத்திக்கொள்கின்றவனே மக்களுள் சிறந்தவனாகின்றான். அந்த வாய்ப்பு உங்கள் ஐவரிடத்தும் பரிபூரணமாய் அமைந்திருக்கிறது. ஊக்கத்துடன் சென்றுவாருங்கள். நீங்கள் வெற்றிகரமாக அக்ஞாத வாசத்தை முடிப்பீர்கள். இவ்வாறு அவர்களிடம் சொல்லி விட்டுத் தர்மதேவதை மறைந்துபோயிற்று."

விவேகானந்தர் கடிதத்தில் கூறியருளிய கருத்து–5

விவேகானந்த சுவாமிகள் 1890ஆம் ஆண்டு பிப்ரவரி 14ஆம் தேதி அன்று பலராம்வஸு என்னும் நாமம் தாங்கியிருந்த கல்கத்தாவைச் சேர்ந்த பிரமுகருக்கு எழுதிய கடிதத்தில் கண்டுள்ள கருத்து இது: ''பலராம்வஸு என்பவர் ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சருடைய கிருஹஸ்த சிஷ்யராவார். ஒரிஸ்ஸா மாகாணத்தில் அவருக்கு ஜமீன் ஒன்று இருந்தது. ஆனால் அதை முன்னிட்டு அவர் தம்மை ஒரு பணக்காரராகக் கருதியதில்லை. உபாதிகளுள் மிகக் கொடியது பணத்தைப் பற்றிய உபாதியாகும். இரண்டு விதத்தில் இந்த உபாதியானது சாதாரண மனிதனை வாட்டுகிறது. 'நான் ஏழை' என்பது ஓர் உபாதி. 'நான் பணக்காரன்' என்பது மற்றொன்று. இவையிரண்டும் அஞ்ஞானத்தினின்று உருவெடுத்து வந்தவைகள். விவேகம் படைத்துள்ள மனிதன் இவ்விரண்டு உபாதிகளுக்கும் ஒருபொழுதும் ஆளாவதில்லை. இறைவனுடைய சிருஷ்டியில் மகோன்னத நிலைக்கு வந்திருப்பவன் மனிதன். ஆயினும் தன்னை அடியோடு தாழ்வுபடுத்திக் கொள்ளும் அறியாமை மனிதனிடத்துத் தான் இருக்கிறது. பறவைகளும் விலங்குகளும் தங்களைச் செல்வம் படைத்தவைகள் என்றோ வறுமையில் திண்டாடுபவைகள் என்றோ ஒரு பொழுதும் கருதுவதில்லை. அப்படி இருந்தும் அவை தங்களுக்கு ஏற்பட்டுள்ள தர்மத்தை முறையாகச் செய்து சாதிக்கின்றன. விவேகத்தோடு கூடியிருக்க வேண்டிய மனிதனிடத்து இத்தகைய சீரிய பாங்கைக் காண்பது அரிதிலும் அரிது.

ஒரு ஜமீன்தாரராயிருப்பதற்கிடையில் தாம் மட்டும் செல்வத்தைப்பற்றிய உபாதி சிறிதும் இல்லாதிருப்பது பாராட்டத்தக்க பெரிய விஷயமாகும். பணத்தைப்பற்றிய ஒரு விஷயத்தைப் பரமஹம்சதேவர் பகர்ந்திருக்கிறார். 'மானுடன் ஒருவன் பாலம் போன்று இருக்க வேண்டும். அதில் ஒரு பக்கம் தண்ணீர் வந்துகொண்டிருக்கின்றது. மற்றொரு பக்கம் அது வடிந்துகொண்டே இருக்கின்றது. அதேபோன்று மனிதன் பணத்தை நல்ல வழியில் சம்பாதிக்கவேண்டும். சம்பாதித்த பணத்தை நல்ல வழியில் செலவு செய்து கொண்டே இருக்கவேண்டும். ஒரு சிலருக்குச் சம்பாதிக்கத் தெரியும்; ஆனால் அவர்கள் செலவு பண்ணமாட்டார்கள். அத்தகையவர்கள் உலோபிகள். இன்னும் சிலருக்குச் சம்பாதிக்கத் தெரியாது. கையில் உள்ள பணத்தையெல்லாம் வீண் செலவு செய்து கொண்டிருப்பார்கள். அத்தகையவர்கள் அதிவிரைவில் வறுமை நோய்க்கு ஆளாவார்கள்.

அன்னதானம் செய்வதைப்பற்றி நீங்கள் எடுத்துள்ள தீர்மானம் பாராட்டத்தக்கது. அதைக் கொண்டுசெலுத்தவேண்டிய முறையையும் நீங்கள் நன்கு அறிந்திருக்கிறீர்கள். பிறருக்குக் கொடுக்க மறுக்கின்றவன் விலங்குக்கு நிகரானவன். தனக்காகவென்று தேடிக் கொள்வதை மட்டும் விலங்கு அறிகிறது. கொடையைப்பற்றி விலங்குக்கு ஒன்றும் தெரியாது. மக்களுள் சிலர் அத்தகைய விலங்கின் பான்மையுடன் பிறந்து வளர்ந்து வாழ்வை முடிவுக்குக் கொண்டு வருகிறார்கள். மக்களாய் வடிவெடுத்துள்ள அன்னவர்களை மாக்கள் என்றுதான் மொழியவேண்டும்.

உங்கள் இயல்புக்கேற்றபடி தாராளமாக அன்னதானத்தில் ஈடுபடுங்கள். ஆனால் அதில் வரம்பு கடந்து போய் விடலாகாது. உங்கள் செல்வத்தில் ஒரு பகுதியை அத்துறையில் செலவிட நீங்கள் கடமைப்பட்டிருக்கின்றீர்கள். அதன் விளைவாக உங்களுக்கு வந்து அமைந்துள்ள நலன் ஒன்றுமில்லை என்று தெரிவித்திருக்கிறீர்கள். நீங்கள் செய்கின்ற அன்னதானம் பேருக்கும் புகழுக்கும் அன்று; புண்ணியம் தேடுவதன் பொருட்டுமன்று. நிஷ்காமிய கர்மம் புரிகின்ற ஒரு கர்மயோகியின் நிலையில் இருந்துகொண்டு நீங்கள் தானம் செய்து வருகின்றீர்கள். அதை விடாது நிறைவேற்ற வேண்டும்என்கின்ற மனப்பான்மையே நீங்கள் பெற்றுள்ள ஊதியமாகும். எல்லா நிலைகளிலும் கரவாது வழங்கிக் கொண்டிருப்பவன் நல்ல மனிதன். அத்தகைய மனித நிலையை நீங்கள் பெற்றிருக்கிறீர்கள். முறையாக இப்பணியில் நீங்கள் ஈடுபடுவதன் விளைவாக நீங்கள் மேலும் பெறுவதற்கிருப்பது தெய்வத்

தன்மையாகும். கொடையாளி ஒருவனிடத்து இருக்கவேண்டிய நல்லியல்பை மட்டும் கடைப் பிடித்தல் வேண்டும். 'சிரத்தயா தேயம்; 'அசிரத்தயா தேயம்' என்பது முதற் கோட் பாடு. ஏற்கின்றவனை மனிதனுகக் கருதினல் ஊக்கத்தோடு படைக்க வேண்டும். மனம் நொந்து கொண்டோ ஏற்பவனை நிந்தித்துக் கொண்டோ வழங்கலாகாது. நல்ல மனப் பான்மையுடன் வழங்குகின்றவன் மக்களுள் மேலோனுகின்ருன். அதேமனிதன் தான் வழங்கு வதைத் தெய்வத்துக்குப் படைப்பதாய்க் கருதி வழங்குவானுகில் அவன்தெய்வத் தன்மை யில் ஊறி வளர்கிருன். 'பீயாதேயம்; ஹ்ரி யாதேயம்' என்பது அடுத்த கோட்பாடாகும். தானமாக மனிதனுக்கு வழங்குகின்ற பொழுது அச்சத்தோடும் நாணத்தோடும் வழங்கவேண் டும். அதே கொடையைத் தேவாராதனையாகச் செய்யுமிடத்து ஈசன் கொடுத்த செல்வத்தை ஈசனுக்கே திரும்பப் படைக்கிறேன் என்னும் உறுதியான மனப்பான்மையுடன் வழங்க வேண்டும். கொடையைப் பற்றிய மூன்ருவது கோட்பாடாக அமைந்திருப்பது 'சம்விதா தேயம்.' அதன் பொருள் பாத்திரம் அறிந்து வழங்கு என்பதாம். இக்கோட்பாடு உலக மனிதனுக்கு வந்துள்ளது. கெட்டவன் கையில் அதிகப் பணம் கொடுத்து அவனைக் கெடுத்து விடுதல் ஆகாது. நல்லவனுக்குப் படைக்க வேண்டியதை மறுக்கின்றவன் தானேவறுமைக் காளாகிருன். ஆனல் இக்கோட்பாடு கர்ம யோகத்துக்கு ஒவ்வாது. நல்லவன், கெட்ட வன் என்று அவன் பாகுபடுத்துவதில்லை. யாருக்கெல்லாம் எடுத்து அவன் வழங்குகின் ருனே அவர்களனைவரையும் அன்னவன் கட வுள் சொருபமாகக் கருதுகிருன். கடவுளின் செல்வத்தைக் கடவுளுக்கு எடுத்துப் படைக் கிறேன் என்னும் எண்ணம் படைத்திருப்பவ னுக்குப் பாத்திரம் அறிந்து பிச்சையிடு என் னும் கோட்பாடு அவசியமில்லை.

பரமஹம்சதேவர் அருளால் நீங்கள் படைத் திருப்பது நல்ல மனப்பான்மை. செல்வத்தைப் பற்றிய உபாதி உங்களை வந்து பீடிக்காதிருப் பது ஈசுவர அனுக்ரஹம் என்றுதான் இயம்ப வேண்டும். இதே மனப்பான்மையில் நீங்கள் யாண்டும் உறுதியாய் நிலைத்திருப்பீர்களாக. செய்கின்ற பணிவிடை அனைத்தையும் ஈசுவர ஆராதனையாகக் கருதுவீர்களாக. அந்த எண் ணம் உள்ளத்தில் ஓங்குதற்கேற்ப நல்லோர் களே உங்களை வந்து அணுகுவார்கள். நீங்கள் வழங்கும் செல்வம் வீண்போகாது, நீங்கள் கிருதார்த்தர் ஆவீர்கள். இப்பணியில் ஆழ்ந்து ஊறி வரவர ஈசனே இத்தனைவித உயிர்களாக வடிவெடுத்து விளையாடுகிருன் என்னும் உண் மையை அனுபூதியில் அறிய வருவீர்கள். அப் படி அறியும்பொழுது நீங்களே தெய்வ சொரு பமாக மாறியமைகின்றீர்கள்.முயற்சியால் மனி தன் ஒருவன் இப்பெருநிலையை அடைவது சாத் தியம். ஈசன் உங்களுக்குஅருள்புரிவாராக!

இங்ஙனம்,
விவேகானந்த

நோய்க்கு இடம்கொடேல்

இவ்வுலகம் இன்பம், துன்பம் ஆகிய இரண்டும் நிறைந்தது. துன்பம் கலவாத இன்பம் வேண்டுமென்று சிலர் விரும்புகின்றனர். ஆனல் அது சாத்தியப்படாது. உலகில் பிறந் துள்ள உயிர்களனைத்தும் துன்பம் என்கின்ற விலை கொடுத்து இன்பத்தைப் பெறுகின்றன. துன்பப்படுதற்குக் காரணங்கள் சில உள. அவைகளுள் நோய் வாய்ப்படுவது மிக முக்கிய மானது. நோய்கள் பலவற்றைத் தவிர்க்க மனிதனுக்கு முடியும். தவிர்க்க முடியாத நோய் களின் கொடுமையை மனத்திட்பத்தால் வெல்லலாம். மனத்திட்பத்தை மனிதன் தனக்குத் தானே தேடிக்கொள்ள முடியும். உடலை ஆரோக்கியமான நிலையில் வைத்திருப்பதற்கு ஆகார நியதி முற்றிலும் அவசியமானது. ஆகாரத்தின் வாயிலாகவே உடல் வாழ்க்கை நிலைபெற்று வருகிறது. உணவு உண்ணுது சில வாரங்களுக்கு மேல் மனிதன் உயிர் வாழ்ந்திருக்க முடியாது. அன்னத்தினின்று பிராண தத்துவம் உருவெடுக்கிறது. உணவைக் கடவுளுக்குப் படைத்து உண்பதால் அது ஈசுவரப் பிரசாதமாக மாறுகிறது. உடலின் ஆரோக்கியத்திற்காக வும், திட்பத்திற்காகவும் அமைந்துள்ள தேவாமிர்தமாக அதைப்பாவித்தல் வேண்டும்.

ஸத் ஸம்பாஷணை

கேள்வி : (413) ஒருவர் பெறும் தெய்விகக் காட்சிகளும் கனவுகளும்தான் அவர் பெற்றுள்ள ஆன்மீக முன்னேற்றத்தைக் குறிக்கின்றனவா?

தெய்விகக் காட்சிகளும் கனவுகளும் காண்பது நல்ல அறிகுறியே. ஆயினும் சாதகன் ஒருவனுடைய முன்னேற்றத்துக்கு அவைகள் முற்றிலும் அவசியமானவைகள் ஆகமாட்டா. கனவுகள் காண்பது பெரும்பாலும் பழைய பாடம் படிப்பதற்கு நிகராகிறது. அந்த அளவில் தெய்விகக் கனவுகள் பாராட்டுதற்குரியவைகளாம். ஜாக்ரதாவஸ்தையில் ஒருவன் செய்கிற செயல்களும் எண்ணுகின்ற எண்ணங்களும் சிரமமின்றிக் கனவாக வடிவெடுக்கின்றன. அந்த அளவில் ஒரு மனிதனுடைய மனப்பான்மையை அறிந்து கொள்ளுதற்குக் கனவு பயன்படுகிறது. பின்பு, மனப்பான்மை வேறு, முன்னேற்றம் வேறு.

ஆத்ம சாதனத்தில் முன்னேற்றம் அடைந்ததற்கு அறிகுறிகள் அவன் படைத்துள்ள மனப்பான்மையேயாம். உலக நாட்டமும் தெய்விக நாட்டமும் ஒன்று சேர்ந்து இருக்கமாட்டா. சாதனத்தில் முன்னேற்றம் அடைவதற்கேற்பச் சாதகன் ஒருவனின் மனப்பான்மை பரத்தையே சார்வதாகிறது. இகலோக சம்பந்தமான இலாபநஷ்டங்கள் அவன் மனதை வந்து தாக்கமாட்டா. அடுத்தபடியாகப் பாரமார்த்திக நாட்டம் படைத்திருப்பவனுக்கு உலகத்தவர்களுடைய இணக்கம் எந்த விதத்திலும் உற்சாகம் ஊட்டுவதில்லை. கூடுமானவரையில் அவன் அவைகளை ஒதுக்கித் தள்ளுகிறான். தலைமாணுக்கன் ஒருவனுக்குப் படிப்பு சம்பந்தமான அனைத்திலும் ஊக்கம் உண்டாவதற்கு நிகராக ஆத்ம சாதகனுக்குச் சாதன சம்பந்தமான அனைத்திலும் பரநாட்டத்திலும் ஊக்கம் ஓங்கி வளர்ந்து வருகின்றது. உடல் உறுதி பெற்று வருவதை எடைபோட்டு அறிந்து கொள்கின்றோம். மனம் திண்ணியதாவதை அதனுடைய திண்மை விளக்குகிறது. ஆத்ம சாதனத்தில் முன்னேற்றம் அடைகின்றவனுக்கு மன அமைதியும் பரநாட்டத்தில் ஊக்கமும் மேலும் மேலும் வளர்கின்றன. இவையே அவனுடைய முன்னேற்றத்துக்கு அறிகுறிகளாகின்றன.

கேள்வி : (414) ஆத்மசாதனத்தில் ஈடுபடுகின்றவனுக்கு அகங்காரம் படிப்படியாக அகல வேண்டும். அதற்கு நேர்மாறாக 'நான் ஆத்ம சாதகன், என்னும் அகங்காரம் ஒருவனுக்கு வருமாகில் அது பாராட்டத்தக்கதா இல்லையா?

ஆத்ம சாதகன் மட்டுமல்லன், நல்லியல்பு படைத்துள்ள மக்கள் எல்லாருக்குமே அகங்காரம் உதவாது. அகங்காரம் வலுத்து வருவதற்கேற்ப ஒருவனுடைய இகலோக வாழ்வும் பாரமார்த்திக நாட்டமும் தடைப்படுகின்றன. இகலோக வாழ்க்கையில் ஈடுபட்டிருப்பவனுக்குத் தான் சாமர்த்தியசாலி என்னும் அகங்காரம் பெரும்பாலும் வருகிறது. அந்த எண்ணம் ஓங்குமளவு பண்பாட்டில் அன்னவன் கீழோனுகிறான். தான் அல்லாததைத் தானாகக் கருதுவது அகங்காரம். மனிதன் உடல் அல்லன். உயிர் வாழ்க்கையில் ஈடுபட்டிருப்பதற்கிடையில் உடலைப்பற்றிய உணர்வு பெரிதும் ஒதுக்கி வைக்கப்படவேண்டும்.

சொர்க்கத்தை நாடிப் போய்க்கொண்டிருந்த பாண்டவர்களுக்கிடையில் நகுலனுக்குத் தன் மேனியழகைப் பற்றிய அகங்காரம் ஒருவாறு உருவெடுத்தது. அதன் விளைவாக அவன் வீழ்ந்து மடிந்தான். அத்தகைய அகங்காரம் பொல்லாதது. அகங்காரம் ஆன்மீகத்துறையில் நுழையுமாகில் அது எளிதில் அகற்றப்படமாட்டாது. அது ஆழ்ந்து மனதைப் பற்றிப் பிடித்துக் கொள்கிறது.

இதைக் குறித்துப் பரமஹம்சதேவர் பகர்வதாவது : "உலகத்தவர்கள் ஒருவனைப் பிடித்துள்ள பேயை ஓட்டுதற்குக் கடுகை எடுத்து மந்திரிக்கிறார்கள். ஆனல் அந்தக் கடுகுக்குள்ளேயே பேய் புகுந்திருக்குமாகில் மந்திரிப்பதற்கு அது உதவாது. அதே விதத்தில் உலகத்தவன் ஒருவனைப் பிடித்துள்ள அகங்காரத்தை அகற்றுதற்கு ஆத்ம சாதனம் பயன்படுகிறது. ஆனல் "நான் ஆத்ம சாதகன், ஆகையினல் மற்றவர்களுக்கெல்லாம் நான் மிக்கவன்" என்னும் அகங்காரம் அவனைப் பிடிக்குமாகில் அத்தகைய கேட்டுக்கு விமோ

சனம் இல்லவே இல்லை. இதற்கு அடுத்தபடியாகத் தன் பிறப்பைப் பற்றிய அகங்காரம், படிப்பைப் பற்றிய அகங்காரம், செல்வத்தைப் பற்றிய அகங்காரம் ஆகியவைகள் பொல்லாதவைகள்.

அகங்காரத்தில் ஸ்தூலம், சூட்சுமம் என்று இரண்டு பகுதிகள் இருக்கின்றன. மனிதனுடைய படிப்பு, பொருளைப் பற்றிய அகங்காரம் ஸ்தூலமானது. தான் படைத்துள்ள மனபரிபாகத்தைப்பற்றிய அகங்காரம் சூட்சுமமானது. சூட்சுமமான அகங்காரத்தை அகற்றுவது மிகக் கடினமானது. ஸ்தூலமாயுள்ள அகங்காரத்தை மற்றவர்கள் அவனுக்கு எடுத்துக் காட்ட முடியும். மற்று, சூட்சுமமான அகங்காரத்தை விசாரித்துப் பார்த்துத் தானே கண்டுபிடிக்கவேண்டும். பிறகு தீவிரமான நடவடிக்கை எடுத்து அதை அகற்றவேண்டும். அதற்கிடையில் இறைவனிடமும் பிரார்த்தனை பண்ணவேண்டும். 'இறைவா, பொல்லாத அகங்காரம் என்னைப் பிடித்துக் கொள்ளாதபடி நீ அனுக்ரஹம் பண்ணவேண்டும்' என்று தீவிரமாகப் பிரார்த்தனை பண்ணிச் சாதகன் தன்னைக் காப்பாற்றிக்கொள்ளவேண்டும்.

கேள்வி: (415) அருளும் பொருளும் ஏன் சேர்ந்து இருக்கக் கூடாது?

நாட்டத்தில் இரண்டு விதங்கள் இருக்கின்றன. இவ்வுலக சம்பந்தமான நாட்டம் பொருள் நாட்டம். இவ்வுலகை நன்கு பயன்படுத்தித் தன்னைப் பரத்துக்கு ஆயத்தப் படுத்துவது அருள் நாட்டம். இவை இரண்டும் பாங்கில் ஒன்றோடொன்று ஒவ்வாதிருப்பதால் அருள் நாட்டம் நாடுகிறவர்கள் பொருள் நாட்டத்தை ஒதுக்கித் தள்ளவேண்டும். இதைக் குறித்துப் பரமஹம்சதேவர், 'இராமனும் காமனும் சேர்ந்திருக்க மாட்டார்கள். இராமன் உள்ள இடத்தில் காமன் இல்லை; காமன் உள்ள இடத்தில் இராமன் இல்லை' என்று இயம்புகின்றார். அருள் நாட்டம் யோகியர்களுக்கு உரியதாகிறது. பொருள் நாட்டம் பொல்லாதது என்பதற்குச் சான்றாகப் பரமஹம்சதேவர் தம் திரிகரணங்களைக் கொண்டும் பணத்தைத் தீண்டவில்லை.

பெருநிலையை அடைய விரும்புகின்ற ஒருவன் அதற்கேற்ற விலைகொடுக்க வேண்டும். அருள் நாட்டம் மனிதன் பெறுகிற பேறுகள் அனைத்திலும் தலைசிறந்ததாகிறது. உள்ளத்தினின்று பொருளாசையை அறவே அகற்றித் தள்ளுதலே அதன் பொருட்டு அவன் தருகிற விலையாம். ஆயினும் இந்த நியதிக்கு விதிவிலக்கு ஒன்று உள்ளது. மனிதன் பொருளைப் படைத்திருக்கலாம்; சம்பாதிக்கவும் செய்யலாம். ஆயினும் பொருள்நாட்டத்துக்கு அவன் அடிமையாகக்கூடாது. யக்ஞங்களுள் திரவிய யக்ஞம் என்பது ஒன்று. பொருளைச் சம்பாதிப்பதைக் கடவுள் நாட்டத்தோடு இணைத்து வைத்துச் செய்யலாம். சம்பாதித்த பொருளைக் கடவுள் நாட்டத்திலும் மக்கள் பணிவிடையிலுமே செலவு செய்யலாம். அப்படிச் செய்கிறவர்கள் பொருளுக்கு ஒரு போதும் அடிமைகளாவதில்லை. மக்களுள் பெரும்பாலோர் பொருள் சம்பாதிப்பதற்கிடையில் பொருளாசையிலேயே ஊறியிருந்து அதற்கு அடிமைகள் ஆகிறார்கள். அத்தகையவர்களுக்கு யோகம்அல்லது அருள் நாட்டம் கைகூடாது. போகம் அல்லது உலக நாட்டமே அவர்களுடைய உள்ளத்தில் உறுதி பெறுகிறது. இக்காரணங்களை முன்னிட்டே ஆத்ம சாதகன் பொருள் நாட்டத்தை ஒதுக்கித் தள்ளவேண்டும்.

கேள்வி: (416) துரோணர் ஏகலைவ்யனைச் சிஷ்யனாக ஏற்க மறுத்தது ஏன்?

துரோணர் யுத்த சம்பந்தமான பயிற்சிகளில் வல்லுநராயிருந்தார். அதற்கேற்ற ஆயுதமாகிய தனுர்வேதத்தில் அவர் தலைசிறந்து திகழ்ந்து வந்தார். தம்மிடத்துள்ள அக்கலையை யுத்தத்தில் ஈடுபடும் சுதர்மம் படைத்திருந்த க்ஷத்திரியர்களுக்கு எடுத்து வழங்கி வந்தார். ஏகலைவ்யனோ ஒரு வேடனுடைய மகன். வேட்டையாடுவது அவனுடைய சிறந்த செயலாகிறது. தனுர்வேதமும் வேட்டையாடுவதும் ஒன்றையொன்று ஒத்திருக்கமாட்டா. ஆதலால் ஏகலைவ்யனுக்கு இன்றியமையாத வேட்டையாடும் வில்வித்தையை வேறு யாரிடமிருந்தாவது கற்றுக்கொள்ளலாம் என்றும் தாம் வழங்கும் வித்தை அலாதியாகப் போர் வீரனுக்கேஉரியது என்றும் சொல்லி ஏகலைவ்யனைத் தன் சிஷ்யனாகத் துரோணர் ஏற்றுக் கொள்ள மறுத்துவிட்டார்.

ஸ்ரீமத் பாகவதம்

(சுவாமி ஸதானந்தர்)

முனிவர்கள் சொன்னது: "சூதரே! நீர் நீடு வாழ்வீராக. பகவான் ஸ்ரீ கிருஷ்ணனது பொருள்சேர் புகழை, கீர்த்தியை, மகிமையை, லீலையை, விபூதியை, நெடுநேரம் நீங்கள் பாடினீர்கள். அதைக் கேட்டதன் வாயிலாக எங்களுக்கு மரணபயம் அகன்றுவிட்டது. நாங்கள் பல தலைமுறைகள் தொடர்ந்து கடைப் பிடிக்கிற சத்திர யாகத்தை மேற்கொண்டுள்ளோம். அதன் வெற்றி தோல்வி பற்றி எங்களுக்குத் தெரியாது. எவ்வளவோ தடைகளை மீறி அது நடைபெற்றாக வேண்டும். நாங்கள் விரதங்களினாலும், ஓயாத யாகப்புகையாலும் இளைத்தும் உற்சாகம் குன்றியும் இருந்தபோது கோவிந்தனது திருவடித் தாமரையினின்று தேவாமிர்தம் போன்ற தேனை எங்களுக்கு வழங்கினீர்கள். அதன் மூலம் ஆ! நாங்கள் எவ்வளவு தெம்பும், மனத்தெளிவும் புதிய ஊக்கமும் பெற்றுள்ளோம். எங்களுக்குத் திருமால் பக்தர்களின் சத்சங்கம், கூட்டுறவு வாய்த்தால் போதும்; முக்தியையும் வேண்டோம். இவ்வுலகில் மக்களால் பெரிதும் நாடப்படுகிற ராஜ்யம், செல்வம் போன்றவைகள் எங்களுக்குத் துச்சமானவைகளாகப்படுகின்றன. பக்தர் தமக்கான நிலைப்பொருளோன் கடவுள்; பக்தர்களுக்கு வேண்டிய ஒரே பொருள் கடவுளே. கிருஷ்ணானந்தத்தை ஒரு தடவை சுவைத்து விட்டால் மற்ற உலக ஆனந்தம்—இன்பங்கள் எல்லாம் அல்பமானவைகள் ஆகிவிடுகின்றன. பக்தன் வெறுமனே ஸ்ரீகிருஷ்ணனின் புகழைப் பாடுவதில் திருப்தி அடைவதில்லை; அவனை அடைந்தாக வேண்டும். யோகேசுவரக் கிருஷ்ணன் அளவில்லாத குண சம்பன்னன், குணக்குன்று. அவனைப் பற்றி நினைப்பவர் பிரகிருதியின் தளைகளினின்று விடுபடுவர்; மேலாம் நன்மை, சிரேயஸ், பரமபதம் பெறுவர். மானுட ஜன்மத்தின் மிகப் பெரிய பயன் அது. ஓ சூதரே, நீர் நல்ல கல்விமான், உத்தம ஸ்ரீமானாகவும் பக்தனாகவும் இருக்கிறீர். பக்தனுக்கு வேண்டிய ஒரே ஒரு பொருளான ஸ்ரீ ஹரியின் லீலைகளை மேலும் விளக்கி அருள்வீராக. தெவிட்டாத ஆனந்தமாகிய கிருஷ்ண கர்ணாமிர்தம் அது. அதைக் கேட்கவேண்டும் என்கிற எங்கள் ஆவல் மேலும் மேலும் வளர்கிறது. மிகப் பெரிய கிருஷ்ண பக்தனாகிய பரீக்ஷித்துக்குச் சதா பிரம்ம நிஷ்டராகிய சுகதேவர் சொன்ன உபதேசங்களையும் எங்களுக்குச் சொல்லுங்கள். எதைக் கேட்டுப் பரீக்ஷித்துக்குத் தன் மனதை எளிதில் பகவானின் திருவடிகளில் நிலைத்திருக்கச் செய்யச் சாத்தியமாயிற்றோ அதை முழுவதும் சொல்லுவீராக. உலக தாபங்களுக்கு அமிர்த சஞ்சீவினியாகிய இப்பாகவத புராணம் பரீக்ஷித்துக்குச் சொல்லப்பட்டது. அது பரம பவித்திரமானது. அதில் அற்புதமான யோக மார்க்கங்களும், ஸ்ரீ கிருஷ்ண லீலையும் சொல்லப்பட்டிருக்கின்றன. அதனால் அன்றோ பக்தர்களால் அது மிகவும் விரும்பப்படுகிறது, நேசிக்கப்படுகிறது. ஐயனே, அந்த இனிய, பாவன புராணத்தை எங்களுக்குத் தொடர்ந்து சொல்லுவீராக."

சூதர் சொன்னது: "ஆ பக்தர்களே! உங்கள் பேச்சைக் கேட்க எவ்வளவு இனிக்கிறது! மகிழ்ச்சியை ஊட்டுகிறது! எக்குலத்திலோ, எங்கோ பிறந்தோம். ஆயினும் ஒரே லக்ஷியத்தால், பக்தியால் இணைக்கப்பட்டிருக்கிறோம், ஐக்கியப்பட்டிருக்கிறோம். லௌகிக பேதங்கள் எல்லாம் பொருளற்றவை ஆகிவிட்டன, மறைந்து விட்டன. நமது மானுட ஜன்மம் இன்று உண்மையில் ஆசீர்வதிக்கப்பட்டது, அருளுக்குப் பாத்திரமானது ஆயிற்று. இழி குலப் பிறப்பு அதற்கேற்ற துன்ப துயரங்களை, இழிவை, கீழ்மையை உண்டாக்குகிறது. ஆனால் அத்தகைய சூழ்நிலையில் உள்ளவர்களும் பக்தி வழியில் பிரவேசித்தால், பக்தர்களின் கூட்டுறவை நாடினால் தீயில் போடப்பட்ட கரி தீ ஆகிவிடுவது போன்று அவர்கள் உயர்வு எய்தி விடுகிறார்கள்; இழிகுலப் பிறப்பின் தோஷங்களினின்று மீண்டுவிடுகிறார்கள். ஹரி இந்த ஜகத்துக்கு நாதன். அவனே பக்தர்களின் நிலைப்பொருள். அனைத்தும் அவனே. அவனே சாசுவதப்பொருள், சர்வவியாபி, சர்வ சக்திமான். இப்பிரபஞ்சமாக வடிவெடுத்திருப்

பவன் அவனே. இப்பிரபஞ்சத்தில் சில விசேஷமான பொருள்களில், ஜீவர்களிடத்தில் ஆண்டவனின் விபூதி சிறப்பாக, வெளிப்படையாகத் தென்படுகிறது. அவைகளைக் கண்ணுடையவர் காண்கின்றனர். ஆ! அப்பொருளைப் புகழாமல் எப்படி இருக்க முடியும்? பக்தன் து வியப்பு, மகிழ்ச்சி, பேர் உணர்ச்சி, திருப்புகழாக, தேவாரமாக, மாணிக்கவாசகமாக வெளிப்படுகிறது.' இப்படிப்பட்ட பக்தர்கள் இப்பிரபஞ்ச வாழ்வின் துன்ப துயரங்கள், கீழ்மைகளினின்று மீளுகின்றனர். பாற்கடலிலிருந்து தோன்றிய லக்ஷ்மி தேவியை மற்ற தேவர்கள் எல்லாரும் தாங்கள் அடைய வேண்டுமென்று விரும்பினார்கள். என் பிரபுவாகதேவரால்விரும்பப்படாவிட்டாலும் கமலா தேவி தானே விரும்பி அவரது பாதசேவையை மேற்கொண்டாள். அவர் எந்தப் பொருளை விரும்பப் போகிறார்? விருப்பு, வெறுப்பு என்கிற துவந்துவங்களே அவரிடத்து இல்லை. அவரைத் தவிர அவர் விரும்புவதற்கு இரண்டாவது பொருள் இல்லை. ஒப்புஉயர்வு அற்ற அனந்த கல்யாண குணங்கள் வாய்ந்தவர் அவர். கடவுளுக்கு அர்ப்பணமாக, ஆராதனையாக ஜலத்தை விடுகிறோம். அந்த நீரும் அவனே, அவனிடத்திருந்து வந்தது அது.. அன்புக்கும் போற்றுதலுக்கும், அறிகுறியாக வழிபாட்டில் தீபாராதனை செய்கிறோம். அந்த வெளிச்சமும் பிரகாசமும் அவனே அன்றோ! ஆத்மப்பிரகாசம், அருள்ஜோதி, ஞான ஒளி அவனது சொரூப லக்ஷணம் ஆகும். வணங்குதற்குரியவர், போற்றுதலுக்கு உரியவர் கடவுளே. ஸ்ரீ ஹரியே அன்றோ! கடவுளை உணர்ந்தால் இந்தச் சரீர போதமும் அதைச் சேர்ந்த அகங்கார மமகாரங்களும் அற்றுப்போகின்றன. உத்தம பக்தன் பகவானது சரண கமலங்களில் பூரண சரணாகதி அடைந்து தன்னை ஒப்படைத்து விடுகிறான். அத்தகையவர் பரமஹம்ஸர் எனப்படுகின்றனர். கடவுளும் அவர்களும் ஒன்றே. இந்த நிலை அடைவதே ஜீவர்களின் குறிக்கோள் ஆகும். பரீக்ஷித்தின் இறுதிப் பகுதியை உள்ளபடி அறிய விரும்புகிற உங்கள் எண்ணம் நல்லது. தியானத்துக்கேரான உத்தம கதா காலக்ஷேபத்தில் என்னை ஈடுபடுத்தியருளினீர்கள். இந்தச் சிந்தனைகள் எல்லாம் எவ்வளவு உயர்வானவை! அதில் நான் நன்கு திளைத்திருந்து அதை உள்ளபடி ஸ்ரீ கிருஷ்ணன் அருளால் விளக்குகிறேன்.

"ஒருசமயம் பரீக்ஷித்து வேட்டைக்காக வனத்துக்குச் சென்றான். அங்கு ஒருமான் கூட்டத்தைத் துரத்திச் சென்றான். இப்படி விரட்டிக்கொண்டு ஓடியதில் அவனுக்குத் தாகம், பசி, மிகுந்த களைப்பு உண்டாயிற்று. தன் தாகத்தைத் தணித்துக் கொள்வதற்கு ஜலத்தைத் தேடி அலைந்தான். அலைந்தபொழுது அவன் மிகவும் புகழ்பெற்ற சாமிகா என்னும் முனிவரது ஆச்ரமத்திற்கு வந்து சேர்ந்தான். அங்கு முனிவர் கண்களை மூடிக்கொண்டு அசைவற்று உட்கார்ந்திருந்ததைப் பார்த்தான். அப்பொழுது முனிவர் சாதனைகளின் முடிந்த பயனாகிய நிர்விகல்ப சமாதியில் இருந்தார். அவரது இந்திரியங்கள் முழுவதும் அவ்வவற்றின் புலன்களினின்று விடுபட்டு ஒடுங்கியிருந்தன. அந்தக்கரணமும் உலகச் சிந்தனையின்றி ஒரு நிலைப்பட்டிருந்தது. அவ்வுடல் புற உலக உணர்ச்சியின்றி இருந்தது. கடலில் விழுந்த மழைத்துளி போன்றும் சமுத்திரத்தை அடைந்துவிட்ட நதி போன்றும் அவரது ஜீவ வியக்தி பரபோதத்தில் கலந்துவிட்டது. ஜாக்கிரத சொப்பன சுஷுப்தி ஆகிய அவஸ்தைகளைக் கடந்து அது மேலாம் துரியநிலையில் இருந்தது. யாரோ ஆச்ரமத்திற்கு வந்தது, நடமாடியது, கேட்டது ஒன்றுமே அவருக்குத் தெரியாது. பரீக்ஷித்து தாகத்தினால் நாக்கும் தொண்டையும் வரண்டு போய்த் தண்ணீருக்காகத் தவித்தான். அவனது நிலையில் முனிவரது மேலாம் நிலையைப் பற்றிச் சிந்திக்க இயலவில்லை. அவன் அம்முனிவரை நெருங்கித் தண்ணீர் கேட்டான். முனிவரோ நிர்விகல்பசமாதியில் திளைத்திருந்ததால் அவன் கேட்டதற்குப் பதில் ஏதும் சொல்லவில்லை. முனிவரது மௌனநிலை தன்னை உதாசீனம் பண்ணுவது போன்று அரசனுக்குப் பட்டது. முனிவர்களுக்கு இயல்பாக இருக்க வேண்டிய அன்பு, ஆதரவு இங்கு இல்லையே. தம் ஆச்ரமம் தேடிவந்த ஒரு விருந்தினனை வாருங்கள் என்று கூடச் சொல்லவில்லையே. இனி, அன்பான உபசரிப்பு எங்கே இருக்கப் போகிறது! ஒரு வேளை தம் உயர்ந்த தவ நிலையைக் குறித்

துத் தற்பெருமையும் அகங்காரமும் கொண்ட வராக இருக்கலாம். அதனுல்தான் தன்னை மதிக்கவில்லை, உதாசீனமாக நடந்துகொள்கிருர் என்று அரசன் நினைத்தான்.

பரீக்ஷித்து மேலும் சிந்திக்கலானுன்: "இம்முனிவர் உண்மையிலேயே இந்திரியங்களையும் மனதையும் அடக்கினவரா? உண்மையிலேயே ஆழ்ந்த தியானத்தில் இருக்கிருரா? அல்லது மூன்ரும் வர்ணத்தானுகிய க்ஷத்திரியனை உபசரிக்காவிட்டால் குற்றமேது மில்லை என்று நினைத்துள்ளாரா?" பசி வந்தால் பத்தும் பறந்துபோகும் என்பார்களே, அதேபோல் பசி தாகத்தினுல் வாட்டப்பட்டு வரும் பரீக்ஷித்துக்கு இந்த மௌனநிலை கோபத்தையும், வெறுப்பையும் உண்டாக்கியது. அவன் அம்முனிவரைத் தண்டிக்க, அவமானப்படுத்த எண்ணம்கொண்டான். கண்ணில் தென்பட்ட செத்த பாம்பு ஒன்றை அம்பின் நுனியினுல் எடுத்து அம்முனிவரது கழுத்தில் போட்டுவிட்டுப் பரீக்ஷித்துத் தன் பட்டணம் போய்ச் சேர்ந்தான்.

சாமிகா முனிவருக்கு மிக்க தேஜஸும் ஞானமும் வாய்ந்த தவப்புதல்வன், சிருங்கி என்பவன் இருந்தான். அப்பொழுது அவன் பாலகனுய் இருந்தான். தூரத்தில் வேறு இடத்தில் தன் தோழர்களோடு விளையாடிக் கொண்டிருந்த சிருங்கியிடம் ஒரு பையன் இங்ஙனம் தெரிவித்தான். "அரசனுகிய பரீக்ஷித்து ஒரு செத்த பாம்பை உன் தகப்பனுர் கழுத்தில் போட்டு அவமானப்படுத்தியுள்ளான் பார்." இதைக்கேட்டுஅப்பாலகனுக்கு மிகுந்தகோபம் உண்டாயிற்று. முகத்தில் தீப்பொறி பறக்க சிருங்கி இங்ஙனம் சபித்தான்:— "அரசனது கேடுகெட்ட தன்மையைப் பார்த்தீர்களா? தன் மக்களைப் பாதுகாக்க வேண்டியது அரசனது கடமை. தன்னைப் பாதுகாக்கும் யஜமானனைத் துன்புறுத்தும், அவமானப்படுத்தும் வேலைக்காரன் நன்றிகெட்டவன். அவன் விலங்குக்குச் சமானமாவான். அரசர்கள் தர்மானுஷ்டானத்தால், நீதி நேர்மையால், தியாகத்தால் ரக்ஷிக்கப்படுகிருர்கள். இவைகளைப் புறக்கணித்த அரசனும் விலங்கு ஆவான். அவன் விரைவில் அழிந்தும் போவான். க்ஷத்திரியர்களை அந்தணர்கள் ரக்ஷிக்கிருர்கள், வழி நடாத்துகிருர்கள். ஆச்சார்ய ஸ்தானத்தில் உள்ள அந்தணர்களை அவமானப்படுத்திய அரசன் விரைவில் க்ஷீணதசை அடைவான், அழிந்து போவான். என் பிரபு பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் தர்மகோப்தா. அவர் அதர்மத்தை, தீயவர்களை ஒழித்துத் தர்மத்தை, நல்லவர்களை ரக்ஷித்தார். அப்பிரபு தம் ய்தாஸ்தானம் அடைந்துவிட்டதால் இவ்வரசனுக்குத் தன் கடமை உணர்வு போய்விட்டது போலும். அவனுக்கு அதர்மமான பிரவிருத்தி உண்டாகியிருக்கிறது. ரிஷிகளை, நல்லவர்களை, அந்தணர்களை மதிக்கத் தவறிவிட்டான். அவனை நான் தண்டிக்கப்போகிறேன்." இங்ஙனம் சொல்லிவிட்டுக் கௌசிகி நதியின் தீர்த்தத்தைக் கையில் எடுத்துக்கொண்டு "தன் குலத்தைக் கெடுக்கவந்த கோடரிக் காம்பு போன்ற அவ்வரசன், என் மதிப்பிற்குரிய தந்தையாரை அவமதித்த அவ்வரசன் இன்றிலிருந்து ஏழாவது நாள் தக்ஷகன் என்னும் பெரும் பாம்பு தீண்டி மரணமடைவானுக" என்று சாபமிட்டான்.

அதன்பிறகு முனிகுமாரன் தன் ஆச்ரமம் போய்ச் சேர்ந்தான். தன் அன்பான, உயிர்க்குயிரான தந்தையார் கழுத்தில் செத்த பாம்பு தொங்கிக்கொண்டிருப்பதை அவன் பார்த்தான். விசனத்தினுல் வாய்விட்டுக் கோவென்று கதறி அழுதான். அங்கிரஸ் முனிவரின் வழித்தோன்றலாகிய அம்முனிவர் தன் பிரிய குமாரனின் பலத்த அழுகுரலைக் கேட்டுக் கண் திறந்தார். தன் கழுத்தில் செத்த பாம்பு ஒன்று தொங்குவதையும் உணர்ந்தார். அதை அப்பால் எறிந்துவிட்டு "ஓ அன்பான மகனே, நீ ஏன் இங்ஙனம் அழுகின்ருய்? உன்னை யாராவது துன்புறுத்தினர்களா?" இங்ஙனம் கேட்ட தந்தையாருக்கு நடந்த சம்பவங்களை எல்லாம் மகன் எடுத்துச் சொன்னுன்.

பரீக்ஷித்து சபிப்பதற்கு ஏற்ற அரசன் அல்லன். மனிதர்களுக்குள், அரசர்களுக்குள் மிக உயர்ந்தவனுகிய அக்கோமகனுக்குத் தன் மகன் சாபமிட்டதை அம்முனிவர் அங்கீகரிக்கவில்லை. அம்முனிவர் மிகவும் வருத்தப்பட்டார்; வேதனை அடைந்தார். "அந்தோ, நீ அவசரத்தில் செய்த காரியம் எவ்வளவு பிழையானது,

பாபமானது. மகனே, இன்று நீ பெரிய பாபம் ஒன்றைச் செய்து விட்டாய். குற்றத்துக்கேற்ற தண்டனை என்பது நீதி. பரீக்ஷித்து மிக உத்தம மான பரம்பரையைச் சேர்ந்தவன். பகவான் அருளினால் பிறந்தவன். அவன் இயல்பிலேயே பக்தன், நல்லவன். இது நாள்வரை மிக்க பரிவோடு, பொறுப்போடு, நீதியோடு ராஜ்ய பரிபாலனம் பண்ணி வந்துள்ளான். அவனை அறியாது அவன் செய்துவிட்ட அற்ப காரியத் துக்கு நீ மிகக்கொடிய சாபம், மரண தண்டனை விதித்துள்ளாயே. நீ பாரபக்ஷமாகவும், நீதி தவறியும் செய்து விட்டாயே. க்ஷமித்தல் அல்லவா அந்தணனின் சிரேஷ்டமான குணம்! உனக்கு இன்னும் நல்ல அனுபவம், விஷயங் களை உள்ளபடி அறிதல், விசாரம் நன்கு ஏற் படவில்லை. மக்களை ரக்ஷித்தலால் அரசன் விஷ்ணுவின் அம்சம் என்பதை மறந்துவிட் டாய். அரசன் ஒருவனைச் சாதாரண மனிதன் என்று கருதிப் பிழை செய்து விட்டாய். நல்ல அரசன் ஒருவன் தன் ஆற்றலால் நல்லாட்சி செய்கிறான். நீதியை உறுதியாக நிலை நாட்டுகிறான். அதனால் அன்றோ மக்கள் பய மின்றி க்ஷேமமாக வாழ்கிறார்கள். ஸ்ரீமந் நாராயணனே மனிதனாகிய அரசன் வடிவில் இருந்துகொண்டு மக்களை சம்ரக்ஷிக்கிறான். அரசன் இல்லாவிட்டால் திருட்டு, கொள்ளை, சூதுவாது, லஞ்சம், பொய் ஆகிய எல்லாத் தீமைகளும் சமூகத்தில் தலை எடுத்து விடும். நல்ல அரசன் இல்லாவிட்டால் காற்று மேகங் களைச் சிதறடிப்பது போன்று கெட்டவர்கள் நல்லவர்களைப் பாழ்படுத்தி விடுவார்கள். உத்தமமான அரசன் ஒருவனை மகனே, இன்று கொன்று விட்டாயே. ஆண்மையுடன் நட வடிக்கை எடுக்கவல்ல, சிக்ஷிக்கவல்ல அரசன் இல்லாமையினால் திருடர்களுக்கும் கொள்ளைக் காரர்களுக்கும் பயமற்றுப் போகும். தங்கள் செயலில் அவர்கள் துணிந்து இறங்குவார்கள். மக்கள் சொத்துச் சுகங்களுக்கு ஆபத்து ஏற் படும். ஆ மகனே, இக்கெடுதல்களுக்கு நாம் காரணர்கள் ஆகிவிட்டோமே. நாம் எண்ணா மல் செய்துவிட்டாலும் நமது செயலின் தீய பயன், பாபம் நம்மை விடாது. அரசனைப் பற்றிய பயம் இல்லாவிட்டால் பல பேருக்குத் தீய பிரவிருத்தி உண்டாகும். ஒருவரை ஒரு வர் கண்ணியமாக நடத்தாமல் தீய கொச்சைச் சொற்களால் கடிந்து வைது கொண்டும், அற்ப காரியங்களுக்கெல்லாம் தாக்கவும் கொல்லவும் செய்வார்கள். பெண்களை மோசம் செய்தல், பொருள்களை அபகரித்தல் ஆகிய தீமைகள் எல்லாம் சமூகத்தில் பெருகிவிடும். இந்தச் சூழ்நிலையில் இடைத்தர மக்களும் தீமையின் வசப்பட்டுவிடுவார்கள். தலைத்தர மக்கள் சிரமத்துடன் ஜீவிதத்தை நடத்த வேண்டும். வருண ஆச்ரம தர்மங்கள் எல்லாம் சீர்கேடு அடையும். அவைகள் எல்லாம் பொருளற்றவைகள் என்று கருதப்படும். பேராசையே வடிவெடுத்தவர்களாக மக்கள் போகத்திலும் ஆடம்பரத்திலும் ஈடுபட்டு விலங்குபோன்ற வாழ்க்கை நடத்துவார்கள். பண்பாட்டிலும் நாகரிகத்திலும் மக்கள் படிப் படியாக க்ஷீணதசை அடைவார்கள். வருணக் கலப்பு உண்டாகும். ஒரே குழப்பமான, இருள் சூழ்ந்த நிலையாக இருக்கும். மனித வடிவம் இருக்கும், மனித குணங்கள் எல்லாம் போய் விடும். தர்மத்தை, நன்மையைப் பாதுகாக்கும் எல்லா அரண்களும் படிப்படியாகப் பாழ டைந்து எல்லாம் சுயநலம், பேராசை நிறைந்த பொறுப்பற்ற, உழைப்பற்ற, அன்பற்ற, அரக்க, விலங்கு வாழ்க்கையே எங்கும் நிலவும்.

"சக்கரவர்த்தியாகிய பரீக்ஷித்து மிகவும் சீல மாக, நீதியாக, மிக்க அன்புடன் மக்களைப் பரி பாலனம் பண்ணிவருகிறான். மக்கள் அவனை மிக வும் நேசிக்கிறார்கள். அவன் மிகப் பெரிய பக்த னாகவும் திகழ்ந்து வருகிறான். அவன் அசுவ மேதயக்ஞங்கள் செய்துள்ளான். பசி தாகத்தி னால் மிகவும் வாட்டப்பட்ட நிலையில் ஒரு சிறிது நேரம் தன் பெரிய நிலை தவறி இக்காரியங் களைச் செய்திருக்கிறான். ஆகவே உத்தமமான அவ்வரசனை மகனே, நீ சபித்திருக்கலாகாது.

"ஓ ஜகந்நாத, ஆதிமூலமே, இப்பிரபஞ்சம் உன்னால் இயக்கப்படுகிறது. அதன் உயிர் நீ. என் இளம் குமாரன், சிறு பிள்ளைத் தனத்தால், அனுபவமின்மையால், உண்மையை உள்ள படி சரியாகச் சீர்தூக்குகிற மனத்தெளிவு இன் மையால் இந்தத் தர்மமற்ற சாபத்தை இட்டு விட்டான். ஆகையால் ஆண்டவனே, அவனை மன்னித்தருளும்." இங்ஙனம் முனிவர் இறை வனைப் பிரார்த்தித்துக் கொண்டார்.

புறவழிபாடும் அகவழிபாடும்

(ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர் அவர்கள் 1—4—84 அன்று விருதுநகரில் நிகழ்த்திய சொற்பொழிவு)

அம்பிகைக்கு அமைந்த ஆயிரம் திருநாமங்களுள் மகிமை வாய்ந்தவைகள் எண்ணிறந்தவை இருக்கின்றன. 'அந்தர்முக ஸமாராத்யா, பஹிர்முகஸுதுர்லபா'—எங்கும் நிறைபொருளாய் இருக்கின்றவள் பராசக்தி. இதன்விளக்கமாக நிகழ்ச்சி ஒன்று நிகழ்ந்தது. நாரதர் கைலாசத்துக்குப் புறப்பட்டுப் போனார். அவர் எங்குச் சென்றாலும் முதலில் பெரும் பிரச்னையைக் கிளப்புவார். பிறகு அதன்மூலம் பெரிய தத்துவம் நமக்கு விளக்கப்படும். நாரதர் ஒரு கனி கொண்டுசென்றார். இரண்டு பிள்ளைகள் கைலாசத்தில் இருப்பது அவருக்குத் தெரியும். அம்மையப்பன் முன்னிலையில் கனியை வைத்து வணங்கினார். விளையாடிக்கொண்டிருந்த பால முருகனும், பால கணபதியும் ஓடிவந்தார்கள். ஒரு பந்தயம் வைப்போம்; அண்டங்கள் முழுவதையும் முதலில் அளந்துவரும் பேர்வழிக்கு இந்தப் பழத்தைத் தரலாம் என்றார் நாரதர். முருகனும்கணபதியும்சரி என்று ஒத்துக்கொண்டார்கள். பால முருகன் மயில் மீது ஏறி அண்டங்களை அளப்பதற்காகச் சென்றுவிட்டான். மூத்தவன் பாடு இடைஞ்சல்; பருத்த சரீரம், சப்பாணிக் கால், யானை போன்ற சரீரம், எலியை வாகனமாக உடையவன்; தம்பியோடு போட்டி போடச் சௌகரியப்படாது என்று எண்ணினான். தன்னுடைய சிறியவாகனத்தில் ஏறி அம்மையப்பனை வலம் வந்தான்; கை நீட்டினான். அண்டம் முழுதும் அளந்தாகிவிட்டதா?—சிவ சக்தியாகிய தங்களுக்குப் புறம்பாக அண்டம் எங்கு உள்ளது? என்று கேட்டான். சிவ சக்திக்குப் புறம்பான அண்டம் எங்கும் இல்லை என்ற உண்மையை அறிந்தவன் மூலப் பொருளையே போய்த் தொட்டுவிட்டான். கனியை எடுத்துக் கையில் தரத் தர முருகன் அண்டங்கள் அத்தனையும் அளந்துவிட்டு வந்துவிட்டான். அவன் செயல் சாமான்யமானதன்று. ஆனால் சற்றுப் பிந்திவிட்டான்.

கடவுளை வணங்க விரும்புகின்ற நாம் ஆற்றல் படைத்த முருகன் போன்று கருத்தைப் புறவுலகில் செலுத்தலாம். செலுத்தும்போது அனைத்தையும் இறைவன் மயமாகக் கருதிப் பழகவேண்டும். கோவிலுக்குச் சென்றுவணங்குகின்றவர்கள், பிறகு சிறிது நேரம் உட்கார்ந்து தியானம் பண்ண வேண்டும். இரண்டையும் சேர்த்துச் செய்வோமானால் சுலபத்தில் கடவுளை அடையலாம். 'அந்தர்முக ஸமாராத்யா, பகிர்முக ஸுதுர்லபா'—என்பதை ஔவைப் பாட்டி அருமையாகத் தெரிவித்தாள். கருவி கரணங்களை ஓயச்செய்தல் எல்லாருடைய குறிக்கோள். "சித்தமலம் அறுவித்துச் சிவமாக்கி எனை ஆண்ட அத்தன் எனக்கருளிய வாறு ஆர் பெறுவார் அச்சோவே." மனத் தெளிவு அடைந்தான பிறகு நம் எல்லார்க்கும் அது விளங்கும். இமைப்பொழுதும் நெஞ்சில் நீங்காது இறைவன் இருக்கின்றான் என்பதை மற்றவர்களும் சுமாராக அறிந்துகொள்ளக் கூடும். "யானேதும் அறியாதே என் உள்ளத்தே நின்று நல்லனவும் தீயனவும் காட்டா நின்றாய்." மனச்சாட்சியாய் எல்லார் உள்ளத்திலும் அவர் இருக்கின்றார். மனச்சாட்சியாய் எழுந்தருளியுள்ள தெய்வத்தை வணங்க வணங்க மனம் சுத்தியடைகின்றது. சுத்தி அடைய அடைய அவன்சாந்நித்தியத்தை அகம், புறம் எங்கும் காணலாம். ஆகையினால் மானுடப் பிறவி எடுத்திருக்கிற நாம் செய்யவேண்டியது மனதைச் சுத்தி செய்வதேயாகும். மனம் சுத்தியடைய அடைய நாம் மேலோர்கள் ஆகின்றோம்.

அல்லும் பகலும் மானிட ஜன்மத்தை நல்ல வழிகளில் பயன்படுத்தி வருவோமானால் முடிவான பொருளாகிய பரமனை எங்கும் காண்கின்றோம்; பரமனை அடையப் பெறுகின்றோம். "வீடுபெற நில்" என்பது ஔவைப் பாட்டியின் வாக்கு. சரீரத்தை உகுப்பதற்கு முன்பே உலக ஆசையைத் துறந்திருப்போமானால் பரமனை அடைகின்றோம். "ஸ்தித்வா அஸ்யாம் அந்தகாலேऽபி ப்ரஹ்ம நிர்வாணம் ருச்சதி"—இது கிருஷ்ணபகவானுடைய வாக்கு. "அந்தியகாலத்தில் வரும் ஆசையை ஒதுக்கிவிட்டுப் பரமனை நினைத்துப் பரமனை அடை" என்றார்கள். இப்பெரிய பேற்றை நாம் அனைவரும் பெறப் பரமன் திருவருள் புரிவாராக.

சுவாமி பிரேமானந்தர் வாழ்வும் வாக்கும்

(பிரம்மச்சாரி சேகர்)

[192ஆம் பக்கத் தொடர்ச்சி]

சுவாமி ஞானேசுவரானந்தர் மேலும் கூறுகிறார்: "நாங்களெல்லாரும் பயனற்ற வீண்பேச்சுக்களில் காலம் கழித்துக் கொண்டிருந்ததைச் சகிக்கமுடியாமல் சுவாமி பிரேமானந்தர் எங்களைப் பார்த்துப் பின்வருமாறு கடிந்துகொண்டார்: 'நீங்கள் எல்லாரும் முட்டாள்கள்; நீங்கள் ஓயாது பேசிக் கொண்டிருப்பதெல்லாம் சுத்த முட்டாள்தனமேயாகும். உங்கள் நா பேசக்கூடாது; உங்கள் பண்பு நலன்கள் தாம் பேசவேண்டும். ஏன் இவ்வாறெல்லாம் பிதற்றிக் கொண்டிருக்கிறீர்கள்? ரீங்காரமிட்டுக் கொண்டிருக்கும் தேனீக்களாகிய உங்களுக்கு இன்னும் தேன் அகப்பட்ட பாடில்லை போலும்!"

வங்காளி பாஷையில் ஒரு பழமொழி உண்டு; "காலில் அணியும் செருப்பைச் செப்பனிடுவது முதல் சாஸ்திரங்களிலுள்ள சுலோகங்களை உச்சாடனம் செய்வது வரை மிகச் சிறிய செயலையும் நிறைவாகவும் திருத்தமாகவும் செய்யவேண்டும்." இதைச் சுவாமி பிரேமானந்தர் எல்லாருக்கும் கற்றுக்கொடுத்தார். விவேகானந்த சுவாமிகளின் முக்கியமான போதனைகளுள் இதுவும் ஒன்றாயிருந்தது. சுவாமி பிரேமானந்தரும் அந்த நற்போதனையை அக்ஷரம் பிசகாமல் கடைப்பிடித்து வந்தார்.

ஒருமுறை சுவாமி பிரேமானந்தர், "இச் சிறுவர்கள் காய்கறி நறுக்குதல், இறைவழிபாடு செய்தல், கணக்கு வழக்குகளைச் சரி பார்த்தல், உபந்யாசம் முதலிய எல்லா விஷயங்களிலுமே தேர்ச்சி பெற்றவர்களாக விளங்கவேண்டும்" என்று கூறினார். "அவற்றில் அவர்கள் போதிய பயிற்சி பெறுவதற்காகத்தான் நான் முயற்சி எடுத்துக்கொண்டிருக்கிறேன். அவர்களிடம் நான் கொண்டிருக்கும் அன்பினாலும் அவர்களுடைய நலத்தின் பொருட்டு நான் கவலைப்படுவதனாலும் தான் அவ்வப்பொழுது எனக்குக் கோபம் ஏற்படுகிறது" என்றும் அவர் தொடர்ந்து கூறினார். இளம் சாதுக்கள் எப்படிக் கடவுளின் புதல்வர்களாவது என்று சுவாமி பிரேமானந்தர் அவர்களுக்குக் கற்றுக்கொடுத்தார்.

சாஸ்திர ஆராய்ச்சியைத் தொடர்ந்து செய்துவராத பிரம்மச்சாரிகளை அவர் சில சமயங்களில் மிகக் கடுமையாகத் திட்டுவது உண்டு. ஒரு பிரம்மச்சாரி தொடர்ந்து நெடு நேரம் தோட்டத்தில் ஏதோ வேலை செய்து கொண்டிருந்ததைப் பார்த்துக்கொண்டிருந்த சுவாமி பிரேமானந்தர் அவரருகில் சென்று, "நீ ஏதாவது படிக்கிறாயா இல்லையா? நீ இங்கிருப்பது ஒருசாதாரணக் கூலியாள்போல் வேலை செய்வதற்குத்தானா?" என்று கடிந்து கொண்டார். பயந்துபோன அந்தப் பிரம்மச்சாரி, 'அப்படி இல்லை, ஐயா' என்று மெதுவாகக் கூறினார். "நல்லது, பையா, உனக்கு மூன்றுமாத அவகாசம் தருகிறேன். அதற்குள் நீ சாஸ்திரங்களையெல்லாம் கசடறக் கற்றுவிட வேண்டும். இல்லையென்றால் நீ கங்கையைக் கடந்து செல்வதற்குத் தேவையான படகுக் கட்டணத்தைக் கொடுத்து உன்னை அனுப்பி விடுவேன்" என்று சுவாமி பிரேமானந்தர் அந்தப் பிரம்மச்சாரியை எச்சரித்தார். சுவாமி பிரேமானந்தர் இவ்வளவு கடுமையாக நடவடிக்கை எடுக்கக் கூடியவர் என்று யாரும் கற்பனைகூடச் செய்து பார்க்கமுடியாது. ஆயினும், அவர் அவ்வாறு கூறியது எதிர்பார்த்த பலனைக்கொடுக்கத் தவறவில்லை. அந்தப் பிரம்மச்சாரி சாஸ்திர ஆராய்ச்சியில் தீவிரமாக ஈடுபடலானார்.

சில நாட்களுக்குப் பிறகு வேடிக்கையான இன்னொரு சம்பவம் நிகழ்ந்தது. ஒருநாள் பிற்பகல் வேளையில் சுவாமி பிரம்மானந்தருடைய முன்னிலையில் சாதுக்களும் பிரம்மச்சாரிகளும் சேர்ந்து அவருடைய மாடியறையில் ஸத்ஸம்பாஷணையில் ஈடுபட்டிருந்தனர்; நேரம் போனதே தெரியவில்லை; யாரும் கீழே இறங்கி வருவதாக இல்லை. சுவாமி பிரேமானந்தர் கீழே நின்றுகொண்டே உரத்தகுரலில், "மேலே உட்கார்ந்துகொண்டு வம்பளந்து கொண்டிருக்கும் என்னருமைக் குழந்தைகளே,

உடனடியாகக் கீழே இறங்கி வாருங்கள். அடுத்த வேளைச் சாப்பாடு இனிமேல்தான் சமைக்கவேண்டியிருக்கிறது" என்று இயம்பினார்.

தம் குரு சகோதரராகிய சுவாமி பிரேமானந்தரை மேலும் சீண்டுதல் பொருட்டுச் சுவாமி பிரம்மானந்தர் ஆங்குக் குழுமியிருந்த பிரம்மச்சாரிகளிடம் கூறியதாவது: "நீங்கள் சுவாமி பிரேமானந்தரிடம் சென்றதும், 'மேன்மை தங்கிய ஐயா, தயவு செய்து இன்று எங்களுக்கு விடுதலை தாருங்கள். அப்பொழுதுதான் நாங்கள் தியானத்திலும் வழிபாட்டிலும் மற்ற சாதனங்களிலும் முறைப்படி ஈடுபடுவதில் ஏதும் சிரமம் இருக்காது. நீங்களே எங்களுக்கெல்லாம் சேர்த்து ஆகாரம் தயார் செய்துவிடுவீர்கள் என்று நம்புகிறோம்' என்று சொல்லுங்கள்."

சுவாமி பிரம்மானந்தரின் இக்கூற்றைச் செவிமடுத்துவிட்ட சுவாமி பிரேமானந்தர் உரத்த குரலில் மேலும் சொன்னார்: "மிகவும் நல்லது. நீங்கள் சமாதி நிலைக்குப் போவதில் எனக்கு ஆட்சேபனை இல்லை. நான் ஒருவனாகவே எல்லாக் காரியங்களையும் பார்த்துக்கொள்கிறேன். ஆனால் நீங்கள் தியானம் பண்ணிக் கொண்டிருக்கும் போதே உங்கள் மனம் சந்தைக்கடையில் உண்டாகும் இரைச்சலில் கருத்துச் செலுத்துவதாக எனக்குத் தெரிந்தால், உடனே உங்கள் காதைப் பிடித்து இழுத்து வந்து வேலையில் ஈடுபடுத்துவேன்." எச்செயலைச் செய்தாலும் அதுவும் ஒருவகை வழிபாடுதான் என்று இளம் சாதுக்களுக்குப் போதிப்பது சுவாமி பிரேமானந்தரின் முக்கிய நோக்கமாயிருந்தது.

ஸ்ரீ ராமகிருஷ்ணருக்கு உரியதாகப் பேலூர் மடம் உள்ளதென்றும் அதன் ஒவ்வோர் அறையிலும் அவர் எப்போதும் நடமாடிக்கொண்டிருக்கிறார் என்றும் சுவாமி பிரேமானந்தர் அவ்வப்பொழுது நினைவூட்டி வந்தார். ஆகையால் இந்த மடம் முழுவதும் இறைவனுக்குரிய ஆலயம் என்றும் அதை எந்தவிதமான களங்கமுமில்லாமல் மிகப் புனிதமானதாக வைத்திருக்க வேண்டியது ஒவ்வொருவரின் கடமை என்றும் சுவாமி பிரேமானந்தர் பிரம்மச்சாரிகளிடம் எச்சரித்து வந்தார்.

சுவாமி பிரேமானந்தர் பொதுவாகப் பெருந்தன்மையுள்ளவராக இருந்தபோதிலும் அவர் எளிதில் உணர்ச்சி வசப்படக்கூடியவர் அல்லர். சில சமயங்களில் அவர் முற்றிலும் தெய்விகப் பரவச நிலையில் மூழ்கியவராக ஆனந்த முற்றிருப்பது வழக்கமாயிருந்தது. அப்போதெல்லாம் தம் அருகில் இருந்தவர்களையும் கூட உயர்ந்த மன நிலைக்கு எடுத்துச் சென்று விடுவார். ஒருமுறை மடத்தில் அனைவரும் பஜனைப் பாடல்களைப் பாடிக்கொண்டிருந்த பொழுது சுவாமி பிரேமானந்தர் திடீரென்று தெய்விகப் பரமானந்தத்தில் மூழ்கி விட்டார். அவர் சுவாமி சாரதானந்தரைப் பார்த்து, "சகோதரா, இங்கு இப்பொழுது எத்தகைய பேரானந்தம் நிரம்பி வழிகின்றது பார்த்தாயா? நீயும் உன் இனிய குரலில் பாடா விட்டால் அந்த ஆனந்தம் குறைவுபட்டுப் போய்விடும்; இப்பொழுது நீ பாடுவாயாக!" என்று கேட்டுக்கொண்டார். தாம் நீண்ட நாட்களாகப் பாடாததால் சுவாமி சாரதானந்தர் சிறிது தயங்கினார். ஆயினும் சுவாமி பிரேமானந்தர் வற்புறுத்தியதால் அவர் பாடல் பாடியதுடன் நடனத்திலும் கலந்துகொண்டார். மறுநாள் சுவாமி சாரதானந்தர் குறிப்பிட்டார்: "ஆ! வயதான காலத்தில் பாபுராம் என்னை நடனமாடும்படி செய்துவிட்டார். அவருடைய வேண்டுகோளை யார்தான் மறுத்துரைக்க முடியும்?"

இறைவனிடம் பரிபூரண சரணாகதி அடைதல் என்பதற்குச் சுவாமி பிரேமானந்தரின் வாழ்க்கையே சான்றாக விளங்குகிறது. இறைவனுடைய இச்சைக்கு மாறாக அவர் எதையுமே செய்ய முடிந்ததில்லை. எப்பொழுதும் அவர் செய்யும் ஒவ்வொரு செயலுக்கும் ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சரின் சூட்சுமமானதும் ஆக்ஞாபிப்பதுமான தூண்டுதல் இருந்து வந்தது. அத்தகைய சந்தர்ப்பங்களில் தம் குருநாதருடைய திவ்யமான காட்சியும் அவருக்குக் கிடைத்தது. ஆயினும், அக்காட்சி சுவாமி பிரேமானந்தர் சந்தோஷமான சூழ்நிலையில் இருந்தபோது கிடைக்கவில்லை. ஏதாவது இக்கட்டான சந்தர்ப்பம் ஏற்பட்ட பொழுதுதான் அத்தகைய வழிகாட்டுதல் கிடைப்பதாயிற்று.

சுவாமி பிரம்மானந்தருடன் ஒரு முறை சுவாமி பிரேமானந்தர் ஒரு விஷயத்தில் பெரிதும் கருத்து வேற்றுமைகொண்டார். அதனுல் ஏற்பட்ட கோபத்தில் அவர் தமக்கென்று உடைமைப் பொருள்களாய் இருந்த சிலவற்றைச் சேகரித்துக்கொண்டு மடத்தைவிட்டுக் கிளம்பிவிட்டார். ஆனல் அவர் மடத்தின் வெளி வாயிற் கதவைச் சென்றடைந்த உடனே அவர் தோளில் அணிந்திருந்த அங்க வஸ்திரம் ஒரு க்ஷணத்திற்குள்ளாக அவர் கழுத்தைச் சுற்றிப் பின்னிக் கொண்டது. அவர் திரும்பிப் பார்த்தபொழுது அங்கே ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சர் நின்றுகொண்டிருந்தது போல் தெரிந்தது. "என் குழந்தாய், எங்கே புறப்பட்டு விட்டாய்? என்னை இங்கு விட்டு விட்டு நீ எவ்வாறு செல்ல முடியும்?" என்று அவருடைய குருநாதராகிய பரமஹம்சர் கூறுவதுபோல் சுவாமி பிரேமானந்தருக்குத் தோன்றியது. திடுக்கிட்டவராய் உள்ளே ஓடிச் சென்று சுவாமி பிரேமானந்தர் சுவாமி பிரம்மானந்தரின் பாத கமலங்களில் விழ்ந்து சாஷ்டாங்க நமஸ்காரம் செய்தார்.

1906ஆம் ஆண்டு சுவாமி பிரேமானந்தர் மற்ருெருமுறை புனிதம் நிறைந்த பூரிநகருக்கு யாத்திரையாகச் சென்ருர். ஒருநாள் கிறிஸ்தவ மதப் பிரசாரகர் ஒருவர் ஸ்ரீ ஜகந்நாதர் ஆலயத்திற்கு முன் நின்றுகொண்டு ஹிந்து மதத்தைப் பற்றி இழித்தும் பழித்தும் பேசிக்கொண்டிருந்ததைச் சுவாமி பிரேமானந்தர் பார்க்க நேர்ந்தது. அவருடைய கோபம் எல்லை கடந்து பொங்கியது. உரத்த குரலில் 'ஹரி போல், ஹரி போல்' — 'இறைவனுடைய நாமத்தை உச்சாடனம் செய்யுங்கள்' என்று ஜபித்தார். மிக விரைவில் நூறுபேருக்கும் அதிகமானவர்கள் அவரைச் சூழ்ந்துகொண்டு இறைவனின் திவ்விய நாமத்தை உச்சரிக்கத் தொடங்கி விட்டார்கள். ஒரே லயத்துடன் அவர்களனைவரும் அவ்வாறு பாடியதில் அந்தக்கிறிஸ்தவ மதப் பிரசாரகரின் குரல் அமுங்கிப் போயிற்று. வேறு வழியின்றி அவர் அவ்விடத்தைவிட்டுச் செல்லவேண்டியதாயிற்று. கோயில் அர்ச்சகர்கள் ஓடோடி வந்து சுவாமிக்கு நன்றி தெரிவித்துக்கொண்டனர். தங்களால் அந்தப் பாதிரியின் செயலைத் தடுக்க இயலாதிருந்தது என்றும் அவர்கள் தெரிவித்தனர். ஆனல் உணர்ச்சி மேலிட்டால் தாம் அவ்வாறு நடந்து கொண்டது குறித்து மௌனமுற்றவராய் அவர் கோயில் பிரகாரத்தை விட்டு அப்பால் சென்றுவிட்டார்.

வாய்ப் பிரசாரங்களின் மூலமும் மலிவான துண்டுப் பிரசுரங்களின் மூலமும் நாற்சந்திகளில் நின்று கொண்டு தங்கள் மதத்தை மக்களுக்கிடையே பரப்ப முயன்று வரும் கிறிஸ்தவர்களுக்கு சுவாமி பிரேமானந்தரின் ஆக்கபூர்வமான நடவடிக்கை ஒரு பாடமாக அமைந்துள்ளது. ஹிந்துமதமாகிய சனதன தர்மம் தன் பெருமையைத் தன் போக்கில் விளக்கிக்கொண்டிருக்கிறது. அதே சயமத்தில் மற்ற மதத்தினரின் குறுக்கீட்டை ஒரு பொழுதும் அனுமதிப்பதுமில்லை என்பதைச் சுவாமி பிரேமானந்தரின் செயல் விளக்குகிறது.

துன்பத்திலும் வேதனையிலும் ஆழ்ந்து கிடக்கும் மக்களிடம் அவர் பொழிந்த கருணைக்கு ஓர் அளவில்லை. இதை வெளிப்படுத்துவது போல் அவர் வாழ்வில் பல நிகழ்ச்சிகள் நடந்தன. இப்போது கூறப்படும் நிகழ்ச்சி குறிப்பிடத்தக்கது. கல்கத்தா நகரில் ஒருமேன்மையான குடும்பத்தில் பிறந்த ஓர் இளைஞன் கெட்ட சகவாசத்தால் போதை மருந்துண்ணும் பழக்கத்திற்கு அடிமையாகிவிட்டான். அவனுடைய உறவினர்கள் எவ்வளவோ முயன்றும் அவனைத் திருத்தமுடியவில்லை. அவர்களுடைய முயற்சிகளனைத்தும் தோல்வியடைந்ததால் அவர்கள் பெரிதும் வேதனைப் பட்டார்கள். அந்த இளைஞனின் சகோதரர் பேலூர் மடத்தில் ஒரு சந்நியாசியாக இருந்தார். அவர் தம் சகோதரனைப் பற்றிச் சுவாமி பிரேமானந்தரிடம் முறையிட்டார். உடனடியாக அவர் அந்த இளைஞனைப் பார்க்கப் புறப்பட்டுச் சென்ருர். நெடுநேரம் அவனுடன் வாக்குவாதம் செய்தபின், அவனை மறுநாள் மடத்திற்கு வருவதற்குச் சம்மதிக்கச் செய்தார். படிப்படியாக அவன் மனப்பான்மை திருத்தம் அடைந்து வந்தது. அடிக்கடி அவன் மடத்துக்கு வரத்தொடங்கினன். பின்பு ஒருமுறை சுவாமி பிரேமானந்தரின் அன்பின் மஹிமையைப் பற்றி அவன் கூறினன்: "அவர்

என்மேல் பொழிந்த கருணைக்கும் அன்பிற்கும் அளவு ஏது? என் உற்றார் உறவினரும் நண்பர்களும் என்னைக் கைவிட்டுவிட்டனர். ஆயினும், அவர் அன்புதான் என்னைக் கரை சேர்த்தது. என்னிடமிருந்த குற்றங் குறைகள் எல்லாம் அவருக்கு மிக நன்றாகத் தெரியும்; ஆயினும் அவர் என்மேல் மாறாத அன்பு செலுத்தினார்!" காலப் போக்கில் அவன் உலகப் பந்தங்களைத் துண்டித்துவிட்டு மடத்தில் ஒரு சந்நியாசியாகச் சேர்ந்துகொள்ளும் அளவுக்கு மாறிப் போனான்.

மடத்திற்கு அவ்வப்பொழுது வரும் பக்தர்களைச் சுவாமி பிரேமானந்தர் வரவேற்று உபசரித்த முறை அவருடைய வரம்பில்லாத பேரன்பைக் காட்டுவதாய் இருந்தது. சாதாரண உலக இயல்புடைய மக்கள் வாய் நிறைய வரவேற்பது போல் அவர் நடந்துகொள்ளவில்லை. பக்தி ரசம் ததும்பும் வகையில் அவர் தமக்கு அறிமுகம் ஆகாதவர்களையும் வரவேற்று நன்கு உபசரித்தார். 'நர சேவையே நாராயணன் சேவை' என்னும் கோட்பாட்டிற்கு இணங்க, ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சரின் பெருங்கருணையினால் சுவாமி பிரேமானந்தருக்கு இத்தகைய உயர்ந்த மனநிலை வந்தமைந்திருந்தது.

இவ்வாறு மடத்துக்கு வரும் பக்தர்கள் நேரங்காலம் பார்த்து வருவதில்லை; நினைத்த நேரமெல்லாம் அவர்கள் வந்துகொண்டிருப்பார்கள். சாதுக்கள் பிற்பகலில் சிறிது ஓய்வெடுத்துக்கொண்டிருக்கும் வேளையில்தான் அன்பர்கள் பெரும்பாலும் வந்து சேர்வார்கள். மற்ற சாதுக்களைத் தொந்தரவு செய்யாதிருக்கும் பொருட்டு, சுவாமி பிரேமானந்தர் தாமே அமைதியாகச் சமையலறைக்குச் சென்று வந்திருக்கும் பக்தர்களுக்குத் தேவையான உணவைத் தயாரிப்பார். இவ்வாறு சுவாமி பிரேமானந்தர் நடந்துகொள்வது குறித்து யாராவது அவரிடம் கேட்டால் அவர் கூறுவார்: "இல்வாழ்வில் ஈடுபட்டுள்ள மக்களுக்கு எத்தனையோ காரியங்கள் இருக்கும். அவர்கள் சரியான நேரத்தில் எப்பொழுதுமே வருவது என்பது சாத்தியப்படுமா? அவர்களுக்குச் சேவை செய்வதைத் தவிர நாம் வேறு எதற்காக இருக்கிறோம்? அவ்வாறு செய்வதால் சிறிது சரீர உழைப்பை மேற்கொள்ள வேண்டியிருக்கிறது; அவ்வளவுதானே? நம் குருநாதர் கருணையினால் நமக்கு இங்கு ஒன்றும் குறையில்லை. அவருடைய குழந்தைகளாகிய இவர்களுக்குச் சேவை செய்வதால் நாம் ஆசீர்வதிக்கப்பட்டவர்களாகிறோம், அல்லவா?"

மிகவும் லோகாயதமான மக்கள்கூட சுவாமி பிரேமானந்தரிடம் ஒளிர்ந்த ஞானப் பொக்கிஷத்தை உணர்ந்துகொள்ள முடிந்தது. ஒரு முறை கல்கத்தா நகரிலிருந்து வெளியான பத்திரிகையின் ஆசிரியர் ஒருவர் பேலூர் மடத்தில் நடைபெற்ற ஒரு விழாவிற்கு வந்திருந்தார். அவர் தம் நகைச்சுவை உணர்விற்காகவும் மகிழ்ச்சியூட்டும் எளிய நடையில் எழுதுவதற்காகவும் மக்களால் பெரிதும் விரும்பப்பட்டிருந்தார். சுவாமி பிரேமானந்தர் தம்மைக் கடந்து சென்றபொழுது, அவ்வாசிரியர் வேடிக்கையாக, "எங்களுக்காக என்ன பொழுது போக்கு ஏற்பாடு செய்திருக்கிறீர்கள்?" என்று கேட்டார். அதற்குச் சுவாமி பிரேமானந்தர், "உயிர்த்துடிப்புள்ள பேனாவினின்று மகிழ்ச்சியையும் சந்தோஷத்தையும் அள்ளித்தரும் உங்களைப் போன்ற திறமைசாலிகளுக்கு நாங்கள் என்ன இன்பத்தைக் கொடுக்கமுடியும்?" என்று சிரித்துக்கொண்டே கூறினார். உடனே அந்த ஆசிரியர் அடக்கமாகக் கூறினார்: "நீங்கள் என்னைப்பற்றிக் குறிப்பிட்டது ஒருவேளை உண்மையாய் இருக்கலாம்; ஆனால் உங்களுடைய எல்லாச் செயல்களிலும் ஒரு பரவசம் நிறைந்த இனிமை இருப்பதை நான் காண்கின்றேன். உண்மையில், தாங்கள்தாம் இனிமையே ஓர் உருவெடுத்தவராக விளங்குகின்றீர்கள்!"

அவருடைய அபரிமிதமான அன்பு ஜாதி, மத பேதங்களையெல்லாம் கடந்ததாயிருந்தது. ஒரு சமயம் முஸ்லீம் கனவான் தம் ஹிந்து நண்பர்கள் பலருடன் மடத்திற்கு வந்திருந்தார். பூஜையறைக்குச் சென்று வந்ததும் அவர்களுக்கு உணவு பரிமாறப்பட்டது. எல்லாரும் சாப்பிட்டு முடித்துவிட்டனர்; ஆனால் அங்கிருந்த யாருமே அந்த முஸ்லீம் நண்பர் சாப்பிட்ட தட்டை எடுத்து அப்புறப்படுத்த முன்வரவில்லை. சுவாமி பிரேமானந்தர் தாமே அச்செயலைச் செய்து ஜீவர்கள் அனைவரும் இறைவனின் சொரூபங்களே என்பதை நிரூபித்துக்காட்டினார். (தொடரும்)

லட்சிய வாழ்க்கை

(சகோதரி நிவேதிதையின் ஆங்கிலக் கட்டுரையைச் சேலம் சகோதரி தங்கம் தமிழில் மொழிபெயர்த்தது)

ஒவ்வொரு மனிதனும் தன்னை எப்படி மதிப்புப் போடுகிறன் என்பதிலிருந்து தான் வாழும் சமுதாயத்தின் தரத்தை அவன் எப்படி மதிப்பிடுகிறன் என்பதைத் தெரிந்து கொள்ளலாம். தான் இன்ன குடும்பத்தைச் சேர்ந்தவன் என்ற எண்ணத்தைப் போல வேறு எந்த உணர்ச்சி ஒருவனுக்குப் பெருமையைத் தரும்? 'நான் இந்த நாட்டைச் சேர்ந்தவன், இந்த இனத்தைச் சேர்ந்தவன்' என்ற பெருமையைப் போல வேறு எது ஒருவனைப் புகழ் மிக்க வாழ்க்கை வாழத் தூண்டுகிறது? இவ்வாறு தன்னையும், தன் குடும்பத்தையும் தன் நாட்டையும் உயர்வாக மதிக்கின்றவன்தான் பிறரிடமும் அத்தகைய எணணத்தோடு மரியாதையாக நடந்து கொள்வான்; அவனே சிறந்த பாரம்பரியத்தில் வந்த ஒருவனுக்குரிய மரியாதையைத் தனக்குப் பிறர் தரவேண்டும் என்று எதிர்பார்ப்பான். இந்த உணர்ச்சிகளையெல்லாம் தற்பெருமை என்று ஒதுக்கி விடுவதற்கில்லை. ஒரு தனி மனிதன் தன் பெருமையையும் சுதந்திரத்தையும் எப்படி நிலைநாட்டுகிறன் என்பதை அடிப்படையாக வைத்துத் தான் அவன் தாய் நாட்டின் சுதந்திரத்தை உலகின் மற்ற நாடுகள் மதிப்பிடுகின்றன. எனவே தனக்குப் பெரிய லட்சியங்களை வைத்துக்கொண்டு அவற்றை அடையப் பாடுபடுபவன் தான், இசைபட வாழ்வதே பொருளுற்ற வாழ்வு என்று கருதுபவன் தான், தன் சமுதாயத்தையும் நாட்டையும் உயர்ந்த லட்சியத் தின்கண் இட்டுச் செல்கிறன்; உலகின் கணிப்பில் தன் நாட்டைப் பெருமை மிக்கது ஆக்குகிறன்.

குடிப்பெருமை ஒருவனை இழிந்த செயல்கள் செய்யவிடாமல் கட்டுப்படுத்துகிறது என்பதை உணர்ந்த நம் முன்னேர்கள் இந்தியாவில் இந்தக் குடிப்பெருமையை வளர்த்திருக்கிறர்கள். தான் பிறந்த குடியைப்பற்றி ஒவ்வொருவனும் பெருமை கொள்வதால் சமுதாய, தேசிய நலன்களும் பாதுகாக்கப்படுகின்றன என்பதை இந்தியர்கள் பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளாக உணர்ந்திருக்கிறர்கள். படிப்பு, பட்டம், பதவி- இவை குறித்துவரும் பெருமையைப் போல, குடிப்பெருமையிலும் நன்மையும் தீமையும் கலந்தே இருக்கின்றன. ஒருவனை நற்செயல் செய்யத் தூண்டும் உடன்பாட்டு நிலையில், குடிப்பெருமை வளர்த்துக் கொள்ளப்பட வேண்டிய நல்லுணர்ச்சியே. ஆனல், தன்னைப் போலவே பிறருக்கும் அவரவர் குடிச்சிறப்பைப் பற்றிப் பெருமைகொள்ள உரிமை உண்டு என்பதை மறுக்கும் போது தான் இந்தக் குடிப்பெருமை ஒதுக்கப்பட வேண்டிய தீய பண்பு ஆகிறது. சமுதாயத்திலிருந்து நம்மைத் தனியாகப் பிரித்து, நாம் மற்றவர்களை விட உயர்ந்தவர்கள் என்ற எண்ணத்தை ஊட்டுகின்ற ஆணவம் அற்பத்தனமானதும், பண்பற்ற பாமரத் தன்மையின் விளைவும் ஆகும். இந்த ஆணவம் மற்றவர்களை இழிவுபடுத்தி அவர்களுக்கு வேதனையையும் அவமானத்தையும் தருகிறது. நம்முடைய குடும்பம் எவ்வளவு தான் சிறப்புடையதாக இருந்தாலும் இதைவிட வேறு யாரும் எந்த வகையிலும் சிறப்புடையவர்களாக மாட்டார்கள் என்று சொல்லுமளவுக்குப் பெரியது ஆக முடியாது. ஏனென்றல், ஏதாவதோர் அம்சத்தில் நம்மைவிடச் சிறந்தவர்கள் மற்ற குடும்பங்களில் இருக்கத்தான் செய்வார்கள். எனவே நம்முடைய குலம் குடியைப்பற்றி நாம் கொள்ளும் பெருமை ஓர் அளவுக்குட்பட்டதாகத் தான் இருக்க முடியும். (இந்தக் குடிப்பெருமையையும் தாண்டிச் செல்லும் பக்குவம் நமக்கு வரும்)—உண்மையான சிறப்பு என்பது எளிமையில் இருக்கிறது, பிறர்க்கு இல்லாத பெருமை, சலுகை, அதிகாரம் தனக்கு இருக்கிறது என்று காட்டிக்கொள்ளும் அற்பத்தனத்தில் அல்ல என்று உணரவேண்டும்.

அப்படியானல் குடிப்பெருமை குறித்து நாம் ஏன் கருத்தைச் செலுத்த வேண்டும் என்ற கேள்வி எழலாம்.குடிப்பெருமைக்கு முக்கியத்துவம் கொடுப்பதற்கும் காரணம் இருக்கிறது. 'முன்பு செய்த கர்மம் அல்லது வினைப்பயன் இப்போது என் வாழ்வைப் பாதிக்குமென்றல் இப்போது நான் 'செய்யும் வினைகள்

என் எதிர்காலத்தை நிர்ணயிக்கும். எதிர் காலத்தை நல்லமுறையில் அமைத்துக்கொள்ள இப்போது நான் செய்யும் வினை பயன்படும். எனவே முற்பகல் செய்தது பிற்பகல் விளையும் என்பது தனக்குக் கொடுக்கப்பட்ட வாய்ப்பு ஆகும் என்று அறிஞன் ஒருவன் கருதுகிறான். கர்மம் ஒரு வாய்ப்பு என்பதுதான் கர்மத்தைப் பற்றிய சரியான கொள்கையும் கூட. அது போலவே குடிப்பெருமையும் ஒருவனுக்குக் கொடுக்கப்பட்ட வாய்ப்பு, அவனை நம்பி ஒப் படைக்கப்பட்ட பொறுப்பு ஆகும். 'என்நிலை உயர உயர என் கடமையும் ஆற்றுதற்கு அரிய தாகவும் கடினமானதாகவும் ஆகிறது. நான் பிறந்த குடி தூய்மை மிக்கது ஆக ஆக, அந்தப் பெருமையைக் காப்பாற்ற வேண்டிய பொறுப் புடைய என் சகிப்புத் தன்மையும் அதிகமாக வேண்டும் என்று ஒவ்வொருவனும் உணர வேண்டும். உண்மையைப் பார்க்கப் போனால் தோன்றிற் புகழொடு தோன்ற வேண்டும் என்று கருதுபவர்கள், தம்குடியின் பெருமை யினால்மட்டும் தமக்குப் பெருமை வந்து விடாது; பாராட்டத்தக்க பெருவாழ்வு வாழ்ந் தால்தான் தமக்கும் புகழ் கிட்டும் என்ற உண் மையை உணர்வார்கள். நம்குடியின் பெரு மையை நம்முடைய சிறந்த செயல்களால் தான் நிரூபித்தாக வேண்டும். அதே சமயம், நம்மைப் போலவே பிறருக்கும் தம்தம் பெருமையை நிலைநாட்டிக்கொள்ள உரிமை உண்டு என்பதை உணரவேண்டும். எல்லாச் சிறப்புக்களும் எல்லாருக்கும் சாத்தியமே. ஏனென்றால் நம் மைப்போலவே மக்கள் எல்லாரும் எல்லையற்ற வனும் நித்திய சுத்தனும், நித்திய முக்தனு யும் எல்லாம் அறிபவனும் உள்ள ஈசுவரனின் தோற்றங்களே. மனிதர்கள் வேண்டுமானால் தமக்குள் வேறுபாடுகள் கற்பித்துக்கொள்ள லாம். இறைவனே அந்த வேறுபாடுகள் எதை யும் காண்பதில்லை. மக்கள் எல்லாருக்கும் போராடி முன்னேறும் உரிமையைச் சமமாக இறைவன் வழங்கியிருக்கிறான். இந்த உரிமை யைப் பயன்படுத்திச் சிறப்புத் தேடிக்கொள் வதை அவன் நம் இச்சைக்கு விட்டிருக்கிறான்.

உண்மை இப்படி இருப்பதால் நாம் உயர்ந்த லட்சியங்களையே ஏற்படுத்திக்கொள் வோம். உலக வாழ்க்கை என்னும் வாய்ப்பை எப்படிப் பயன்படுத்தப்போகிறோம் என் பதைத் தீர்மானிப்போம். லட்சியத்தின் பொருட்டு நம் அகங்காரத்தை முற்றிலும் துறப்போம். என் அந்தஸ்துக்கேற்ற இதைத் தான் செய்வேன், இப்படித்தான் செய்வேன் என்று கௌரவம் பார்க்காமல் எந்தப் பணி யையும் செய்து எந்தப் பாதையிலும் சென்று நம் லட்சியத்தைப் பின்பற்றுவோம். இறுதி வரையில் நம் முழுச் சக்தியையும் பயன்படுத்தி லட்சியத்தை அடையப் பாடுபடுவோம். எதைச் செய்தாலும் அதில் சக்தியையெல் லாம் திரட்டி ஈடுபடுத்துவோம். வசதி, சுகம் இவற்றில் ஆசையைத் துறப்போம். லாபநஷ் டக் கணக்குப் பார்க்கும் மனப்பான்மையை விட்டு விடுவோம். அகங்காரத்தை ஒதுக்கித் தள்ளுவோம். நம் முன் இருக்கும் சாதனை களில் மிகப் பெரியவற்றையே நிகழ்த்து வோம். லட்சியம் நம் கைக்கு வரும் முன் னர் நம் போராட்டத்தை நிறுத்திவிடாமல் தொடர்ந்து நடத்துவோம். இதுதான் நம் ஒவ்வொருவருடைய வாழ்க்கைத் திட்டமாக இருக்கவேண்டும். அப்படி இருந்தால், குடிப் பெருமை என்பது ஆரம்பத்தில் நமக்கு முன் னேற உதவுகின்ற ஒரு வாய்ப்பு; ஆனால் முன் னேற்றத்திற்கு இன்றியமையாத தேவை அல்ல என்பதை உணர்வோம். குடிப்பெரு மையே வாழ்வின் லட்சியமாக ஆகிவிட முடி யாது என்பது நமக்கு விளங்கும். அப்போது தான் 'பிரம்மத்தை அனுபூதியில் அறிந்தவனே பிராம்மணன்' என்ற நம் முன்னோர் வாக்கின் முழுப்பொருளும் நமக்கு விளங்கும்.

இன்றைய இந்தியாவில் இவ்வாறு லட்சிய வாழ்வு வாழ விரும்புவோர் என்ன செய்ய முடியும் என்பதை ஆராய்வோம். நாம் கற் றுத் தேறவிரும்பும் ஒவ்வொரு கலை ஞானத் திலும் அததற்குரிய பிரச்னைகள் உள. தற்கால விஞ்ஞானத் துறையும் தனக்கே இயல்பான சிக்கல்களும் கேள்விகளும்கொண்டு விளங்கு கிறது. லட்சியத்திலும் செயலிலும் (பிறப்பில் அல்ல) பிராம்மணனாய் இருக்க விரும்புகின்ற இன்றைய இந்திய இளைஞன் இந்த விஞ்ஞா னத் துறையின் சிக்கல்களை விடுவிக்க முயல வேண்டும். இன்று மற்ற நாட்டு இளைஞர் களிடம் காணப்படும் உண்மையை அறியும்

ஆவல் இந்திய இளைஞனுக்கு வரவேண்டும். ஒரு குழந்தையின் மனதில் புதிய புதிய உண்மைகளைத் தெரிந்து கொள்ளவேண்டும் என்ற ஆவலைத் தூண்டிவிட்டால் அவனுக்குக் கல்வி முழுவதையும் அளித்துவிட்டது ஆகும். ஏனென்றால் அறிவைப் பெருக்கிக்கொள்ளும் துடிப்பு ஒருவனுக்கு ஏற்படும்போது அதை நிறைவேற்றிக்கொள்ள அவன் செய்யும்முயற்சியெல்லாம் அவனுடைய கல்வி ஆகிவிடும். அப்படிப்பட்ட ஆவலை நம்மிடத்தில் எழுப்பிக்கொள்ள முடியாதா? விமானங்களும் மோட்டார் கார்களும் (இராக்கட்டுகளும் விண்வெளிக்கப்பல்களும்) இந்தியரின் அறிவுத்திறனால் மேம்படுத்தப்பட முடியாதவையா? விஞ்ஞானக் கண்டு பிடிப்புக்களைப் புதிதாகச் செய்யவோ ஏற்கனவே உள்ளவற்றைத் திருத்தி அமைக்கவோ இந்தியருக்கு அறிவுத் திறன் இல்லையா? இந்தியரின் மனோசக்தி ஐரோப்பியரின் சக்தியைவிடத் தாழ்ந்ததா? 'இல்லை. அவர்களுக்கு இணையான திறன் உடையதே' என்று சொன்னால் அதை நிரூபிக்கும் பொறுப்பு நமக்கு ஏற்படுகிறது. வெளிப்பகட்டான, உள்ளே விஷயமற்ற லட்சியங்களை விட்டுவிடுவோம். உண்மையான லட்சியங்களை ஏற்படுத்திக்கொண்டு நம் அறிவை விரிவுபடுத்துவோம். உண்மையை அறிந்து அதை மனித இனத்திற்குப் போதிப்பதற்கும பயன்படுத்துவதற்கும் அறிவைப் பெருக்குவோம். பிறருடைய முயற்சியின் விளைவாகக் கண்டு பிடிக்கப்பட்ட உண்மைகளை நம்முடையவை என்று சொல்லிக்கொண்டு வீண் பெருமை கொள்ளலாகாது. அப்படிச் செய்வது கேலிக்குரியதாம். நமக்குநாமே கடுமையாக உழைத்து லட்சியத்தைத் தவிர வேறு எதையும் நினையாதிருப்போம். படிக்க எடுத்துக் கொண்ட பாடத்தில் என்னவெல்லாம் தெரிந்து கொள்ள முடியுமோ அத்தனையும் தெரிந்து கொண்டுவிடுவோம். ஆராய்ச்சிக்கு எடுத்துக் கொண்டிருக்கும் விஷயததைக் குறித்த சிறந்த புத்தகங்கள் எல்லாவற்றையும் படிப்போம். ஆராய்ச்சிக்குத் தேவையான பொருட்களைச் சேகரிப்பதாய் இருந்தால் நம் சேகரிப்பு குறைவற்றதாய் இருக்கட்டும். கஷ்டங்கள் எதுவும் நம்மைப் பயமுறுத்திவிடக்கூடாது. இடும்பைக்கு இடும்பை படுப்பவன் தேவர்களின் மைந்தன் ஆகிறான். அவனுக்குத் தெய்வீக ஆற்றல் வந்து வாய்க்கிறது. அவன் அமரர்களுக்கிடையில் இடம் பெறுகிறான்.

இவ்வாறு பெரிய லட்சியங்களுக்காக எடுத்துக் கொள்ளும் முயற்சியை இன்னார்தான் செய்யலாம், இன்னார் செய்யலாகாது என்று இல்லை. ஆண், பெண் என்ற வித்தியாசங்களெல்லாம் ஆங்கு இல்லை. ஆனால் பிறர் உதவி ஏதும் இல்லாமல் தானே அலாதியாக முயற்சி செய்து யாரும் வெற்றி பெற முடியாது. எல்லாரும் சேர்ந்து பாடுபடுவது அவசியமாகிறது. ஒருவன் ஒரு பெருநிலையை முயற்சியால் அடைகிறான் என்றால் அந்தப் பெருநிலையை அடைய வல்ல இருபது பேர் அவன் பின் வந்து கொண்டிருக்கவேண்டும். நாம் கற்ற கல்வியெல்லாம் முழுக்க முழுக்க நம்முடையது அன்று. நம்முடைய முயற்சியால் மட்டுமன்றி பிறருடைய உதவியாலும் அக்கல்வியை நாம் பெற்றிருக்கிறோம். நாம் ஒருவராகவே தேவையானவற்றையெல்லாம் செய்ய முடியாது. நம் சமுதாயம் நமக்காக உயர்ந்த லட்சியத்தை அமைத்துக்கொடுக்கிறது. சமுதாயம் நமக்கு அளிக்கும் உதவியைப் பயன்படுத்திக்கொண்டு உலகின்முன் நாம் வெற்றிபெறுகிறோம். இவ்வாறு ஒவ்வொருவனின் வெற்றியும் அடுத்தவனின் வெற்றியிலிருந்து சக்தி பெறுகிறது.

இப்படிப்பட்ட லட்சிய வாழ்க்கை வாழத் தேவையெல்லாம் தெளிவாகச் சிந்திக்கும் திறனே. சிந்தனையில் தெளிவு ஏற்படுவதற்கு உழைப்பும் அறிவும் தேவை. தெளிந்த சிந்தனையும் முறையாக உரிய இடத்தில் வைக்கப்பட்ட அன்பும்தான் எந்தத துறையிலும் நமக்கு வெறறியைத் தரும். தனனுடைய கடந்த காலச் சாதனைகளையும் இயல்பையும் அறிந்து, தற்காலத்தின் தேவைகளையும் உணர்ந்து அவற்றிற்கு உண்மையாக நடந்து கொள்கிற ஒரு நாடு லட்சக்கணக்கானபெரிய மூர்த்திகளை உருவாக்கும்.எனவே தனிமனிதனையும், அவன் மூலம்சமுதாயத்தையும் உயர்த்துகின்ற பெரிய லட்சியங்களை மேற்கொண்டு அவற்றிற்காகப் பாடுபடுவோம். அப்போது நம் வாழ்க்கை புகழுக்கு உரிய லட்சிய வாழ்க்கை ஆகும்.

புனிதப் பொதிகைமலை

(சுவாமி அகிலானந்தர்)

தமிழ்நாட்டின் தென்பகுதியில் அமைந்திருக்கும் மலைவளம் பொருந்திய அகஸ்திய முனி வாழ்ந்த புனிதமலைப் பிரதேசம் பொதிகை என அழைக்கப்படுகிறது. இப்பிரதேசத்தைத் தமிழ்நாட்டில் பெரும்பாலோர் அறிந்திருப்பார்கள். ஆனால் பழைய பொதிகையாகிய அகஸ்தியர் தவம் செய்த மலை உச்சியையும் மலைமகளின் காட்சியையும் இயற்கையன்னையின் எழில் அழகையும் கண்டுகளித்திருப்பவர்கள் சிலரே இருப்பார்கள். மலைப்பாதையின் மொத்தத் தூரம் சுமார் நாற்பது கி. மீட்டர் ஆகும்.

இந்த ஆண்டு ஏப்ரல் மாதம் 30ஆம் தேதி காலை சுமார் 8-30 மணிக்கு நெல்லை மாவட்டம் பாபநாசத்திலிருந்து இந்த யாத்திரை துவங்கியது.

பயணத்தில் கலந்துகொண்ட அன்பர்கள் 79 பேர், தாய்மார்கள் 3 பேர், சமையல்காரரும் வழிகாட்டியும் 10 பேர் ஆக மொத்தம் 92 பேர் நான்கு பிரிவினராகப் படகில் நான்கு முறை சென்று எல்லாரும் பாபநாசம் அணையைப் படகின் மூலம் கடந்து அக்கரையை அடைய மணி 11-30 ஆகிவிட்டது. நான்கு புறங்களிலும் கோட்டைச்சுவர் போன்ற மலையின் அமைப்பும் அதன்பச்சை வண்ண அழகும், கடல் போன்று காட்சியளிக்கும் தண்ணீரின் அழகும் கண்கொள்ளாக் காட்சியாக இருந்தன. இயற்கை அழகை வெல்வதற்குச் செயற்கையாக எவ்வளவுதான் முயன்றாலும் முடியாது என்பதை அங்கு நாம் காணலாம். துலுக்கன் மொட்டை என்ற பாறையிலிருந்து கடுமையான மலைப் பாதை ஆரம்பமாகிறது. வெயிலின் கடுமை அந்த இடத்தில் யாத்திரிகர்களைச் சோர்வடையச் செய்கிறது. பயணம் சென்றிருந்தவர்களில் பெரும்பாலோர் இளவயதினராயிருந்ததால் சிரமத்தையும் களைப்பையும் பொருட்படுத்தாமல் ஆங்காங்கு இறைவனின் திருநாமத்தை ஓதிக்கொண்டு அனைவரும் மகிழ்ச்சியுடன் தொடர்ந்து சென்றோம். வயதான பெரியவர்களும் தாய்மார்களும் சிரமப்பட்டார்கள். புருஷோத்தமன் என்னும் அன்பர் எல்லாரையும் உற்சாகப்படுத்தி நன்கு வழி நடத்திச் சென்றார். மலையைக் கடந்து சுமார் 12-30 மணிக்கு உள்ளாறு என்னும் இடத்தை அடைந்து நாங்கள் எடுத்துச் சென்ற மதிய உணவைச் சாப்பிட்டோம். ஒரு மணி நேரம் ஓய்வெடுத்துக் கொண்டு மீண்டும் பயணத்தைத் தொடர்ந்தோம். மேலே செல்லச்செல்ல இயற்கையின் அழகும் அதிகமாகிக்கொண்டே செல்கிறது. மனதில் அளவு கடந்த மகிழ்ச்சி உண்டாகிறது. அந்த இன்பம் ஆத்ம சாதனத்தில் மேலே செல்லச் செல்லக் கிடைக்கும் பேரானந்தத்துக்கு நிகராக இருந்தது. தூய்மையான காற்று, நல்ல அன்பர்கள், கண்ணுக்கு இனிமையான சூழ்நிலை—மனித வாழ்விற்கு இன்றியமையாதவைகளாம். இவை யனைத்தும் அங்கு எங்களுக்குக் கிடைத்தன. ஏற்றமான மலைப் பகுதி உடலுக்கு உறுதியளிக்கும் பணியைத் தன் போக்கில் செய்தது. குளிர்ந்த தண்ணீர் அனைவருக்கும் புத்துணர்ச்சியை ஊட்டியது.

மேல் நோக்கிச் சென்றுகொண்டிருக்கும் போது ஓரிடத்திலிருந்து கீழ்நோக்கிப் பார்த்தால் பாண தீர்த்தத்தின் காட்சி தெரிகிறது. மலையழகை ரசித்தவண்ணம் இறைவனின் நாமத்தை உச்சரித்துக்கொண்டு சென்ற நாங்கள் மாலை சுமார் நான்கு மணிக்கு 12 கி. மீட்டர் தூரத்தில் உள்ள கன்னிக்கட்டி என்ற வன இலாகாவினர் பங்களாவை அடைந்தோம். வன இலாகா கார்டுகள் நல்ல உதவிபுரிந்தனர். இந்த மாதத்தில் இப்பகுதியில் அட்டையின் தொல்லை குறைந்திருக்குமாம்; ஆனால் அன்று கடுமையானமழை பெய்ததால் அன்பர்கள் பலரிடம் அட்டைகள் தங்கள் வேலையைக் காட்டின. உப்பு நீரை அட்டையின்மீது தெளித்தால்அது தன்பிடியை விட்டுவிடுகிறது; இதுதான் அட்டைக்கடிக்கு மருந்து. எல்லாருமாகச் சேர்ந்து இரவு உணவு சாப்பிட்டு விட்டு நன்றாக ஓய்வெடுத்துக்கொண்டோம். அங்கு மண்ணெண்ணெய் விளக்குகளைத்தான் பயன்படுத்த வேண்டும். அன்றிரவு அங்கேயேதங்கிவிட்டு மறுநாள்

1—5—84 அன்று காலைச் சிற்றுண்டி அருந்திய பின் எங்கள் பயணத்தைத் தொடர்ந்தோம். நாங்கள் சென்ற வழியில் இரண்டு ஏலக்காய் எஸ்டேட்டுகளும் இருந்தன. இடையிடையே குறுக்கிடும் நீரோடைகள் எங்கள் களைப்பைப் போக்கின. யானைகள் அங்கு அதிகம் இருப்ப தால் நாங்கள் சப்தமிட்டுக்கொண்டும், இறை வனின் நாமங்களை உச்சரித்துக்கொண்டும், சங்கு ஓசையை எழுப்பிக்கொண்டும் சென் றோம். கடுமையான ஏற்றப் பாதையில் இறை வனின் சிருஷ்டியை எண்ணி வியந்து கொண்டே சென்றோம். பேயாறு என்னுமிடத் தில் நாங்கள் சிறிது தூரம் வழிமாறிச் சென்று விட்டோம். பிறகு தக்க வழியை அறிந்து கொண்டு மறுபடியும் எங்கள் பயணத்தைத் தொடர்ந்தோம்.

(குறிப்பு: பயணம் செல்ல விரும்புபவர்கள் முன்கூட்டியே **M. S.** சுந்தரம்பிள்ளை அவர் களுடன் கடிதம் மூலம் தொடர்பு கொள்வது நல்லது. நபர் ஒருவர் *1* படி பச்சரிசியும் ரூ *25-00*ம் செலுத்தவேண்டும். தண்ணீர் கொண்டுசெல்ல ஒரு கேன், மழைக்கோட், கம்பளி, பாலித்தீன் பேப்பர், டார்ச் ஆகிய பொருள்களை உடன் கொண்டு செல்லவேண் டும். ஒவ்வொருவரும் தம் உபயோகத்திற்கு அவல், குளுக்கோஸ், வாழைப்பழம், மிட்டாய் எடுத்துச் செல்லலாம்.)

இயற்கையழகு நிறைந்த மலையினூடே கடுமையான ஒற்றையடிப்பாதையின் வழியே எறும்பு ஊர்வதுபோல் சென்று கல்லாறு என்ற நீரோடையில் நீராடிவிட்டு உணவருந் தியபின் சிறிது ஓய்வெடுத்துக்கொண்டோம். அதற்கும் மேலே வனம் இன்னும் அடர்த்தி யாக உள்ளது; யானைக்கடி ஈ என்னும் பெரிய ஈயின் தொல்லை அங்கு அதிகம் இருந்தது. சில குறுகலான இடங்களில் ஒருவரை ஒருவர் கையைப்பிடித்து மேலே அழைத்துச் செல்ல வேண்டியிருக்கிறது. சுற்றிலும் பல மூலிகைச் செடிகளும் வண்ணவண்ணப் பூச்செடிகளும் நிறைந்துள்ளன.

அடுத்த படியாகச் சங்கு முத்திரை என்னு மிடத்தில் ஓய்வெடுத்துக் கொண்டு கடைசி மலையாகிய அகஸ்தியர் மலையை நோக்கிப் பயணம் செய்தோம். இப்பகுதியில் மலை வளம் குறைவு; வனப்பகுதி இல்லாததால் ஈக்கடி இல்லை. ஆனால் மிக ஏற்றமான வழுக் கலான பாதை; பல இடங்களில் கயிறு, கம்பி, மற்றும் ஆட்கள் துணையுடன் தான் ஏறமுடி யும். மலையின் உயரம் *6116* அடி. நல்ல குளிரில் பயணத்தைத் தொடர்ந்து அடைய வேண்டிய இடத்தை அடைந்தோம். உடனே இறைவனின் திருநாமம் எங்கும் ஒலித்தது; அன்பர்களின் உற்சாகத்தை அது வெளிப் படுத்துவதாயிருந்தது. அகஸ்தியர் சிலையைப் பீடத்தில் அமர்த்தி பூஜை நிகழ்த்தப்பட்டது. அப்போது மாலை *3-45* ஆகிவிட்டது. அங்கு நல்ல தண்ணீர் குடிக்கக் கிடைப்பதில்லை. ஓரிடத்தில் சிறு குட்டை போல் நீர் தேங்கி யுள்ளது. இறைவனைப்பற்றிய சிந்தனையில் இயற்கையழகின் நடுவில் நாங்கள் பேரின்பம் அடைந்தோம்.

நாங்கள் ஒவ்வொருவரும் கொண்டு சென் றிருந்த இரவு உணவைச் சாப்பிட்டோம். புல், இலை, தழைகளைக் கொண்டு குடிசைகள் சிலவற்றைத் தாற்காலிகமாக உருவாக்கிக் கொண்டோம். நாங்கள் கடந்து வந்த பாதை ஒரே கரடு முரடாக இருந்ததால் ஆங் காங்கு அவ்வப்பொழுது நாங்கள் பாதை உண்டுபண்ணிக் கொண்டு வரவேண்டியிருந் தது; எனவே எல்லாருக்கும் சோர்வும் களைப் பும் அதிகமாக இருந்தது. சிறிது ஓய்வு எடுத் துக்கொண்டபின் எங்களுக்கு உற்சாகம் ஏற்பட்டது. அந்த இரவு நேரத்தில் இயற் கையின் தோற்றம் மிக அற்புதமானதாக இருந்தது. எங்குப் பார்த்தாலும் ஒரே மூடு பனி மூடிக்கொண்டது; குளிர் வேறு அதி கம். ஆயினும் அப்பொழுது மழை பெய் யாததால் அனைவரும் ஒருவாறு மகிழ்ச்சி யடைந்தோம். ஏனென்றால் மழையில் மிகவும் கஷ்டப்படவேண்டும். தமிழ் நாட்டின் கிராம விளக்கும், சிறிய தண்ணீர்த் தேக்கமும் இயற் கையான வனச் சூழ்நிலையில் அதியற்புதமான அழகோடு காட்சியளித்தன. அதே போன்று பசுமையான கேரளத்தின் தோற்றமும் அள விலா ஆனந்தம் தருவதாயிருந்தது. இப்பிர பஞ்சமாக வடிவெடுத்துள்ள இறைவனின் ஒரு சிறு பகுதியே இத்தகைய வனப்பு நிறைந்த தாய் இருக்கிறதென்றால் அவனுடைய முழுச்

சௌந்தர்யத்தின் மகிமை எத்தகையதாயிருக்கும்! எல்லாவற்றையும் கண்டு ரசித்த அன்பர்கள் சிலர் தங்களையறியாமலேயே உலக வியவகாரங்களை எல்லாம் ஒதுக்கி வைத்துவிட்டு அங்கேயே தங்கி விடலாமா? என்று பேசிக்கொண்டனர். அந்த ஒரு சில நிமிடங்களாவது தம் நிஜ வாழ்க்கையைப் பற்றி எண்ணிப்பார்க்கிறார்களே என்று என்னுடன் இருந்த இரு அன்பர்களிடம் நான் வியந்து கூறினேன். சிலர் சிறிது நேரம் தியானமும், பிராணாயாமமும் செய்தனர். சுற்றிலும் பல இடங்களில் நெருப்பு மூட்டிக் குளிர்காய்ந்தோம்; நன்கு ஓய்வெடுத்துக்கொண்டோம்.

மறுநாள் 2—5—84ஆம் தேதி காலையில் சிறு பூஜையை முடித்தபின் தெய்வங்களின் திவ்ய நாமங்களைக் கூறியவாறே சிலையை எங்களுடன் எடுத்துக்கொண்டு சுமார் ஆறு மணிக்கு மலையை விட்டு இறங்கத் தொடங்கினோம். ஏறும்போது இருந்ததைவிட இறங்கும்போது சிரமம் அதிகமாகத் தோன்றியது. தலைகீழாகப் பிடித்துத் தள்ளுவதுபோல் ஓர் உணர்ச்சி ஏற்பட்டது. சங்கு முத்திரை வந்து சேர்ந்ததும் சிற்றுண்டியும், சுக்குக் காபியும் அனைவரும் சாப்பிட்டோம். அரைமணி நேர ஓய்வுக்குப் பின் நாங்கள் ஏறிச்சென்றிருந்த மலைமுகட்டைப் பார்த்து அதிசயித்தோம். இதுவரை இந்த மாதிரி கஷ்டமான மலைப்பயணம் செய்யாததால் இவ்வாறு அதிசயப்பட்டுக் கொண்டோம். வடநாட்டு மலைப் பயணத்தில் இவ்வளவு மிருக பயம் ஏற்படுவதில்லை. கீழ்நோக்கி வந்தபோது முன்பிருந்த ஈ, அட்டைத் தொல்லை அதிகம் இல்லை; மழை அன்று பெய்யாததே அதற்குக் காரணம். கல்லாற்றில் குளித்துவிட்டுச் சிறிது ஓய்வெடுத்துக்கொண்டு முடிந்த அளவு வேகமாக இறங்கத் தொடங்கினோம். சில கிளை நதிகளைக் கடந்து கன்னிக்கட்டி பங்களா வந்து சேர்ந்தோம். மதிய உணவிற்குப்பின் அரைமணி நேரம் ஓய்வெடுத்துக் கொண்டு பிற்பகல் 1-45க்குப் பயணத்தைத் தொடர்ந்தோம்.

(குறிப்பு: வயதானவர்களும், தாய்மார்களும் இப்பயணத்தில் கலந்து கொள்வதைக் கூடியவரை தவிர்ப்பது நல்லது.)

கீழ்நோக்கி வரும்போது இயற்கையழகு இன்னொரு விதத்தில் வியத்தகு தோற்றமளிக்கிறது. படகு நிற்குமிடத்துக்கு 3-45 மணிக்கு வந்து சேர்ந்தோம். பலர் மிகத் தாமதமாகவே வந்தனர். படகுகளில் ஏறிக் காரையாறு வந்து சேர்ந்தோம். நானும் திரு K. S. கணேசன் என்ற அன்பரும் மற்ற அன்பர்களுடனும் திரு. கணபதி கோனார் தோட்டத்தில் உள்ள சிறு ஆச்ரமக் குடிலில் சிறிதுநேரம் நாமாவளி செய்துவிட்டுப் புறப்பட்டோம். திரு. கணபதி கோனார் நல்ல பக்திமான். மலை ஏறும் போதும் பக்தியோடு வழியனுப்பினார். வீட்டிலிருந்தவர்கள் பக்தியுடனும் அன்புடனும் எங்களுக்கு எலுமிச்சை சர்ப்பத் கொடுத்து உபசரித்தனர். அவர்களிடம் விடைபெற்றுக் கொண்டு முதல் கோஷ்டியினர் காரையாற்றிலிருந்து ஆறு மணிக்குப் புறப்படும் பஸ் மூலம் பாபநாசம் பொதிகையடிவாரம் சென்று சேர்ந்தனர். அடுத்த கோஷ்டியினர் ஒன்பது மணி பஸ் மூலம் தான் வரமுடியும். முதலில் சென்ற நாங்கள் விக்ரஹத்தைக் கீழே இறக்கித் தக்க முன்னேற்பாடுகள் செய்யப்பட்டிருந்த ஓரிடத்தில் வைத்துப் பூஜை நடத்திக் கற்பூர தீபம் காட்டியபின் பிரசாதம் பெற்றுக்கொண்டோம். மாலைச் சிற்றுண்டியை அங்கே அருந்தினோம். திரு M. S. சுந்தரம் பிள்ளை, பொதிகை அடி, பாபநாசம், நெல்லை மாவட்டம் அவர்கள் பக்திபூர்வமாக இந்த ஏற்பாடுகளையெல்லாம் செய்து வருகிறார்கள். அவரும் அவருடைய மைந்தரும் பல சிரமங்களுக்கிடையில் இச் சீரிய பணியைச் செவ்வனே செய்து வருவது பாராட்டுக்குரியது.

பின்னர் நாங்கள் பாபநாசம் கோவிலுக்குச் சென்று வழிபாடு நிகழ்த்தினோம். இப்புனிதப் பயணத்தால் பெற்றிருந்த மகிழ்ச்சியுடன் அகஸ்திய மாமுனியை வணங்கிவிட்டுத் தத்தம் ஊர்களுக்குச் செல்ல ஆயத்தமானோம். இறைவனருளால் நல்ல மழை பெய்ததால் செழிப்புற்றிருந்த வனத்தின் பேரழகும் பக்தி வெள்ளத்தால் நாங்கள்கொண்ட மகிழ்ச்சியும் சேர்ந்து எங்களையெல்லாம் பரவசப் பெருங் கடலில் மூழ்கச் செய்ததை எண்ணி மகிழ்ந்தவாறு பக்தர்களிடமிருந்து விடைபெற்றுக் கொண்டு பூரண நிறைவுடன் அவரவர் ஊர் திரும்பினோம்.

குறிப்புகள்

பாதயாத்திரை— 12

தபோவனம் ஆண்டு தோறும் நடாத்திவரும் பாத யாத்திரை இவ்வாண்டு மே மாதம் 5, 6, 7, 8, 9 தேதிகளில் ராமனுதபுரம் மாவட்டத்தில் நிகழ்ந்தது. இவ்வாண்டுப் பாத யாத்திரையில் எழுபத்தாறு பேர் கலந்து கொண்டனர்.

மே மாதம் நான்காம் தேதி இரவு பாத யாத்திரையில் கலந்துகொள்ள அனைவரும் திருச்சுழி என்னும் ஊருக்கு வந்து சேர்ந்தனர். பிரார்த்தனைக்குப் பின் இரவு சிற்றுண்டி எடுத்துக் கொண்டு அனைவரும் சத்சம்பாஷணையில் கலந்து கொண்டனர். பாதயாத்திரிகர்கள் ஒவ்வொருவரும் தங்களை அறிமுகம் செய்து கொண்டனர்.

5—5—84 காலை 4 மணிக்கு எழுந்திருந்து 5 மணிக்குள் காலைக்கடன்களையும், ஸ்நானத்தையும் முடித்துக்கொண்டு அனைவரும் ஓர் இடத்தில் அமர்ந்து ஒரு மணி நேரம் வழிபாடு செய்தனர். காலை 6-15 மணிக்கு

சிவாய நமஓம் சிவாய நம:
சிவாய நமஓம் நமசிவாய

என்ற நாமத்தைச் சொல்லிக்கொண்டு திருச்சுழியிலுள்ள T. V. N. S. வைத்திலிங்க நாடார் உயர்நிலைப்பள்ளியிலிருந்து திருமேனி நாதர் சிவாலயத்திற்குச் சென்றனர். கோவிலுக்குள் நுழைந்ததும் சிவபுராணம் ஓதிக்கொண்டு கோவில் வெளிப்பிரகாரத்தை வலம் வந்தனர். திருமேனி நாதர் சன்னிதி முன்பு அமர்ந்து அரைமணி நேரம் ஐக்கிய வழிபாடு செய்தனர். சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருமேனி நாதரைத் தரிசித்துப் பாடியருளிய தேவாரத் திருப்பதிகத்தைப் பாடித் திருமேனி நாதரை வழிபாடு செய்தனர். அதன்பின் தேவி துணைமாலை நாயகியையும் உள்ளம் உருகப்பாடி வழிபாடு செய்தனர்.

ஆலய வழிபாட்டை முடித்துக்கொண்டு ஆலயத்துக்குப் பக்கத்தில்அமைந்துள்ள ஸ்ரீரமணர் பிறந்த விட்டுக்கு "அருணசல சிவ அருணசல சிவ அருணசல சிவ அருணசலா" என்ற நாமத்தை உச்சரித்த வண்ணம் சென்ருர்கள். அவ்விடு இப்பொழுது ஸ்ரீ ரமண மந்திர் என்று அழைக்கப்படுகிறது. ஸ்ரீ ரமணமந்திர் முன் அனைவரும் நின்று ஸ்ரீ ரமணரைப் பற்றிய வழிபாட்டுப் பாடல்களை உருக்கத்துடன் பாடினர். ஒவ்வொருவராக ஸ்ரீ ரமணமந்திருக்குள் நுழைந்து ஸ்ரீ ரமணரின் திருஉருவப் படத்தைத் தரிசித்து வந்தனர்.

காலை 9-30 மணியிலிருந்து 11-30 மணிவரை திருமேனிநாதர் ஆலயத்தில் அந்தர்யோகம் நடந்தது. திருச்சுழி பாடல் பெற்ற ஸ்தல மாகும். சம்பந்தரும் சுந்தரரும் இந்தக்ஷேத்திரத்தைக் குறித்துப் பாடியுள்ளனர். மகான் ஸ்ரீ ரமணர் 1879ல் இவ்வூரில் அவதரித்தார். ஞானியின் பிறப்பிடத்தில் இவ்வாண்டுப் பாத யாத்திரை துவக்கப்பட்டது. அவ்வூரில் குண்டாறு என்ற சிற்ருறு ஓடுகிறது.

மாலை 3-30 மணிக்குத் திருச்சுழியை விட்டு

ஹரே ராம ஹரே ராம ராம ராம ஹரே ஹரே
ஹரே கிருஷ்ண ஹரே கிருஷ்ண கிருஷ்ண
கிருஷ்ண ஹரே ஹரே

என்ற நாம உச்சாரணையுடன் பாத யாத்திரை ஆரம்பித்தது. மாலை 5-30 மணிக்கு ராமலிங்க நூற்பாலையை அடைந்தனர். நிர்வாகிகள்பூர்ணகும்ப மரியாதையோடு பாதயாத்திரிகர்களை வரவேற்று விநயகர் கோவிலுக்கும் வெங்கடேஸ்வரர் கோவிலுக்கும் அழைத்துச் சென்று தரிசனம் செய்து வைத்தனர். அங்கு அமைந்திருக்கும் மக்கள் மன்றத்தில் பாதயாத்திரிகர்களும் அப்பகுதி மக்களும்சேர்ந்து பிரார்த்தனை செய்தனர். புலியூரான் நடுநிலைப்பள்ளி மாணவ மாணவிகள் திருவிளையாடற் புரானத்தில் பிட்டுக்கு மண் சுமந்த பகுதியை நாடகமாக நடித்துக் காட்டினர். நந்தனர் நாடகத்தையும் சிறப்பாக நடித்தார்கள். புனித கங்கை என்னும் திரைப்படக் காட்சியும் அங்குத் திரையிட்டுக் காட்டப்பட்டது. கங்கையை நேரில் பார்க்காதவர்களுக்கு அது ஒரு நல்ல வாய்ப்பாக இருந்தது. அன்று பாத யாத்திரிகர்கள் அங்கேயே தங்குவதற்கு நல்ல ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

6—5—84 அன்றுகாலை 5 மணிக்கு அங்கிருந்து

ஸ்ரீ நாராயண ஹரி நாராயண
ஸ்ரீ ஹரி நாராயண நாராயண

என்றநாம உச்சாரணையுடன் இரண்டாம்நாள்

பாத யாத்திரை தொடர்ந்தது. ஒற்றையடிப் பாதையில் அதிகாலையில் ஏரிக்கரையின் மீது ஒருவர் பின் ஒருவராக நாமத்தை உச்சரித்துக் கொண்டு நடந்தது பார்ப்பதற்கு ஓர் அரிய காட்சியாக இருந்தது. புலியூரான் ஊர் வரையி லும் காட்டுப் பாதையிலேயே சென்றனர். காலை சுமார் 7 மணிக்குப் புலியூரான் அல்லது சித்தர் கோயிலை அடைந்தனர். ஒருகாலத்தில் பாம்பாட்டிச் சித்தர் என்னும் மகான் ஆங்கு வாழ்ந்து வந்தார். அவருடைய சமாதியே ஆலயமாக இன்றைக்குத் திகழ்ந்து வருகிறது. பாத யாத்திரிகர்கள் அனைவரையும் அவ்வூர் மக்கள் வரவேற்றுச் சித்தர் கோயில் பெம் மானைத் தரிசனம் செய்து வைத்தனர். மகான் சமாதி அடைந்த இடமாகையால் இங்கு அருள் சக்தி உண்டு என்றும் அவ்வருள் சக்தியை மேலும் வளர்ப்பதில் அவ்வூர் மக்கள் மேலும் முறையாக வழிபாடு செய்து வரவேண்டு மென்றும் அவ்வூர் மக்களுக்கு அறிவுரை வழங் கப்பட்டது. பாதயாத்திரிகர்கள் அனைவர்க்கும் அவ்வூர் மக்கள் துண்டும், குங்குமச் சிமிழும் வழங்கித் தங்கள் அன்பை வெளிப்படுத்தினர். அவ்வூரில் அமைந்துள்ள செல்லியம்மன் கோவி லுக்குப் பாதயாத்திரிகர்களை அழைத்துச் சென்று தரிசனம் செய்துவைத்தனர். சிற்றுண் டிக்குப் பிறகு அவ்வூர்ப் பள்ளியில் விவேகானந் தர் படத்திறப்பு விழாவும் நிகழ்ந்தது. பொருட் செல்வம், கல்விச் செல்வம், அருட் செல்வம் ஆகிய மூன்றையும் ஒருங்கே வளர்த்து வாழ்க் கையை மேன்மைப்படுத்திக்கொள்ள வேண்டு மென்று அவ்வூர் மக்களுக்கு ஆசி வழங்கப் பட்டது. காலை 8-15 மணிக்கு அங்கிருந்து புறப்பட்டு நாம உச்சாரணையுடன் பாளையம் பட்டி நோக்கி நடந்தனர். இடையில் தொட்டி யான் குளம் என்ற ஊரில் பாதயாத்திரிகர்கள் ஓய்வு எடுத்துக் கொண்டனர். அவ்வூர் மக்கள் நீர்மோர் தந்து பாதயாத்திரிகர்களை உபசரித்த னர். ஆங்கிருந்து புறப்பட்டுப் பகல் 11மணிக் குப் பாளையம்பட்டியை அடைந்தனர். பாளை யம் பட்டி ஊரை அடைவதற்கு முன் மதுரை அருள் துணை மாதர் சங்கத்தைச் சேர்ந்த தாய் மார்கள் ஏரிக்கரையில் காத்திருந்து பாதயாத் திரிகர்களை வரவேற்றனர். பாதயாத்திரிகர் களுக்கு வணக்கம் செலுத்திப் பாதயாத்திரிகர் களை வலம் வந்து பாதயாத்திரிகர்கள் அடைந்த புனிதத்தை அவர்களும் பெற்றனர். முருகன் கோவிலுக்கு முன் பாதயாத்திரிகர்கள் வர வேற்கப்பட்டு முருகன் தரிசனம் செய்து வைக்கப்பட்டனர். நீர் மோரும், வெப்பத் தைத் தணிப்பதற்கு விசிறியும் ஒவ்வொரு பாதயாத்திரிகர்களுக்கும் தரப்பட்டன. இவ் வரவேற்பு பாதயாத்திரிகர்களுக்குப் பெரு மகிழ்ச்சியை அளித்தது. சிவபெருமான் தம் முடைய மனதின் வேகத்தைக் கெடுத்து ஆட் கொண்டான் என்று மணிவாசகப் பெருமான் பாடுகின்றார். வெயிலின் வேகத்தைத் தடுத்து விச்ராந்தியைத் தந்தார்கள் என்று பாதயாத் திரிகர்கள் மனதுக்குள் அம்மக்களை வாழ்த்திக் கொண்டார்கள். அரைமணி நேரம் ஓய்விற் குப் பின் இரண்டு அன்பர்கள் வீட்டுக்குச் சென்று வழிபாடு செய்துவிட்டுப் பாலசுப்ர மண்யர் பிரதம வித்யாசாலா நடுநிலைப்பள்ளி யில் அறுபது தாய்மார்களுக்கும், அறுபது ஆண்களுக்கும் புடவையும் வேஷ்டியும் துண் டும் வழங்கப்பட்டன. சுமார் ஐந்நூறு பேருக்கு அன்றைக்கு உணவும் வழங்கப்பட்டது. உணவு வழங்கும் பொறுப்பை ஓர் அம்மையார் பக்தி யுடன் ஏற்றுக்கொண்டார். உடைக்காக ஆண்டுதோறும் அன்பளிப்புச் செய்கின்ற அன் பர் அவர் பங்காக ஆயிரம் ரூபாயும், மற்றோர் அன்பர் ஐந்நூறு ரூபாயும் வழங்கினார்கள். பாதயாத்திரிகர்கள் தலைக்கு ரூபாய் இருபத் தைந்து தந்தனர். அது உடைக்கும், பத்தொன் பது வீடுகளுக்கு முருகன் படங்கள் வழங்குவதற் கும் பயன்படுத்தப்பட்டது. உணவும், உடை யும் வழங்கப்படுவதன் மூலம் சுவாமி விவேகா னந்தர் கூறிய அன்னதான கைங்கரியம் பாத யாத்திரையில் நிறைவேற்றப்படுகிறது. புத்த கங்கள் வழங்குவதன் மூலம் சுவாமி விவேகா னந்தர் கூறிய அறிவு தானம் பாதயாத்திரை யில் நிறைவேற்றப்படுகிறது. வழிபாடும் நாம ஜபமும் பஜனையும், அருளுரையும் மக்களுக் கிடையே செய்வதன் மூலம் சுவாமி விவேகா னந்தர் கூறிய அருள்தானம் மக்களுக்கிடையே நிறைவேற்றப்படுகிறது. அன்று உணவு எடுத் துக்கொண்ட மக்களை நாமாவளி சொல்ல வைத்து அமைதியாக உணவு உண்ணச் செய்து ஒழுங்காக எழுந்து போகும்படி செய்து

வாழ்க்கையிலே ஒழுங்குப்பாடு எத்தகையது என்பது அவர்களுக்குப் புகட்டப்பட்டது.

மாலை 4-15 மணிக்கு அங்கிருந்து நாம பஜனையுடன் பாதயாத்திரையைத் தொடர்ந்தனர். முத்தாலம்மன் கோவிலில் அரைமணி நேரம் ஐக்கிய வழிபாடு செய்த பின் பாளையம்பட்டி அன்பர்களிடமும் தாய்மார்களிடமும் விடைபெற்றுக்கொண்டு பாத யாத்திரையை மேலும் தொடர்ந்தனர். மாலை 6-30 மணிக்கு அருப்புக்கோட்டை அமிர்தலிங்கேசுவரர் ஆலயத்தில் பூர்ணகும்பத்துடன் பாதயாத்திரிகர்களை வரவேற்று அவர்களுக்குச் சுவாமி தரிசனம் செய்து வைத்தனர். ஆலய தரிசனத்துக்குப் பின் அங்குக் கூடியிருந்த மக்களுக்கு அறிவுரை வழங்கப்பட்டது. வழிபாட்டில் சடங்குகள் பெருகிப் பக்தி பின்னணிக்குப் போய் விடக் கூடாது. உள்ளத்தைப் பண்படுத்தும் வழிபாடே பக்தியை வளர்க்கும். வழிபாட்டில் உள்ளம் ஈடுபட்டு அமைதியே வடிவெடுத்தவர்களாக இருந்து ஆலய வழிபாடு செய்யும் பொழுதுதான் ஆலயத்தில் அருட்சக்தி ஓங்கும். வழிபாடு செய்பவர்களுக்கும் பக்தி ஓங்கும். அறிவுரையில் இக்கருத்துக்கள் விளக்கப்பட்டன. அருப்புக்கோட்டையில் அமைந்துள்ள அமிர்தவல்லி ஆலயத்துக்குச் சென்று ஆங்கும் வழிபாடு செய்தனர். அமிர்தலிங்கேஸ்வரர் ஆலயத்தில் ஓம் நம சிவாய பாடலைப் பரத நாட்டியத்தில் அமைத்துச் சிறுமி ஆடிக்காட்டியது கவர்ச்சிகரமாக இருந்தது.

7—5—84 அன்று காலை 5 மணியிலிருந்து 6 மணி வரையிலும் பாதயாத்திரிகர்கள் தினசரி பிரார்த்தனையைச் செய்து முடித்தனர். காலை 6 மணிக்கு ராமலிங்க சௌடாம்பிகை அம்மன் கோவிலுக்குச் சென்று சுவாமி தரிசனம் செய்தபின் ஐயப்பன் சந்நிதியின் முன் அமர்ந்து பாதயாத்திரிகர்களும் அவ்வூர் மக்களும் ஐக்கிய வழிபாடு செய்தனர்.

காலை 9-30 மணிக்கு ஸ்ரீ ராமகிருஷ்ணர், ஸ்ரீ சாரதா தேவியார், ஸ்ரீ விவேகானந்தர் ஆகிய மூவரின் திருவுருவப்படங்களை அலங்கரித்து வண்டியில் வைத்து ஊர்வலம் தொடங்கியது. ஊர்வலத்தில் கிளாரினட் குழுவினரும் தேவாரம் பாடும் குழுவினரும் பஜனை செய்யும் தாய்மார்களும் பாதயாத்திரை அன்பர்களும் பங்குகொண்டனர். ஊர்வலத்தின் இடை இடையே ஸ்ரீ விவேகானந்தருடைய கருத்துக்கள் பொதுமக்களுக்கு வாசிக்கப்பட்டன. மதியம் 12 மணி அளவில் ஊர்வலம் பட்டாபிராமர் கோவிலை அடைந்தது. அத்துடன் ஊர்வல நிகழ்ச்சி முடிந்தது. மாலை 4 மணிக்கு

சிவாய நமஓம் சிவாய நம:
சிவாய நமஓம் நமசிவாய

என்ற நாம உச்சாரணையுடன் பாதயாத்திரிகர்கள் அருப்புக்கோட்டையிலிருந்து நடக்க ஆரம்பித்தனர். அருப்புக்கோட்டை நகர எல்லையில் அமைந்துள்ள நகர சுத்தித் தொழிலாளர்களின் சேரியைப் பாதயாத்திரிகர்கள் அடைந்தனர். ஆங்குள்ள மக்களைக் கூட்டி வைத்து முருகன் மீது நாமாவளியும் பாடல்களும் அவர்களுக்குச் சொல்லித்தரப்பட்டன. சிறுவர்களும் சிறுமிகளும் உற்சாகத்துடன் அதில் பங்குகொண்டு அவர்களுக்குக் கற்பிக்கப்பட்ட பாடல்களையும் நாமாவளியையும் தெளிவாகக் கற்றுக்கொண்டனர். சுமார் அரை மணி நேரம் பஜனை நிகழ்ச்சியில் அச்சேரி மக்கள் ஈடுபடுபட்டனர். அச்சேரி மக்களோடு பாதயாத்திரிகர்களும் சேர்ந்து மாலைச் சிற்றுண்டியைத் திறந்த வெளியில் எடுத்துக் கொண்ட நிகழ்ச்சி யாவருக்கும் மகிழ்வூட்டியது. அச்சேரியில் பத்தொன்பது வீடுகள் உள்ளன. ஒவ்வொரு வீட்டுக்கும் அழகான முருகன் படம் ஒன்று வழங்கப்பட்டது. தினசரி முருகன் படத்துக்கு வழிபாடு செய்யும் முறையும் அவர்களுக்குக் கற்பிக்கப்பட்டது. பாதயாத்திரையில் இது சிறப்பான நிகழ்ச்சியாக அமைந்திருந்தது.

மாலை 5-30 மணிக்கு அங்கிருந்து நாமாவளியுடன் பாதயாத்திரிகர்கள் நடந்தனர். சுக்கில நத்தம் என்னும் கிராம எல்லையில் பக்தியுடன் அக்கிராம மக்கள் பூர்ண கும்பம்கொண்டு பாதயாத்திரிகர்களை மகிழ்வுடன் வரவேற்றனர். அவ்வூர் எல்லைத் தெய்வத்துக்குப் பாதயாத்திரிகர்களும் அக்கிராம மக்களும் அபிஷேக ஆராதனை செய்தனர். அங்கிருந்து அவ்வூரை அடைவதற்குள் அவ்வூர் மக்கள் அனைவரும் கூடிப் பாதயாத்திரிகர்களை வரவேற்றது அன்புக்கு எத்தகைய சக்தியுள்ளது என்பதை விளக்குவதாக இருந்தது. பாதயாத்திரிகர்கள்

அனைவருக்கும் பானகம் தந்து உபசரித்தனர். பத்து நிமிடம் அவர்களுக்கு அருளுரை வழங்கப்பட்டது. ஊக்கத்துடனும் உற்சாகத்துடனும் அவர்கள் அவ்வருளுரையைக் கேட்டனர். அவ்வூர் மக்களிடம் பண்பாடும் பணிவும் நிறைந்திருந்ததைப் பார்த்துப் பாதயாத்திரிகர்கள் பரமானந்தம் அடைந்தனர். பாதயாத்திரிகர்கள் அவ்வூர் எல்லையைக் கடக்கும்வரையில் அவ்வூரிலுள்ள முக்கியஸ்தர்களும் சிறுமிகள் சிலரும் பாதயாத்திரிகர்களுடன் நாம ஜபம் சொல்லிக்கொண்டு வந்தனர். பாதயாத்திரிகர்கள் அவ்வூர் மக்களிடமிருந்து விடைபெறும் பொழுது உடன் வந்த சிறுமி, "எனக்கு ஓர் ஆசை உள்ளது. அவ்வாசையை நீங்கள் நிறைவேற்றி வைப்பீர்களா?" என்று பாத யாத்திரிகர்களைக் கேட்டாள். "உன்னுடைய ஆசை என்ன?" என்று கேட்டபொழுது "எனக்குக் கீதை படிக்கவேண்டும் என்ற ஆசை உள்ளது. அவ்வாசையை நிறைவேற்றிக்கொள்ளக் கீதைப் புத்தகம் ஒன்று வேண்டும்" என்றாள். கீதை படிப்பதில் ஆசை உள்ள சிறுமியும் இக்காலத்தில் இருக்கின்றாளா! என்று பாதயாத்திரிகர்கள் பெருவியப்படைந்தனர். இத்தகைய நல்லவர்கள் இருப்பதால் தான் உலகம் நிலைத்திருக்கிறது என்ற உண்மை தெளிவாகியது. நல்லாரைக் காண்பதும் நன்றே; நல்லார் சொல் கேட்பதும் நன்றே; நல்லார் உடன் இருப்பதும் நன்றே என்ற ஆப்தமொழிக்கு அன்று அனுபவ வாயிலாக விளக்கம் கிடைத்தது. அச்சிறுமியின் நல்லாசை உடனே நிறைவேற்றி வைக்கப்பட்டது. இந்நிகழ்ச்சி பாதயாத்திரையில் மிகச் சிறப்பானது ஒன்றாகும்.

அவ்வூர் மக்களிடம் பிரியா விடைபெற்றுக் கொண்டு பாதயாத்திரிகர்கள் நாமாவளியுடன் நடந்து இரவு 7-30 மணிக்கு வெள்ளையாபுரத்தை அடைந்தனர். அவ்வூர் மக்கள் பாத யாத்திரிகர்களை வரவேற்றுக் காளியம்மன் தரிசனமும் நரசிம்ம மூர்த்தியின் தரிசனமும் செய்து வைத்தனர். அன்றிரவு பாதயாத்திரிகர்கள் அவ்வூர் அரசினர் உயர்நிலைப்பள்ளியில் தங்கினர். அன்றிரவு அவ்வூர் மக்களுக்குப் புனித கங்கை திரைப்படம் காட்டப்பட்டது. அன்று பக்கத்து ஊர்களில் உள்ள மக்களெல்லாரும் சேர்ந்து சுமார் ஆயிரம் பேர் கூடினர் புனித கங்கையையும், பத்ரி, கேதார், காசி ஆகிய புனித இடங்களையும் திரைப் படத்தில் காணும் வாய்ப்பு அவர்களுக்குக் கிட்டியது.

8—5—84 காலை 4-15 மணிக்கு,

ஓம்சக்தி ஓம்சக்தி ஓம்சக்தி ஓம்
ஆதிசக்தி மஹாசக்தி பராசக்தி ஓம்

என்ற நாம உச்சாரணையுடன் பாத யாத்திரையை அன்பர்கள் தொடங்கினார்கள். பாதை மிகவும் கல் நிறைந்ததாக அமைந்திருந்தது. சபரிமலை யாத்திரையில் செல்லும் பக்தர்கள் கல்லும் முள்ளும் காலுக்கு மெத்தை என்று கூறிக்கொண்டு கல்லையும், முள்ளையும் பொருட்படுத்தாது ஐயப்ப சிந்தனையில் மூழ்கிச் செல்வார்கள். பாதயாத்திரிகர்களும் பாதையிலிருந்த கல்லைப் பொருட்படுத்தாது கஷ்டத்தைக் கடவுள் சிந்தனையின் மூலம் கஷ்டமாகப் பாராட்டாத மனநிலையைப்பெறுவதற்கு அன்று பயிற்சி பெற்றனர். கல் நிறைந்த பாதையில் நான்கு கிலோ மீட்டர் நடந்து மலைப்பட்டி கிராமத்தை அடைந்தனர். அவ்வூர் மக்கள் பாத யாத்திரிகர்களை வரவேற்றுக் கிருஷ்ணன் ஆலயத்துக்கு அழைத்துச் சென்று சுவாமி தரிசனம் செய்து வைத்தனர். ஆங்குக் கிராம மக்களும் பாதயாத்திரிகர்களும் ஒரு கூட்டுவழிபாடு செய்தனர். ஒற்றுமையும் தூய்மையும் பக்தியும் கூடிய யோகவாழ்வு வாழவேண்டுமென்று அவ்வூர் மக்களுக்கு அருளுரை வழங்கப்பட்டது.

சிற்றுண்டிக்குப் பின் மலைப்பட்டியிலிருந்து புறப்பட்டுக் காலை 9 மணிக்கு மெட்டுக்குண்டு என்னும் கிராமத்தை அடைந்தனர். அவ்வூர் மக்கள் விநயகர் கோவிலில் பாதயாத்திரிகர்களை வரவேற்று நீர்மோர் தந்தனர். அரைமணி நேரம் பாதயாத்திரிகர்களும் அவ்வூர் மக்களும் சேர்ந்து ஐக்கிய வழிபாடு செய்தனர். அங்கிருந்து 9-45 மணிக்குப் புறப்பட்டு நாமாவளியுடன் நடந்து காலை 10-45 மணிக்குக் குள்ளூர் சந்தையை அடைந்தனர். அவ்வூர் மக்கள் பூர்ண கும்பத்துடன் வரவேற்று ஆலய வழிபாடு செய்து வைத்தனர். பிறகு அங்குள்ள கிராம மக்களுக்குப் புலனடக்கம், சேவை, தியாகம் என்பதை விளக்கி அருளுரை வழங்கப்பட்டது.

உணவு ஓய்வுக்குப் பின் மாலை 4-15 மணிக்குக் குள்ளூர் சந்தையை விட்டுப் புறப்பட்டு

மாலை 5-30 மணிக்கு அல்லம்பட்டியை அடைந் தனர். அங்கு ஆலய வழிபாடு நிகழ்த்திய பின் அவ்வூர் கல்யாண மண்டபத்தில் அவ்வூர் மக்கள் பிஸ்கட்டும் பாலும் தந்தனர். அவ்வூர் மக்களுக்கும் அருளுரை வழங்கப்பட்டது. அங்கிருந்து புறப்பட்டு மாலை 6-30 மணிக்கு விருதுநகரைப் பாதயாத்திரிகர்கள் அடைந் தனர். அவ்வூர் காளியம்மன் கோவில் முன் தாய்மார்கள் பூர்ணகும்ப மரியாதையுடன் பாத யாத்திரிகர்களை வரவேற்று வழிபாடு செய்து வைத்தனர். விருதுநகர் மக்கள் பாதயாத்திரி கர்களை யானையுடன் வந்து வரவேற்று காமராஜ் கல்யாண மண்டபத்துக்கு அழைத் துச் சென்றனர். சக்தி சங்கக் குழந்தைகள் பூஜை செய்து பாதயாத்திரிகர்களை வரவேற் றுத் தங்குமிடத்துக்கு அழைத்துச் சென்றனர்.

அன்றிரவு சக்தி சங்கக் குழந்தைகள் பீஷ் மர் நாடகத்தில் சில காட்சிகளையும், சகோதரி நிவேதிதை வாழ்க்கைச் சரிதத்தையும் சிறப் பாக நடித்துக் காட்டினார்கள். புனித கங்கை படமும் மதுரை கோயிலும் திரையிட்டுக் காட் டப்பட்டன.

9—5—84 அன்று காலை 5 மணி முதல் 7-30 மணி வரை பிரார்த்தனையும் ஆலய வழிபாடும் செய்தனர். 9-15 மணி முதல் 11 மணி வரை நாமஜபம், தியானம், உபந்நியாசம் முதலிய நிகழ்ச்சிகள்நிகழ்ந்தன. 11 மணிக்கு மேல் பாத யாத்திரிகர்கள் தங்கள் அனுபவங்களையெல் லாம் எடுத்துக் கூறினர். பாதயாத்திரையின் போதுஒர் ஊருக்குப்போகும்பொழுது அவ்வூர் மக்கள் ஊர் எல்லையிலிருந்து பாதயாத்திரிகர் களை வரவேற்றுப் பாத யாத்திரிகர்களோடு சேர்ந்து அவர்களும் நாமஜபம் சொல்லவேண் டும். ஊர்ப் பொது இடத்துக்குச் சென்றதும் அங்கு அனைவரும் அமர்ந்து பஜனை செய்ய வேண்டும். பிறகு அவர்களுக்கு அறவுரை வழங்கவேண்டும். இதை அடுத்த ஆண்டுப் பாதயாத்திரையின் போது அமலுக்குக் கொண்டுவர வேண்டும் எனத் தீர்மானிக்கப் பட்டது. அடுத்த ஆண்டுப் பாதயாத்திரை செங்கல்பட்டு மாவட்டத்தில் வைத்துக்கொள் ளலாம் என்ற கருத்துத் தெரிவிக்கப்பட்டது.

இவ்வாண்டுப் பாதயாத்திரையில் உணவுக் கும் தங்குவதற்கும் ஆங்காங்கு நல்ல முறை யில் ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. உடை வழங்கும் திட்டமும், ஞானயக்ஞமும் இவ் வாண்டுப் பாதயாத்திரையில் மிகச் சிறப்பாக நிகழ்ந்தன. சிறந்த கருத்துக்கள் பொருள் வசதி அற்றவர்களுக்கும் போய்ச் சேரவேண் டும் என்ற நோக்கத்தோடு தத்துவக் கருத்துக் கள் அடங்கிய தபோவன வெளியீடுகள் பாதி விலைக்குத் தரப்பட்டன. விளம்பரமில் லாது தியாக மனப்பான்மையோடு பாதயாத் திரையில் திரவியயக்ஞம் செய்து சிலர் பண் பாடு அடைந்து வருகின்றனர்.

இவ்வாண்டுப் பாத யாத்திரையின்பொழுது பாதயாத்திரை அன்பர் ஒருவர் தோட்டம் துரவில் வேலைசெய்தவர்களையும் ஆடுமாடு மேய்த்தவர்களையும் 'முருகா முருகா' என்று கூவி அழைத்து நெற்றியில் விபூதி அணிவித்து அவர்களையும் 'முருகா முருகா' என்று கூறும் படி செய்தார். இந்நிகழ்ச்சி பாராட்டத்தக்க தாகவிருந்தது.

துயரத்தைப் போக்கி இன்பத்தை நல்குவ தில் இறைவனுடைய நாமத்துக்கு நிகரானது வேறொன்றுமில்லை. நான்கு நாட்கள் பாதயாத் திரிகர்கள் இறைவனுடைய நாம உச்சாரணை யில் ஈடுபட்டிருந்தனர். பாபத்தைப் போக்கு வதற்கும், சேவை மனப்பான்மையை வளர்ப்ப தற்கும், துன்பத்தை ஏற்றுப் பழகுவதற்கும் பாதயாத்திரை மிகவும் பயன்படுகிறது. ஊக் கத்துடனும் உற்சாகத்துடனும் மகிழ்ச்சியுட னும் ஆண்டுதோறும் பாதயாத்திரையை மேற் கொண்டு உடலையும் உள்ளத்தையும் உறுதிப் படுத்திக்கொண்டு அன்பர்கள் வாழ்க்கையில் மேன்மை அடைவார்களாக.

செய்திகள்

நிகழ்பவை

1-7-84 ஞாயிறன்று ராமநாதபுரம் ஜில்லா, ஆவுடையாபுரம்,மாரியம்மன் கோவில் கும்பாபி ஷேக விழாவில் கலந்துகொண்டு ஸ்ரீமத் நித்தியா னந்தசுவாமிகள் அருளுரை ஆற்றுவார்கள்.

குற்றாலம் ஐந்தருவி ஸ்ரீராமகிருஷ்ண ஆச்ர மத்தில் பருவ அந்தர்யோகம் ஜூன் 15ஆம் தேதி துவங்கியுள்ளது.

ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர் அவர்கள்
இயற்றிய நூல்கள்

திருவாசகம்	பிரசார விலை ரு.	23-00
ஸ்ரீமத் பகவத்கீதை 15-ம் பதிப்பு	,, ...	21-00
மஹாபாரதம்	,, ...	8-00
இராமாயணம்	,, ...	5-00
ஸ்ரீ தாயுமானசுவாமி பாடல்கள்	,, ...	6-00
ஸ்ரீராமகிருஷ்ணர் உபதேச மஞ்ஜரீ	,, ...	6-50
தினசரி தியானம்	,, ...	4-50
ராஜயோக விளக்கம்	...	12-00
கர்மயோக விளக்கம்	...	10-00
பக்தியோக விளக்கம்	...	9-00
ஞானயோக விளக்கம்	..	8-00
பரமஹம்சரின் பெருமை	...	6-00
ஸ்ரீ விவேகானந்தர் ஜீவிதம்	...	6-00
கடவுளின் வடிவங்கள்	...	6-00
சந்தேகம் தெளிதல் பாகம்—1	...	5-50
சந்தேகம் தெளிதல் பாகம்—2	...	5-50
விவேகானந்த விவரணம்	...	4-00
சகோதரி நிவேதிதை	...	3-75
ஸ்ரீ ராமகிருஷ்ண சரிதம்	...	3-50
ஸ்ரீ சாரதாதேவியார் சரிதம்	...	3-00
அனுஷ்டான வேதாந்தம்	...	3-00
எதிர்கால இந்தியா	...	3-00
திருக்கயிலாயகிரி யாத்திரை	...	3-00
பஜனைப்பாடல்கள்	...	3-00
தேவரகசியம் (முதலிய கதைகள்)	...	2-50
தாயுமானவர் இயற்றிய		
கருணாகரக் கடவுள்	விரிவுரை ...	3-50
பரிபூரணானந்தம்	ஷை ...	3-00
சின்மயானந்த குரு	ஷை ...	3-00
ஆனந்தமானபரம்	ஷை ...	3-00
சுகவாரி	ஷை ...	3-00
மௌனகுரு வணக்கம்	ஷை ...	3-00
எங்கும் நிறைகின்றபொருள்	ஷை ...	2-50
மலைவளர் காதலி	ஷை ...	1-50
பரசிவ வணக்கம்	ஷை ...	1-00
கண்ணன் என்னும் கடவுள்	...	2-50
அறம் வளர்த்த நம்பி	...	2-50
விரதவீரர் பீஷ்மர்	ஷை ...	2-50
சந்நியாசி	...	2-50
ஹரிச்சந்திரன்	(நாடகம்) ...	2-00
தவப்புதல்வர்கள்	ஷை ...	2-00
பாதுகாபட்டாபிஷேகம்	ஷை ...	1-75
விபீஷணன் சரணாகதி	ஷை ...	1-50
பரமஹம்சர் பாமாலை	...	1-50
காயத்ரீ	...	1-50
நன்மக்களைப் பெறுதல்	...	1-50
மாணாக்கன்	...	1-25
செத்தவர்கள் நம்மோடு பேசுகிறார்களா?	...	1-25
சைவன் யார்?	..,	1-25
*ஆலய வழிபாடு	...	1-25
*ஆத்ம சக்தி	...	1-25
*மனிதனது நிஜசொரூபம்	...	1-25

இறைவணக்கம்	...	1-00
சுமங்கைகளின் கவிக்கூடம்	..	1-00
இராவண தத்துவம்	...	1-00
வாலி மோட்சம் (நாடகம்)	...	1-00
ஏகலைவ்யனின் குருபக்தி (நாடகம்)	...	1-00
தானவீரன் கர்ணன் (நாடகம்)	...	1-00
மார்க்கண்டேயன் (நாடகம்)	...	1-00
பிரஹ்லாதன் (நாடகம்)	...	1-00
தபோபலன் (நாடகம்)	...	1-00
பார்வதி,லக்ஷ்மி,சரஸ்வதி கர்வபங்கம்	...	1-00
இந்துமதமும் கிறிஸ்துவமதமும்	...	1-00
நோய்க்கு இடம் கொடேல்	...	1-00
*சக்தி தத்துவம்	...	0-90
*சூரியநாராயணன்	...	0-75
தெய்வீக மகிமைகள்	...	0-75
*முருகக்கடவுள்	...	0-75
தாயுமானவர் ஆலயத்தில் தத்துவ அமைப்பு	...	0-60
நன்னெறிகளும் அருள்வாக்குகளும்	...	0-60
*கணபதி	...	0-60
விஷ்ணு தத்துவம்	...	0-50
கர்மகாண்டம் எது? ஞானகாண்டம் எது?		0-50
அருள் விருந்து (பௌண்ட் செட்)	...	10-00
அருள் விருந்து 1 to 25 ஒவ்வொன்றும்	...	0-30
விவேகானந்தரின் வீர கர்ஜனை	...	0-30
கந்தர் அநுபூதி	...	0 25
The Bhagavad Gita (11th Imp.)	...	24-00
Sri Lalithambiha Sahasranama Stotram		15-00
The Indian National Education	...	10-00
Tirukkural (with plastic cover)	...	8-00
Ramakrishna lives Vedanda	...	8-00
Mahaveer Sri Hanuman	...	7-75
The Bhagavad Gita (Small Size)	...	6-00
Man Making Message	...	7-00
Ramayana (with plastic cover)	...	7-00
Mahabharata ,,	...	6-00
Daily Divine Digest (DELUXE)	...	6-00
Daily Divine Digest (Ordinary)	...	4-00
Sri Krishna-The Manifest Divinity ,,	...	6-00
Facets of Brahman or The Hindu Gods	...	5-00
Sri Vishnu Sahasranama Stotram	...	4-00
Siva Sahasranama Stotram	...	3-50
Bheeshma The Superman	...	3-50
*Introducing the Gita	...	2-00
Holy Bible—In the Light of Vedanta	...	1-50
Reminiscences of Master Mahashaya	...	1-50
The Garland of Paraaparam	...	1-50
*Key to Higher Life	...	1-25
*The Student	...	1-25
The Teacher	...	1-00
The School	...	1-00
The Nursery School	...	1-00
Tat Tvam Asi	...	1-00

Edited by SWAMI NITHYANANDA,

Printed & Published by Swami Sankarananda at Tapovanam Printing School, Tirupparaitturai, Tiruchi Dt